இது ஒரு ★★★★★ இதழ்

குடும்ப நாவல்

ஆகஸ்ட் - 16 2011 ரூ 12

சிவசங்கரி

காற்றுள்ள போதே...

(1)

இரும்பு கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே நுழையுமுன், ஒரு நொடி நிதானித்த லோகநாதன், மரங்களுடே தெரிந்த வீட்டை நன்றாகப் பார்த்தார்.

பழைய வீடு.

ரொம்பப் பெரிசும் இல்லாத, சின்னதும் இல்லாத நடுத்தர வீடு.

எனறைக்கோ அடித்த சுண்ணாம்பு உதிர்ந்து ஆங்காங்கு திட்டுத்திட்டாய்த் தெரிய, செங்கல்லின் நிறம் சொறி மாதிரி இருந்தது.

கேட்டிலிருந்து பார்க்கையில், வாசல் வராந்தா பளிச்சென்று தெரிந்தது.

அந்தக் காலத்துப் பாணியில் மேலே வளைக்கப்பட்டுத் தூண்களோடு கீழே இறங்கின முகப்பு; இரண்டு பக்கமும் சிவப்பு சிமெண்ட் பூசி வழவழவென்று பளபளத்த திண்ணைகள். லோகநாதன் கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார்.

அடர்த்தியாய் இரண்டு பக்கமும், உயரமும் பருமனுமாய் நின்றிருந்த மரங்கள், முற்பகல் வெயிலை வடிகட்டித் தரைக்கு அனுப்பின.

கேட்டைத் தாண்டியவுடன், துவாரபாலகர்கள் மாதிரி இந்த பக்கம் வேப்பமரம்; அந்தப் பக்கம் மகிழமரம்.

சற்று உள்ளடங்கி, வீட்டுக்குப் பக்கமாய் மா, கொய்யா மரங்கள்.

பின்னால் வரிசையாய் நின்ற தென்னை மரங்கள், வீட்டின் உயரத்தையும் மிஞ்சிக் கொண்டு, மொட்டைமாடியின் விளிம்புக்கு மேலே தலைவிரித்து ஆடின.

வாசலுக்கு நேராக இருந்த இடத்தில் செல்வரளி, செம்பருத்தி செடிகள், அந்தப்பக்கமாய் நித்தியமல்லிக் கொடிகள், அதன் காலடியில் கனகாம்பரம், ரோஜாச் செடிகள்.

இந்த வீட்டினர் யாருக்கோ தோட்டத்தில் அதிக ஈடுபாடு இருக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டு நடக்கையில், தக்குலூண்டுக் காலி ஒன்று டாச் டாச் என்று கத்தியபடி விரிந்து மலர்ந்திருந்த செம்பருத்திப் பூவின் அடிக்காம்பில் வந்து அமர, இதன் கனம் தாங்காத தினுசில் பூ நாலு தரம் மேலும் கீழுமாய் அசைந்தது.

நடப்பதை நிறுத்திவிட்டு லோகநாதன் உன்னிப்பாய் பறவையைக் கவனித்தார்.

மஞ்சள் தேய்த்துக் குளித்த மாதிரி மின்னிய உடம்பு; பட்டையாய் ஸ்கார்ஃப் சுற்றின மாதிரியில் சுழுத்தில் சுறுப்புக் கோடு.

என்ன பறவை இது?

செம்பருத்திப் பூவில் அமர வேண்டுமென்றால், எத்தனை லேசாக இது இருக்க வேண்டும்?

அவரின் வியப்பை உணராத குருவி பெருங்குரலில் டாச் டாச் என்று மறுபடி கத்தியது. தன் கூரிய அலகால் பூவின் அடிப்பாகத்தை ஓட்டையிட்டு தேனைக் குடித்தது. அரை நிமிஷத்தில் பரபரவென்று பறந்துபோன்து.

லோகநாதன் மெதுவாக நடந்து படிகளில் ஏறி வராந்தாவில் நின்றார்.

அழைப்பு மணி இருக்கிறதா என்று தேடினார். அது இல்லாமல்போக, கம்பிக் கதவைத் தட்டி 'சார்' என்று கூப்பிட வாயெடுத்தபோது, உள்ளேயிருந்து பெருங்குரல் ஒன்று ஒலித்தது.

'சிவகாமி, ஏய் சிவகாமி, நாலு தரம் கூப்பிட்டாச்சு, இன்னுமா காது கேக்கலை? செவிடாவிட்டியா? ஏய், சிவகாமி!'

'வந்திட்டேம்ப்பா... கொல்லைல மாடுங்களுக்குத் தீனி வெச்சிட்டிருந்தேன்...'

'தண்ணி காட்டிகிட்டிருந்தா என்ன? வந்திட்டேன்னு ஒரு குரல் குடுக்கறதுகூடவா கஷ்டம்? ம்? எதிர்வீட்டம்மா பால் பணம் குடுத்தாங்களா, இல்லியா? மாடுங்களுக்குத் தீவனம் எடுக்கணும், பணம் வேணும்னு கறாராக் கேட்டுடுன்னு சொன்னேனில்லே?'

'கேட்டேம்ப்பா... அவங்க பிள்ளைகிட்டயிருந்து பணம் இன்னும் வரலியாம்... 'மணியார்டரை எந்த நிமிஷமும் எதிர்பார்த்துகிட்டிருக்கோம். வந்ததும் குடுத்துடறோம்'னு சொன்னாங்க.'

'கிழிச்சாங்க! மாசாமாசம் இதே பேஜாரு. இவங்ககூட! சாயங்காலத்துக்குள்ள பணத்தை எண்ணி வெக்கலேன்னா, பால் ஊத்த மாட்டேன்னு சொல்லிடு, ஆமா!'

'... ... ...'

'என்ன, சொல்றது காதுல விழுந்துச்சா?'

'ம்...'

'அந்த ராதா வீட்டுலேருந்து எட்டுக் காயி தேங்கா வாங்கிட்டுப் போனாங்களே, பணம் குடுத்தனுப்பிச்சாங்களா?'

'காலைலியே குடுத்துட்டாங்க... சாமி அலமாரில வெச்சிருக்கேன்.'

'இனிமே நா இல்லாத சமயத்துல யாராவது காய் பால்னு வந்தா, பணத்தைக் கையில குடுத்தாங்கன்னா பதார்த்தத்தைக் குடு... இல்லேன்னா, முகத்துல அடிச்ச மாதிரி இல்லேன்னு சொல்லு! உன் தாராள மனசை இதுல காட்டத் தேவையில்லே! என்ன, புரியுதா?'

'... ... ...'

'எதுக்கும் பதில் சொல்லாத... அப்படியே இடிச்ச புளியா இரு! என் நலையெழுத்து... உங்கம்மா போயி நா உங்களோட மன்னாடணும்னு இருக்கு! ம்ம்... மசமசன்னு ஏன் நின்னுட்டிருக்கே? தட்டை வெச்சு சோறு பரிமாறேன்!'

குரலுக்குச் சொந்தக்காரர் சாப்பிட உட்கார்ந்துவிட்டால் அரைமணியாவது காத்திருக்க நேரிடும் என்ற பயம் எழ, அவசரமாய் லோகநாதன் கம்பிக் கதவின் நாதாங்கியைத் தட்டி, 'சார்...' என்று அழைத்தார்.

'யாரது, இந்த நேரத்துல? போய்ப்பாரு...'

குரல் அணையிட, பின்கட்டிலிருந்து ஒரு பெண் உருவம் கூடத்துக்கு வந்தது.

கிட்டே வந்து, 'யாருங்க?' என்று சன்னக் குரலில் வினவியவளை லோகநாதனால் நன்றாகப் பார்க்க முடிந்தது.

முப்பது வயசுக்குள்தான் இருப்பாள்.

வெளுவெளுவென்று மெலிந்த தேகம்.

மாநிறத்துக்கும் மட்டமான நிறம்.

ஓட்டிய கன்னங்கள்.

சற்றே பருந்துக் கீழ் நோக்கின உதடு.

பிரிபிரியாய் முன்நெற்றியில் தொங்கிய முடி.

கழுத்திலும் காதோரக் கன்னங்களிலும் மசமசத்த வியர்வை.

கசங்கின புடவை.

மொத்தத்தில், சுமார் என்ற ரகத்தோடு சேர்க்கக்கூடக் கஷ்டப்படும் உருவ அமைப்பு.

'இது மிஸ்டர் நடேசன் வீடுதானே?'

'ம்..'

'இந்த வீட்டுல மாடிப் போர்ஷன் காலியா இருக்கறதா...'

'இருங்க, அப்பாவைக் கூப்பிடறேன்...'

அவள் உள்ளே போய், இன்னும் இறங்கின தொனியில், 'வீடு கேட்டுகிட்டு யாரோ...' என்று சொல்லி முடிப்பதற்குள், பெரியவர் கூடத்தில் பிரசன்னமானார்.

கம்பிக் கதவைத் திறந்துகொண்டு வந்து நின்றவருக்குத் தாராளமாய் அறுபது வயது இருக்கும்.

கிள்ளியெடுக்க சதை இல்லாத ஈர்க்குச்சி தேகம். லாண்டரிச் சலவை என்றால் என்ன என்பதை அறியாத கை வைத்த பனியன், நாலு முழ வேட்டி. முள்ளம்பன்றியின் முள்ளாய் ஓரங்குல உயரத்தில் வெள்ளையாய்ச் சிலும்பிக்கொண்டு நின்ற முடி.

'யாருங்க?'

'இங்க மாடிப் போர்ஷன் காலியா இருக்கறதா....'

'அதைத்தான் ஒருதரம் ஏற்கனவே சொல்லிட்டீங்களே, மத்த விவரத்தைச் சொல்லுங்க'

'நீங்கதான் வீட்டுச் சொந்தக்காரர் மிஸ்டர் நடேசனா?

'ஏன்? பத்திரத்தைக் காட்டினாதான் மேற்கொண்டு பேசுவீங்களா?'

எதற்கும் குதர்க்கமாகப் பேசும் நடேசனிடம் இயல்பாகப் பேச வராமல், லோகநாதன் ஒருதரம் எச்சிலைக் கூட்டி விழுங்கிக்கொண்டார்.

புன்னகை செய்யப் பார்த்தார்.

'என் பேர் லோகநாதன்... இந்த ஊர் கல்லூரியில் விரிவுரையாளரா சேர்ந்திருக்கேன். இந்தப் பகுதியில் வீடு கிடைச்சா நல்லா இருக்கும்னு நினைச்சேன்.. அதான்.'

நடேசன் நிண்ணையில் உட்கார்ந்து லோகநாதனையும் அமரச் சொல்லி கை காட்டினார்.

'இதுக்கு முன்னால எங்க குடியிருந்தீங்க? ஏன் அந்த வீட்டை விட்டுட்டீங்க? வீட்டுக்காரங்களோட ஏதாச்சும் தகறாரா?'

'அதெல்லாம் ஒண்ணும் இல்லீங்க... முன்னே பம்பாயில் இருந்தோம். அப்பா இருவது முப்பது வருஷமா அங்கேயே இருந்தார். போன வருஷம் தவறிட்டார். வயசான அம்மா இருக்காங்க, கடைசிக் காலத்துலியாவது அவங்க ஆசைபட்ட ரீதியில் தமிழ்நாட்டுக்கு வந்து கோவில் குளம்னு இருக்கணும்னு ஆசை...'

'ம்..' நடேசன் அழுத்தமாக லோகநாதனை மேலிருந்து கீழ்வரை பார்த்தார்.

'அப்ப, சம்சாரம், குழந்தைங்களோட, உங்கம்மாவும் இங்க இருப்பாங்கன்னு சொல்லுங்க! எத்தனை குழந்தைங்க உங்களுக்கு? தோட்டம், வாசல் எல்லாம் ஏங்கள்லயும் வதவதன்னு பசங்க ஓடிக்கிட்டு அதம் பண்ணினா, எனக்குப் பிடிக்காது! அதான் முதல்லியே கேட்டுக்கறேன்.'

லோகநாதன் மென்மையாய்ச் சிரித்தார்.

'அந்த பயமே உங்களுக்கு வேணாம், சார்... இங்க தங்கப்போறது அம்மாவும் நானுந்தான்!'

நடேசன் கண்களை விரித்தார்.

'படிப்பு கெட்டுடும்னு பம்பாய்லியே விட்டுட்டு வரப்போறீங்களா? ரெண்டு குடித்தனம் வெக்கப்போறீங்களா?'

'ஹூம், அதெல்லாம்மில்லே. என் சம்சாரம் ரொம்பச் சின்ன வயசிலேயே தவறிப்போயிட்டா... குழந்தை குட்டி ஒண்ணும் கிடையாது. அதான்...'

'ஏன் சார், அப்படியென்ன வயசாயிட்டது உங்களுக்கு? ரெண்டாங் கல்யாணம் கட்டிகிட்டிருக்கலாமே, என்ன தப்பு?'

பதில் பேசாமல் லோகநாதன் சிரித்துக்கொண்டு நிற்க, 'சரி, வாங்க.. மாடியைக் காட்டறேன்' என்று நடேசன் எழுந்தார்.

மாடிப்படி. கூடத்திலிருந்து துவங்கியது.

அலிழுந்த வேட்டியைச் சரிபண்ணிக்கொண்டு படிகளில் ஏறியபடியே நடேசன் பேசினார்.

'மாடிப்படி வீட்டுக்குள்ளார இருக்கு.. ராத்திரி பத்து மணிக்கெல்லாம் வாசல் கதவை மூடிடுவேன். அதனால, எங்க போனாலும் பத்துக்குள்ளார

நீங்க வந்துடணும். அப்பறம் என்னைக் குறை சொல்லிப் பிரயோசனம் இல்லே! மூணு பொட்டைப் பசங்களை வெச்சுகிட்டு நா குடுத்தனம் செய்யறேன்... என் கஷ்டம் உங்களுக்குப் புரியணும்.'

பூட்டியிருந்த கதவை நடேசன் திறந்துவிட்டார்.

விசாலமாய்க்கூடம். வலப்பக்கம், மாமரங்களைப் பார்த்துக்கொண்டு படுக்கயறை இடப்பக்கம் சாப்பாட்டறை, சமையலறை. கூடத்தைத் தாண்டிப் பின்கட்டுக்குச் சென்றால், நீளமாய் வராந்தா, அதன் கடைசியில் குட்டியாய்க் குளியல், கழிவறைகள்.

தொடர்ந்து, 'ஹா' என்று பரந்து விரிந்திருந்த மொட்டைமாடி.

'அருமையான இடம் சார், இது! காத்து பிரமாதமா வரும்... தண்ணிக்குப் பஞ்சமே இல்லே! யார்யாரோ வந்து கேட்டாங்க... முகத்தைப் பார்த்தே ஸாரி, இல்லீங்கன்னு சொல்லிட்டேன்! பின்னே? முகத்துல ஒரு லட்சணம் வேணாமா? எந்நேரமும் நம்மகூட தங்கப்போறவங்களுக்கு ஒரு பவிஷு வேணாமா? மூணு பொண்களை வெச்சுகிட்டு வயத்துல நெருப்பைக் கட்டிகிட்டிருக்கற எனக்குந்தானே சார், என் அவஸ்தை தெரியும்? என்ன நா சொல்றது?

நடேசனின் லொடலொடப்புக்கு பதிலேதும் சொல்லாமல் மொட்டைமாடிக்குச் சென்று லோகநாதன் எட்டிப்பார்த்தார்.

ஒடிப் பிடித்து விளையாடும் அணிற்பிள்ளைகள், விஸ்ராந்தியாய் நண்டால் பஸ்கி எடுக்கும் ஓணான்கள், யாரோ பாடச் சொன்ன மாதிரி கக்கூ அக்கக்கூ என்று கூவும் பட்சிகள்...

பம்பாய் நெரிசலில் இத்தனை வருஷங்களாக வாழ்ந்துவிட்டதில், தோட்டமும் அதன் ஜீவராசிகளும் மனசுக்கு ரொம்ப பிடித்துப்போக, 'வீடு பிடிச்சிருக்கு... வாடகை எவ்வளவுன்னு சொல்லுங்க...'

'நானூறு... மின்சாரத்துக்கும் தண்ணிக்கும் தனியா இருவத்தஞ்சு! என்ன அப்படிப் பார்க்கறீங்க? அதிகம்னா விட்டுடுங்க. குடு குடுன்னு அவனவன் கியூவுல நிக்கறான்!'

புன்சிரிப்போடு லோகநாதன் பர்ஸை எடுத்தார்.

'அட்வான்ஸ் எவ்வளவு தரணும்?'

பேரம் பேசாமல் குடித்தனம் குதிர்ந்துவிட்ட சந்தோஷம் நடேசனின்

முகத்தில் வெளிப்படையாய்த் தெரிந்தது.

'அதெல்லாம் அடிச்சுப்பிடிச்சு வாங்கறவன் நா இல்லே, சார்! எல்லாரும் ஒரு வருஷ வாடகை கேக்கறாங்க... எனக்கு நீங்க ஆறு மாசப் பணம் குடுத்தாப் போதும்! ஆறு நாலு, இருவத்திநாலு... ரெண்டாயிரத்து நானூறுதான்...'

லோகநாதன் பர்ஸிலிருந்து ஆயிரத்தை நீட்டினார்.

'இத வெச்சிக்கங்க... சாயங்காலம் சாமான்களோட வாறப்ப, பாக்கியக் குடுத்துடறேன்.'

'அ... அதுக்கென்னங்க! மெதுவாக் குடுங்க, அவசரமில்லே! சாயங்காலமே வந்துடறீங்களா? என் பொண்ணை விட்டு வீட்டைப் பெருக்கி வெச்சிடச் சொல்றேன். பால் வாங்கறதுக்காகக் கூப்பனுக்கும், பால் பூத்துக்கும் நீங்க லோல்படவேணாம்... வீட்டுல பசுமாடுங்க கறக்குது! விலை அதிகமில்லே... லிட்டர் மூணரை ரூவாதான். கள்ளிச்சொட்டா இருக்கும், வாங்கிக்கலாம்... அப்பறம்...'

கீழே இறங்கி வந்தார்கள்.

வாசலுக்குச் செல்ல முயன்ற லோகநாதனை நடேசன் தடுத்து நிறுத்தினார்.

'இருங்க, இப்படியே உக்காரலாம், வாசல்ல வெக்கை! ஏய், சிவகாமி, சாருக்கு ஜில்லுன்னு மோர் கொணாந்து குடு... இவருதான் நம்ம மாடிக்கு வரபோறவர். வயசான அம்மாவும் இவரும்தானாம்... சின்ன வயசிலேயே சம்சாரம் தவறிட்டாங்களாம். ஏன் சார், இப்ப உங்களுக்கு என்ன வயசிருக்கும்? நாப்பந்தூறு, நாப்பத்தேழு? ப்ச்.... பாவம்... நீங்க ஒரு ரகம்னா, நா ஒரு ரகம். மூணு பொண்களை என் பொறுப்புல விட்டுட்டு அவ மகராசி போயிட்டா... நா கிடந்து லோல்படறேன்! இந்தப் பொண்களுக்கு ஒரு வழி பண்ணணும்னு பார்க்கறேன்... முடியல! ம்...'

மேற்கொண்டு பத்து நிமிஷங்கள் தங்கி, சிவகாமி கொடுத்த நீர்மோரைப் பாதியில்விட்டு விடை பெற்றுக்கொள்வதற்குள் இன்னும் இரண்டு தரம், 'மூணு பொண்களை வெச்சுகிட்டு அவஸ்தைப்படறேன்...' என்று நடேசன் சொல்லிவிட 'அவர்களால் இவருக்குக் கஷ்டமா, இல்லை, இவரால் அவர்களுக்கு கஷ்டமா' என்ற நினைப்பு நெஞ்சில் மின்ன, குறும்பாக ஒரு சிரிப்பு உதடுகளைக் கீறுவதை அடக்கிக்கொண்டு லோகநாதன் வாசற்படிகளில் இறங்கினார்.

(2)

பூரணமாய் விடியாத காலை.

மார்கழி மாசக் குளிர். மார்பில் பாய்ந்து மயிர்க்கால்களை விரைக்கச் செய்தது.

சூரிய நமஸ்காரத்தை முடித்த லோகநாதன் சற்றே ஆஸ்வாசப்படுத்திக்கொள்ளவேண்டி மொட்டைமாடியின் கைப்பிடிச்சுவரில் சாய்ந்தார்.

வேலியை ஒட்டியிருந்த மாட்டுக்கொட்டகையில் முண்டாக கட்டி, குந்தி உட்கார்ந்து நடேசன் பால் கறந்துகொண்டிருக்க, புடவைக் கொசுவத்தைத் தூக்கிச் செருகிக் கொண்டு, சாணத்தை வாரி குழியில் போடுவதில் சிவகாமி ஈடுபட்டிருந்தாள்.

வீட்டை ஒட்டி இருந்த டிசம்பர் செடிகளில் பூக்களைப் பறித்தபடி வேணியும், ஈஸ்வரியும்.

பாலைக் கறந்து நடேசன் நீட்டியதும், அதில் ஒரு லிட்டர் போல நீர் விட்டு, கொடுக்கவேண்டிய வாடிக்கையாளர்களுக்கு சிவகாமி பங்கீடு செய்வாள். பின் தொழுவத்தைக் கழுவி, மாடுகளைக் குளிப்பாட்டி, மஞ்சள் குங்குமம் இட்டு, ஒரு பிரி வைக்கோலை உதறிப்போட்டுவிட்டு, சமையல் காரியங்களைக் கவனிக்க வீட்டுக்குள் நுழைந்தால், மணி ஆறேமுக்கால் என்று கண்ணை மூடிக்கொண்டு சொல்லிவிடலாம்.

வாசல் தெளித்துக் கோலம் போடுவது இரண்டாவது மகளான வேணி – இருபத்திரண்டு வயசு கிருஷ்ணவேணியின் வேலை.

ஐந்தரைக்கு எழுந்து வாசல் தெளித்துக் கோலம் போட்டபின், இன்றைக்குச் செய்கிற மாதிரி டிசம்பர் பூக்களைப் பறிக்கவேண்டிய வேலை இருந்தால் பறிப்பாள். இல்லாவிட்டால், அக்கா சமையல்கட்டுக்கு வருவதற்குள் காபிக்கு டிகாக்ஷன் இறக்கி, காய் நறுக்கி என்று சில்லறை வேலைகள் செய்வாள். அக்கா வந்தபின் அவளிடம் பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டு, வீட்டைப் பெருக்குவாள். வெள்ளிக்கிழமை என்றால் மெழுகுவாள். எட்டுக்குள் செய்யவேண்டியவற்றைச் செய்துமுடித்துவிட்டுக் குளித்துத் தயாராகி,

சாப்பிட்டு, எட்டே முக்கால் பஸ்ஸைப் பிடிக்க கிளம்பிடுவாள். சைதாப்பேட்டையில் இருக்கும் அலுவலகத்தில் அவள் கிளார்க் உத்தியோகம் பார்க்கிறாள். மாசச் சம்பளம் முந்நூற்று இருபது.

ஈஸ்வரி கடைக்குட்டி, வயசு பத்தொன்பது, பி.ஏ. கடைசி வருஷத்தில் இருக்கிறாள்.

சீஸனுக்குத் தக்கவாறு டிசம்பர் பூக்களையோ மல்லிகைப் பூக்களையோ பறித்து, நூறு பூ இத்தனை காசு என்று, 'பூ வேணும்' என்று கேட்டு வருபவர்களிடம் விற்றுக் காசு சேர்ப்பது அவள் பொறுப்பு. ரொம்ப வருஷங்களாக அந்தத் தெருவில் வசித்து, அத்தனை பேரையும் தெரியும் என்பதால், 'நாளைக்கு வெள்ளிக்கிழமை, ஆயிரம் பூ மல்லிகை வேணும்' என்று தெருக்காரர்கள் கேட்பதும் சகஜம்... 'ஐயோ, இது என்ன கேவலம்' என்று முகம் சுளிக்காமல் ஈஸ்வரி எண்ணிக்கொடுப்பதும் சகஜம்.

பூ வேலை முடிந்த பின் இரண்டாவது அக்கா வீட்டைப் பெருக்கும்போது ஈஸ்வரி உதவுவாள். இல்லாவிட்டால், 'ரசதத்துக்கு தக்காளி இல்லை' என்று சிவகாமி சொல்லி, அப்பா போக மறுத்துவிட்டால், இவள் முனைக் கடைக்குச் சென்று வாங்கிவருவாள். வேணியைப் போல இவளும் டானென்று எட்டே முக்காலுக்குக் கிளம்பிடுவாள். கலலூரி பக்கம்தான்... காலை வீசிப்போட்டு நடந்தால், பத்து நிமிஷ நடைதான்.

தங்கைகள் இருவரும் புறப்பட்டுச் சென்ற பின், மாடுகளுக்குத் தீனி வைத்து, அதுகளைக் காலாற இடம் மாற்றிக் கட்டி, துணிகளைத் துவைத்துக் காயப்போட்டு, அப்பாவுக்கு உணவு பரிமாறி, தானும் சாப்பிட்டு, சமையல்கட்டை சிவகாமி சுத்தம் பண்ணுவாள்.

இத்தனை செய்து முடித்த பிறகாவது அக்கடா என்று ஓய்வெடுப்பாளா என்றால், அதுதான் இல்லை.

துணிக் கிழிசல், பொத்தான் தைப்பாள். கடையிலிருந்து ஓயர்களை வாங்கிவந்து கூடை பின்னி, கடைக்கே விற்பனைக்கு அனுப்புவாள். வெயில் கள்ளென்று உரைப்பதையும் பொருட்படுத்தாமல் தோட்டத்துச் செடிகளைக் கிளறிவிடுவாள். தண்ணீர் பாய்ச்சுவாள்.

மாலையில் நாலே காலுக்கு ஈஸ்வரியும், ஆறுக்கு வேணியும் வந்துவிடுவார்கள்.

தோட்டத்தில், தொழுவத்தில் அக்காமாராகள் வேலை செய்தால் ஈஸ்வரி

மட்டும் மகிழமரத்தடியில் அமர்ந்து இருட்டும்வரை படிப்பாள்.

அப்புறம் பொழுதோடு சாப்பிட்டுவிட்டு, எட்டரை ஒன்பதுக்கெல்லாம் படுத்துவிடுவார்கள்.

ஒரு சினிமாவுக்குப் போவது, ரேடியோ கேட்பது? ம்ஹூம், ஒன்றும் கிடையாது.

வந்த புதிதில் இப்படி மிலிட்டரி கேம்ப்பில் நடப்பது போல, வாய்வார்த்தை ஏதுமில்லாமல் அவரவர் தம்தம் காரியத்தைக் கவனித்துக்கொண்டு இயந்திரம் போல் வாழ்வதைக் கவனிக்கையில், 'என்ன இது, இப்படி ஜடங்களாய் வாழ்வதுகூட சாத்தியமா?' என்ற சந்தேகம் லோகநாதனுக்குள் எழுந்தது உண்டுதான்.

மூன்று சின்ன வயசு திருமணமாகாத பெண்கள் இருக்குமிடத்தில், ஒரு பேச்சு, சிரிப்பு, துடிப்பு இருக்காதோ?

உம்மணாம்மூஞ்சிகள் போல 'உம்' என்று இந்தப்பெண்கள் ஏன் இருக்கிறார்கள்?

இரண்டு நாட்கள் போவதற்குள் அவர் தாயார் ஆண்டாளம்மாவும் இதே சந்தேகத்தைக் கேள்வியாய் வெளியிட்டார்.

'சின்னஞ்சிறுசுகள் மாதிரியே தோணலை, லோகு! என்னமோ ஆண்டு அனுபவிச்ச சலிச்சுப்போயிட்டவங்க மாதிரி, நாலு வார்த்தை கேட்டா ஒரு வார்த்தை பதில் சொல்லுதுங்க... இப்படிக்கூட வாய் தொறந்து பேசாம, சிரிக்காமல் பொட்டைப் பசங்களால இருக்க முடியுமா? அதுங்களைப் பார்த்தா ஒரு விதத்துல பாவமாதான் இருக்கு... அப்பா ரொம்பக் கறார் பேர்வழியா தெரியறாரு... அவருக்கு பயந்துகிட்டு இதுங்க இப்படி இருக்கா, இல்லே, சுபாவமேதானான்னு தெரியலை.''

மேற்கொண்டு இரண்டு நாட்கள் செல்லச்செல்ல, கீழ்வீட்டின் நிலைமையை இவர்களால் நன்றாகவே புரிந்துகொள்ள முடிந்தது.

பணம், பணம் என்று அலைந்து, பாலை தயிரை பூவை விற்றுப் பணம் சேர்க்கத் துடிக்கும் குணத்தோடு, 'நான் ஆண், நான் வைத்ததுதான் இந்த வீட்டில் சட்டமாக இருக்கவேண்டும்' என்று ஆணித்தரமாக நம்பும் நடேசன்...

'அப்பா சொல்வது நியாயம்தானே, அவருக்கு இல்லாத உரிமை யாருக்கு? நல்லது கெட்டதை தீர்மானிக்க அவருக்குத் தெரியாதா?' – என்ற நினைப்பில்,

பேதையாய் அடங்கிவிட்ட சிவகாமி...

'ஆயிரம்தான் அப்பாவானாலும், சதாசர்வகாலமும் வயதுவந்த பெண்களை என்னமாய் விரட்டுகிறார்? சீச்சீ, இது என்ன வாழ்க்கை, சர்க்கஸ் மிருகங்களாய்!' – என்று அடிமனசில் குமுறினாலும், அப்பாவின் கோபத்துக்கு பயந்துகொண்டு வாய் திறக்காமல் இருக்கும் வேணி.

'இட்டேரானதைக்கு எதைப் பற்றியும் கவலைப்படுவது வேண்டாம். முதலில் படிப்பை ஒழுங்காய் முடித்து, ஒரு வேலையில் அமர்ந்துவிடுவோம். பிறகு மற்ற பிரச்சினைகளைப் பற்றி சிந்தித்துப் பார்க்கலாம்' – என்று கண்ணைக் கட்டிவிட்ட குதிரையாய் இருக்கும் ஸுஸ்வரி.

குடிவந்து பத்து நாட்களுக்கு மேலேயே ஆன பிறகு, 'பேப்பர் படிக்கறீங்களா, சார்? வெளிநாட்டு பிளேடு மலிவாக் கிடைச்சிது, இந்தாங்க, நீங்களும் நாலு வெச்சிக்கங்க...' என்று லோகநாதனும், 'கோவிலுக்குப் போற வழியில ரஸ்தாளி விதுதுகிட்டிருந்தான், வாங்கினேன், நீங்க ஒரு சீப்பு எடுத்துக்கங்க...' என்று ஆண்டாளம்மாவும், உண்மையான கரிசனத்துடன் பேசிப் பழகத்துவங்கிய பிறகு நடேசன் மட்டுமல்லாமல் அவர் பெண்களும் மாடிப் போர்ஷன்காரர்களிடம் கொஞ்சம் நெருங்கிப் பழக ஆரம்பித்தனர்.

நடேசன் பேப்பர் படிக்கிற சாக்கில் காலை ஏழு மணிக்கு மேலே வருவார். கையில் பேப்பரை வைத்துக்கொண்டு பழங்கதையெல்லாம் உரத்த குரலில் பேசுவார்.

தான் பிறந்தது, வளர்ந்தது, வேலை பார்த்தது, ரிடையர் ஆனது – என்று ஒன்று விடாமல் பெருமையாகச் சொல்வார்.

'என்னைச் சாதாரணமா நினைச்சிடாதீங்க, லோகநாதன்... எங்க தாத்தா ஜமீன் பரம்பரை! அவனவன் ஏமாத்தி சொத்தை எடுத்துகிட்டதுல, அத்தனையும் போச்சு! இருக்கவேண்டியது அத்தனையும் இருந்திச்சின்னா, ஹ்ஹூம்... இப்ப இப்படியா இருப்பேன்?'

'துபுக்கத்துல வெள்ளைக்காரன்கிட்ட வேலை பார்த்ததாலயோ என்னவோ, எனக்கு எல்லாமே டக்டக்குன்னு மணிப்படி நடக்கணும்... வசவசன்னு பேசிக்கிட்டு நின்னா பிடிக்காது! டிஸிப்ளின் இல்லாட்டி, அப்பறம் என்ன வாழ்க்கை, சொல்லுங்க!'

'ஏன் பொண்டாட்டி மலா உத்தமி, சார்... நிமிர்ந்து பார்த்து, 'என்னங்க?'ன்னு என்னைக் கேட்டவ இல்லே! கான்ஸர் வந்து போயி வருஷம் எட்டாகப்

போகுது! இந்தப் பொட்டைக் குட்டிகளோட நா கெடந்து அவஸ்தைப்படறேன்..'

இன்னது என்றில்லாமல் மனசில் தோன்றியவற்றை அவர் பேச முறபட்டதும், 'சரி, நம் பங்குக்கு நாமும் இவரிடம் பேசலாம்' என்ற நம்பிக்கை பிறக்க, ஆண்டாளம்மா கேட்டார்.

'பாவம், உங்க நிலவமை எங்களுக்குப் புரியுது... பொண்டாட்டி இல்லாம பொம்பளைப் பசங்களை வளக்கறதுன்னா, லேசா? ஆமா, மூத்தவ சிவகாமிக்கு என்ன வயசாகுது? அவளை ஒருத்தன்கிட்ட ஒப்படைச்சிட்டா, ஒரு பொறுப்பு குறையுமில்லே?'

'குடுக்கணுந்தான்... நானும் நாலு வருஷமா பார்க்காத இடமில்லை.. ஏதாவது குதிர்ந்தாதானே? மூத்தவளுக்கு இந்த ஜப்பசியில இருபத்தியெட்டு முடியுது. அவளைக் கரையேத்திட்டா, அடுத்து தயாரா நிக்கறவளைக் கவனிக்க முடியும். வர்றவன் இவ கறுப்பு, நெருங்கல்லு எதையாவது சொல்லிட்டுப் போறான்... அதுக்கு என்ன பண்றது சொல்லுங்க! பொறந்துட்டவளை மாத்த முடியுமா?

'நா கேக்கறேன்னு தப்பா எடுக்காதீங்க... உங்க அக்கா ஸ்தானத்துல கேக்கறேன்.. வீட்டு வேலையெல்லாம் செய்யறதாலதான், சிவகாமி உடம்பு தேறமாட்டேங்குதோ, என்னவோ! வேணுன்னா, ஒரு மூணு மாசத்துக்கு வேலைக்காரி ஒருத்திய அமர்த்திடுங்க... இவளை உக்காரச் சொல்லி நல்லா பாலும் தயிரும் போட்டா, உடம்பு தேறிட மாட்டாளா, என்ன?'

நடேசன் அடிபட்டுவிட்டதுபோல விழித்தார்.

'ஆ? நானா அவளை சாப்பிட வேணாம்னு சொன்னேன்? தாராளமா வயத்துக்கு சாப்பிட வேணாம்னு நானா தடுக்கறேன்? அவ அம்மா இப்படித்தான் ஈர்க்குச்சியா இருப்பா... நானும் பருமனில்லே... ரெண்டுமாச் சேர்த்துகிட்டு அவளும் நெருங்கலா இருக்கா! கபாவத்தை எப்படி மாத்தறது? ஆள், தேள்னு நாலு பேரை வெச்சு வேலை வாங்க இங்க கொட்டியா வெச்சிருக்கு? இருக்கறதை வெச்சுகிட்டு மூணு பொட்டைப் பசங்களைக் கரையேத்தணும்னு நானே லோல்பட்டுக்கிட்டிருக்கேன்... அது புரியாம நீங்க பாட்டுக்கு பேசினா எப்படி?'

கொஞ்சம் கோபம் கலந்த குரலில், 'என் விஷயங்களில் நீங்க அனாவசியமாகத் தலையிட வேண்டாம்' என்ற பாவனையுடன் நடேசன் பேசிவிட்டுக் கீழே போக, அரிசி பொறுக்கிக்கொண்டு தாழ்வாரத்தில்

அமர்ந்திருந்த தேவகி அருகில் வந்தாள்.

'அந்த மனுஷன்கிட்ட நீங்க ஏம்மா வாய் குடுக்கறீங்க? அவரு சொல்றதைக் கேட்டுக்கிட்டுத் தலையாட்டிட்டுப் போகாம, ஆளை வை, தயிர்ப் பால் சாப்பிட்சொல்லுன்னு சொல்லி நீங்க ஏன் வம்புல மாட்டிக்கிறீங்க? அந்த மனுஷன் குணந்தான் ஊருக்கே தெரியுமே! கஞ்சன்னா, இப்படியப்படி கஞ்சன் இல்லே. எச்சங்காயால காக்கா ஓட்டாத ரகம்! ஊளை மோரைக்கூட வித்துக் காசு பண்ணிடுவாரே மனுஷன்! இவராவது ஆள் வெக்கறதாவது! இவரு சமாசாரம் இப்படி. மூளுல்ல ஒழைச்சே ஒரேயடியா போய்ச்சேர்ந்தாங்க... இப்ப இந்த மூணு பசங்களும் வகையா மாட்டிகிட்டிருக்குதுங்க! இவரு மண்ணை வாரி போட்டாதான் இதுங்களுக்கு விமோசனம்! இல்லாட்டி இப்படியே உழைச்சி, விழுவாடு சாக வேண்டியதுதான்! அது என்ன பண ஆசையோ? சேர்த்து வெச்சு என்ன பண்ணியவான் என்ன பண்ணப்போறார்னு தெரியலே! நாலையில தூக்கிகிட்டுப் போகவே எடுத்துட்டுப் போவாரோ, என்னவோ? இவரைப் பார்த்து தெருவே சிரிக்குது... வாடகைக்கு வர்றவங்க இவரோட பட்டிகாட்டையைப் பார்த்து, ஆறே மாசத்துல ஓடிடறது வழக்கம்.. தெரியுமாம்மா?'

நீளமாக தேவகி பேசி நிறுத்த, என்ன பதில் சொல்வது என்று புரியாமல் ஆண்டாளம்மா திகைத்திருக்கதார். பின், 'யார், எப்படி இருந்தா நமக்கென்ன, தேவகி? நம்ம வரைக்கும் நாம ஒழுங்கா இருந்தாச் சரி!' என்று சொல்லி பேச்சை முடித்தார்.

அந்த வீட்டுக்கு வந்து ஒரு மாசம் பூர்த்தியாவதற்குள், இவர்களின் நல்ல மனம் புரிந்துபோன நிலுயில், அன்புக்காக ஏங்கிக்கொண்டிருந்தது போல ஒவ்வொருவராக வந்து ஒட்டிக்கொள்ளத் துவங்கினர்.

முதலில் கல்யாணி.

'டீனேஜில்ஸ் பாடத்துல ஒரு சந்தேகம் இருக்கு, விளக்க முடியுமா சார்?'

இரண்டு நாள் தயங்கித்தயங்கி வந்தவள், தொடர்ந்து தினமும் ஏதாவது பாடத்தில் ஏதாவது சந்தேகத்துடன் வர, காசு செலவில்லாமல் மகளுக்கு டியூஷன் கிடைக்கிறது என்ற குஷியில் தினமும் அவள் மாடிக்கு வருவதற்கோ, இரண்டு மணி நேரம் இருப்பதற்கோ நடேசன் வாயைத் திறக்காமல் இருக்க, இதுதான் சாக்கு என்று வேணியும், ஒழிந்தபோதெல்லாம் வந்து தன் மனக்குறைகளை ஆண்டாளம்மாவிடமும் லோகநாதனிடமும் வெளிப்படையாகக் கூற முற்பட...

'என்ன லோகு, பனியில நின்னுகிட்டு என்ன பார்த்திட்டிருக்கே? சூரியநமஸ்காரம் செஞ்சிட்டியா?'

அம்மாவின் குரல் கேட்டு லோகநாதன் திரும்பினார்.

மெதுவாக நடந்து தாயிடம் வந்து, 'வேற என்ன பார்க்கப்போறேன்? தீழ்வீட்டுப் பசங்களை அவங்கப்பா ட்ரில் வாங்கறதைத்தான்!' என்று புன்சிரிப்புடன் கூறியவர், 'நா குளிச்சிட்டு வந்திடறேன்..' என்றபடி குளியலறையை நோக்கி நகர்ந்தார்.

(3)

'வேலையா இருக்கீங்களா, சார்?'

கடிதம் ஒன்றை எழுதிக்கொண்டிருந்த லோகநாதன், தலை நிமிர்ந்தார். வேணி.

'வா, வா! வேலைன்னு ஒண்ணுமில்லே... பம்பாய் சினேகிதருக்குக் கடிதம் எழுதிட்டிருந்தேன். எழுதியாச்சு... ஒடடித தபாலல போடவேண்டியதுதான்..

உள்ளே வந்த வேணி, பத்தடி தள்ளி நின்றுகொண்டாள்.

ஷ்கடிதாசை என்கிட்ட குடுங்க, சார்.. நா ஆபீஸுக்குப் போறப்போ தபால்ல சேர்த்துடறேன்.'

'உனக்கெதுக்கும்மா வீண் சிரமம்?'

'இதுல சிரமம் என்ன, சார்? சனிக்கிழமை, உங்களுக்கு இன்னிக்குக் காலேஜ் லீவு.. இதுக்குனு போகணும். நா போற வழியில தபால் பெட்டி இருக்கு.. போட்டுட்டுப் போறது ஒரு வேலையா? தாங்க சார்!'

கடிதத்தை ஒட்டி விலாசம் எழுதி வேணியிடம் லோகநாதன் நீட்டினார்.

'என்ன, அதிசயமா காலைவேளைல மாடிக்கு வந்திருக்கே?'

'கும்மாதான் சார்.. நா வீட்டுல இல்லியா, அதனால பெருக்கித் துடைக்கற வேலை கிடையாது. குளிச்சு கிளம்பறவரைக்கும் ஏதாச்சும் புஸ்தகம் படிச்சிட்டிருக்கலாமேன்னு மேல வந்தேன்..'

'அப்பா இல்லியா?'

'ம்ஹூம்.. அவரு இருந்தா வீடு இத்தனை அமைதியா இருக்குமா? பால் பணம் வசூல் பண்ணப் போயிருக்கார்...'

'உட்காரேன், ஏன் நிக்கறே?'

வேணி கதவின் அருகிலேயே அமர்ந்தாள்.

'நேத்து நீங்க காலேஜ்லேந்து வர ரொம்ப நேரமாயிடுச்சே, ஏன் சார்?'

'ஆமாம்மா.. 'காலேஜ் டே' கிட்ட வருது, அதுக்கான வேலைகளைக் கவனிச்சிட்டு வர நாழியாயிட்டது. நீங்கள்லாம் சாப்பிட்டுப் படுத்திட்டீங்க போலருக்கு.'

வேணி புடவைத் தலைப்பைத் திருகியபடி மௌனமாய் உட்கார்ந்திருந்தாள். பின் மெல்லிய குரலில் பேசினாள்.

'நேத்து இங்க ஒரே கலாட்டா, அம்மா சொன்னாங்களா?'

'தெரியும்..'

ராத்திரி சாப்பாட்டைப் பரிமாறிக்கொண்டே ஆண்டாளம்மா அவரிடம் மாலை நடந்ததைச் சொல்லிவிட்டார்.

'இளவிக்கு சாயங்காலம் ஒண்ணுமில்லாததுக்கு அந்த மனுஷன் கூரைக் கூட்டற மாதிரி சத்தம் போட்டுட்டார், லோகு.. ஆனாலும் இத்தனை கோவம் ஒரு மனுஷனுக்கு ஆகாதுப்பா!'

'என்னாச்சும்மா?'

'வழக்கமா அந்தச்சனை பஸ்ஸைப் பிடிச்சு, ஆறுக்குள்ளார வேணி வீட்டுக்கு வந்துடுமா இல்லே? இன்னிக்கு என்னமோ தெரியலே, படியேற அரவம் ஆயிரியோச்சு.. அதுக்காக, வாசல் வராந்தாவுல நின்னுகிட்டு அந்த மனுஷன் அவளை உள்ளாற நுழைய விடாம ஒரு கத்துக் கத்தியிருக்கார், பாரு, ஏன் தேக்கம் ஆயிட்டியோச்சு போ!'

தாய்மைக்கே முதல் நாள் பதிலேதும் சொல்லாமல் இருந்த விதத்திலேயே இப்போதும் லோகநாதன் அமர்ந்திருக்க, 'என்ன சார், பதிலே பேச மாட்டேங்கறீங்க?' என்றாள் வேணி.

'இதுல சொல்றதுக்கு என்ன இருக்கு, வேணி? அப்பா குணந்தான் உலகுக்குத் தெரியுமே, எதுக்காக தாம்தமா வந்தே?'

'தப்பு என் பேர்ல இல்ல, சார்... நா அஞ்சரை பஸ்ஸை, எப்பவும் போலத்தான் பிடிச்சேன்... பஸ் ப்ரேக் டவுன் ஆயிடுச்சு... நடுரோட்டுல நிறுத்திட்டுக் கண்டக்டர், 'வேற பஸ்ஸுல போய்க்கங்க'ன்னு சொல்லிட்டார். அவதி அவதினு வேற பஸ் புடிச்சு வர்றதுக்குள்ள நாழியாயிடுச்சு.'

'அப்பாக்கிட்ட காரணத்தைச் சொல்றதுதானே?'

வேணி தலையைக் குனிந்து கொண்டாள். குரல் ரொம்பவும் தழைந்து வந்தது.

'எங்க சார், சொல்ல விடறார்? வாசல்ல நிக்க வெச்சு அசிங்கமா கத்தற மனுஷன்கிட்ட நல்லவிதமா எப்படி சார் பேச முடியும்? இவரு சொல்ற பஸ்ஸுல போகணும், சொல்ற பஸ்ஸுல வரணும்... ஒரு நிமிஷம் கூடக்குறைச்சுப் போயிடுச்சுன்னா, இன்னதுதான் சொல்லித் திட்டறதுன்னு இல்லாம, கோவம் வந்துடுது! ச்சே... போங்க சார்! எனக்கு ஒண்ணும் புடிக்கலே! அந்தக் காலத்துல அடிமைங்களத்தான் இப்படி நடத்துவாங்கனு கேள்விப்பட்டிருக்கேன். பொண் சம்பாதிக்கணும். ஆனா நிமிர்ந்து பார்க்கக் கூடாது... கீ குடுத்த பொம்மை கணக்கா, எழுந்திருன்னா எழுந்திருக்கணும், போன்னா போகணும்! த்தூ! என்ன வாழ்க்கை சார், இது? ஒரோரு சமயம் செத்து ஒழிஞ்சிடலாமான்னுகூடத் தோணுது!'

குரல் அடைத்துப்போய், சப்தமில்லாமல் வேணி விசும்ப, லோகநாதன் திடுக்கிட்டுப்போனார்.

இந்த மூன்று மாதப் பழக்கத்தில் இப்படி வெளிப்படையாக அப்பாவைப்பற்றிப் புகார் சொல்லி, மனம் உடைந்து வேணி அழுவது முதல் முறை என்பதால், பதறிப்போனார்.

'ஷ்... வேணி! என்னம்மா இது பச்சைப்பிள்ளையாட்டம்? அடக்கிக்கம்மா! கோவம் இருக்கற இடத்துலதான் குணம் இருக்கும். என்னவோ வருத்தம் அவருக்கு, அதை உன்னண்ட காட்டிட்டார்னு தேத்திக்கம்மா...'

விசும்பல்களூடே வேணி பேசினாள்.

'என்ன சார், குணம்? இவரும் ஒரு மனுஷரா? எப்பப்பாரு சிடுமூஞ்சி முகமும் பேச்சுமா இருக்காரே, இவருகிட்டயா குணம் இருக்குன்னு சொல்றீங்க?'

'அழாதம்மா... கண்ணைத் துடைச்சிக்க. அப்பா வந்து, என்ன ஏதுன்னு கேட்டா கஷ்டம்.'

கெஞ்சலாக லோகநாதன் பேச, ஓரிரு நிமிஷங்களில் வேணி சம்மதானமடைந்தாள்.

கண்களைத் துடைத்துக்கொண்டவள், அவரைப் பார்த்து வறட்சியாய் புன்னகைத்தாள்.

'ஸாரி சார், எனதுயாவது சொல்லி உங்களை வருத்தப்பட வெச்சிருந்தா, மன்னிச்சிடுங்க. என்னவோ, நேத்திலேந்து மனசுக்குள்ள ஒரு வேதனை... யார்கிட்டயாவது சொல்லி தணிச்சுக்கணும்னு அவஸ்தை. எனக்கும் யார் இருக்கா, சொல்லுங்க? அக்கா, சரியான பயந்தாங்கொள்ளி... ஒரு வார்த்தை சொல்லுக்கிருள்ள, 'வேணாண்டி, அப்பா காதுல விழுந்துடப்போவுது'ன்னு வாய அடைச்சிடுவா! ஈஸ்வரி, சின்னப் பொண்ணு! நீங்க பெரியவர், நல்லது கெட்டது தெரிஞ்சவர்... வடக்கே இருந்து, பல அனுபவங்களைப் பார்த்தவர். என வேதனை உங்களுக்குப் புரியும்னு மனசைத் தொறந்து கொட்டிட்டேன்! நா அளவுக்கு மீறி உரிமை எடுத்துக்கிட்டதா நினைக்க மாட்டீங்களே, சார்?'

லோகநாதன் பரிவுடன் அவளை ஏறிட்டார்.

'நா சின்னப்பையன் இல்லம்மா... உங்கப்பா வயசுல முக்கால்வாசி எனக்கும் ஆயாச்சு! புண்பட்ட உன் மனசுக்கு ஒரு நிமிஷமாவது அமைதி தர முடிஞ்சா, அதுக்காக நா சந்தோஷப்படுவேன்! நீ தப்பா எதையும் சொல்லிலே... உன் வருத்தம் எனக்கு நல்லாவே புரியுது. ஆனாலும் வேணி, உங்கப்பா சுபாவம் உனக்குத் தெரியும். அவர் கோவமும் கத்தலும், புதுசு ஒண்ணுமில்லே. இந்தக் காதுல வாங்கி அந்தக் காதுல விட்டுடறதுதான் உனக்கு நல்லது. எழுந்திரு. அவர் திரும்பி வர்றதுக்குள்ள குளிச்சுத் தயாராகி, எதையும் நினைச்சு கஷ்டப்படாம வேலைக்குக் கிளம்பு... போம்மா.'

வேணி எழுந்து நின்றாள்.

'தாங்க்ஸ் சார்... நிஜமா சொல்றேன், எனக்கு இப்ப இருக்கற ஒரே நண்பர் நீங்கதான்!' என்றவள், கடிதத்துடன் கீழே இறங்கிப் போனாள்.

எட்டரை மணி சுமாருக்கு ஈஸ்வரி மேலே வந்தாள்.

'என்ன ஈஸ்வரி?'

'இந்த வார 'ராணி' பத்திரிகை கொண்டுவந்திருக்கீங்களான்னு அக்கா கேட்டுவரச் சொல்லிச்சு...'

'கொண்டு வரலே. மறந்துட்டேன். திங்கக்கிழமை கட்டாயம் எடுத்துட்டுவரேன்னு சொல்லு.'

'சரி சார்.'

அவள் போனதும் ஈஸிசேரில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டார்.

கல்லூரி ஆசிரியர்கள் சிலர் ஒன்றாகச் சேர்ந்து, ஆளுக்கு மாதம் பத்து ரூபாய் போட்டு அத்தனை தமிழ்ப் பத்திரிகைகளையும் வாங்கி, ஒரு சர்குலேட்டிங் லைப்ரரி ஆரம்பித்திருந்ததில், 'அம்மாவுக்கு வயசாகிவிட்டது, படிப்பது கஷ்டம்; எனக்கு இந்த சினிமா, பத்திரிகை இதிலெல்லாம் ஈடுபாடு இல்லை. எதற்கு தண்டமாய்?' என்ற எண்ணத்தில், இவர் முதலில் சேரவில்லை.

பிற்பாடு, 'படிக்கப் பத்திரிகை வாங்கமாட்டேன்னு சொல்றதுகூடப் பெரிசில்லே, சார்... ஆனா, எங்க ஆபீஸ் கிளப்புல மாசம் ஏழு ரூபா கட்டிப் புஸ்தகங்கள் எடுக்கக்கூட விடமாட்டேங்கறாரு! இவரு படிக்கறதில்லேங்கறதுக்காக, நாங்களும் பத்திரிகை படிக்கக்கூடாதுன்னா எப்படி சார்? சிவகாமி அக்கா எங்க போறா, சார்? அவளுக்காகவாவது வாங்கக்கூடாதா?' என்று ஒரு நாள் வேணியும் ஈஸ்வரியும் சேர்ந்து வருத்தப்பட்டுக்கொள்ள, 'சரி, நம்மால முடிந்த உபகாரமாக இருக்கட்டும்' என்று உடனே கல்லூரிக் கிளப்பில் சேர்ந்து, தினம் ஒரு புஸ்தகத்தை லோகநாதன் கொண்டுவரத் துவங்கிவிட்டார்.

வீட்டை விட்டு இந்தண்டை அந்தண்டை நகராத சிவகாமிக்கு, இந்தப் பத்திரிகைகள் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துவிட்டதை இப்போது நினைக்கையில், முதல்நாள் வேலை காரணமாக பத்திரிகை எடுக்காமலேயே வந்துவிட்ட தன் ஞாபகமறதி மேல் எரிச்சல் வர, அந்த உணர்வை திசைதிருப்ப வேண்டி, ஜன்னல் அருகில் சென்று தோட்டத்தை வேடிக்கை பார்க்க முற்பட்டார்.

(4)

நாலு நாட்களாக லோகநாதன் வீட்டு மொட்டைமாடி அமர்க்களப்படுகிறது.

வீட்டில் செய்த வடகத்தை வறுத்து, புளிசாதத்தோடு கீழ்வீட்டுக்கு

ஆண்டாளம்மா கொடுத்தனுப்ப, கால்மணியில் நொட்டைவிட்டுக்கொண்டு மாடிக்கே நடேசன் வந்துவிட்டார்.

'புளிசாதமும் வடகமும் பிரமாதம். போங்க! மணமும் ருசியும் வாயிலேயே நிக்குது! நீங்க அந்தக்காலத்து மனுஷி... விவரம் புரிஞ்சு பதார்த்தத்தை வீணாக்காம, பக்குவமா சமைக்கறீங்க... எங்க சிவகாமியுந்தான் சமைக்கறா, வாயில வெக்க வழங்கமாட்டாம!'

'ஏங்க அப்படிச் சொல்றீங்க? சிவகாமி காரியத்துக்கு என்னங்க குறைச்சல்?'

'ஆமா! அவ காரியத்தை நீங்கதான் மெச்சிக்கணும்! என் சம்சாரம் இருந்தவரைக்கும் அப்பளமோ வத்தலோ, கடையில வாங்கினதே இல்லே! இப்ப? நாக்குக்கு ருசியா ரெண்டு வத்தல் வறுத்து சாப்பிடுவோம்னாக்கூட, கடையில போய் வாங்கிட்டு வந்து வறுக்கவேண்டியிருக்குது! அதுவும் ருசியாவா இருக்குது? மண்ணாந்தையாட்டம், ஒரு வாசனையும் இல்லாம... ஹூம்... என தலையெழுத்து! நீங்க இன்னிக்குக் குடுத்தது என்ன வத்தல், ஆண்டாளம்மா? வாயில போட்டா கரையுதே?'

'வெங்காய வடகம்... உங்களுக்குப் பிடிச்சிருக்குதுன்னா சொல்லுங்க... அடுத்த வாரம் எனக்குப் போடறப்ப கொஞ்சம் உங்களுக்கும் தரேன்...'

'அதோ, வேணாங்க... வயசான காலத்துல உங்களுக்கு ஏன் வீண் தொல்லை?'

'ஒரு தொல்லையும் இல்லே. வெயில் மண்டைல ஓட்டை போடுது... கூழ் கிளறி வெச்சா, தன்னால காயுது!'

நடேசனின் முகம், வத்தல் கிடைக்கப்போகும் உற்சாகத்தில் மலர்ந்து போயிற்று.

'அப்ப சரி... வர்ற வெள்ளி, சனி, ஞாயிறு, மூணு நாளும் வேணி லீவுதான்... எல்லாரும் வீட்டுல சும்மாதான் இருப்பாங்க... என்னென்ன சாமான் வேணும்னு லிஸ்ட் குடுங்க, வாங்கிட்டு வரேன்.'

அன்றிரவு நடேசனின் ஆசையை மகனிடம் சொல்லி, 'பாவம் லோகு, வாய்க்கு ருசியா சாப்பிடணும்னு மனுஷன் பறக்கறாரு... நாலு தினுசு வத்தல் நமக்குப் போட்டப்ப, அவங்களுக்கும் சேர்த்துப் போட்டுக் குடுக்கறேன்... என்னப்பா?' என்றதும், 'தாராளமா குடுங்க... அவங்கக்கிட்டயிருந்து

சாமான்கள்கூட வாங்கிக்க வேணாம். அவங்களுக்குக் கொஞ்சம் குடுக்கறதுல நாம குறைஞ்சா போயிடுவோம்? ஆனா அம்மா, ஒண்டியா கிடந்து கஷ்டப்படாதீங்க... உங்களுக்கும் தள்ளலே... நடேசன் சொன்ன மாதிரி, அவர் பொண்களைக் கூடமாட ஒத்தாசை செய்யச் சொல்லுங்க...' என்று கூறினார்.

மறுநாளே பட்டியல் போட்டார்கள்.

சாமான்கள் வாங்கி வந்தார்கள்.

காசு செலவழிக்காமல் வத்தல் கிடைக்கப்போகும் செய்தி, நடேசனை இன்னும் சந்தோஷிக்கச் செய்ய, பெண்களை ஒரு நிமிஷம் சும்மா உட்கார விடாமல், 'ம்ம்... மாடிக்கப் போயி ஆண்டாளம்மாவுக்கு ஏதாச்சும் உபகாரம் பண்ணுங்க... வெட்டியா பொழுதைப் போக்காதீங்க!' என்று விரட்டிக்கொண்டேயிருந்தார்.

முதல் நாள் வேணி வடகம் பிழிந்தார்கள்.

இரண்டாம் நாள் ஜவ்வரிசியைக் கரைய விட்டு, கூழ் கிளறி, ஸ்பூனால் எடுத்து வைத்து, ஜவ்வரிசி வடகம் செய்தார்கள்.

விடியும் முன்பே எழுந்து மாடிக்குப் போய் மாவு கிளறி, வடகம் இட்டு, காககாய கொத்தாமல் காபந்து செய்து, மாலையில் துணியிலிருந்து பிய்த்து தாம்பாளத்தில் பரத்தி வைத்து...

அத்தனையிலும் ஆண்டாளம்மாவுக்கு மூவரும் செம்மையாய் உதவியே செய்தார்கள்.

அப்பாவின் விரட்டலிலிருந்து தப்புவதோடு, உப்பு உரைப்பாய் வடக மாவைச் சாப்பிடுவதும் சேர்ந்துகொள்ள, வேணியும் ஈஸ்வரியும் தனி உற்சாகத்தோடு வேலைகளில் ஈடுபட்டார்கள்.

வளவளவென்று இவர்களெல்லாம் பேசினால், சிவகாமி வாயைத் திறக்காமல் காரியத்தில் குறியாக இருப்பாள்.

கேள்வி கேட்டால் மட்டும் சன்னமான குரலில் பதில் வரும், அவ்வளவுதான்.

இன்றைக்குக் கடைசி காரியமாய் வெங்காய வத்தல்.

முதல்நாளே பச்சரிசியைக் களைந்து உலர்த்தி, ஐந்துக்கு ஒன்று என்ற விகிதத்தில் ஜவ்வரிசி போட்டு, நைசாக அரைத்துக்கொண்டு வந்தாகிவிட்டது.

அரைத்த கலவை, பட்டணம் படியில் ஒன்று இருந்தால், அதற்கு இரண்டு பெரிய சின்ன வெங்காயத்தையும் உரித்து வைத்துக்கொண்டு விட்டார்கள்.

விடி காலையில் நாலுக்கு எழுந்து கால்கிலோபோலப் பச்சைமிளகாயை மிக்ஸியில் விழுதாக அரைத்துக் கொடுக்க, உரித்த வெங்காயத்தை வேணியும் ஈஸ்வரியும் பொடியாய் அரிந்துவைக்க, ஈயம் பூசப்பட்ட அரை அடுக்கில் திட்டமாக ஜலம் வைத்து, உப்புபோட்டு, தளதளவென்று நீர் கொதித்ததும் மிளகால் விழுதை ஆண்டாளம்மா கலந்தார்.

வேணி மாவுக் கலவையை மெதுவாக வெந்நீரில் தூவினாள். சிவகாமி நீரைக் கரண்டியால் அழுத்திக் கலந்தாள்.

பத்துபோல இறுகிக்கொண்டு வந்ததும் இறக்கி, ஒரு தட்டைப் போட்டு சில நிமிஷங்களுக்கு மூடிவைத்துவிட்டுத் திறந்ததும், மாவு நன்றாகப் புழுங்கி வெந்துபோயிற்று.

தாம்பாளத்தில் லேசாக எண்ணெய் தடவி, கைச்சூடு பொறுக்கும் வகையில் ஒரு பெரிய உருண்டை மாவை எடுத்துக்கொண்டு, பொடியாய் நறுக்கிய வெங்காயத்தை இரண்டு கை போட்டு, இரண்டு எலுமிச்சம்பழத்தை ஓட்ட பிழிந்து, இழுத்து அப்பளத்து மாவு போலப் பிசைந்து, உருட்டி, ஒரு தாம்பாளத்தில் போட்டாள்.

இதைப் போலவே மொத்த மாவையும் உருண்டைகளாகத் தயார் பண்ணியபின், வெயில் ஏறும் முன் மொட்டை மாடிக்குச் சென்று, சீடை அலையில் கிள்ளி, ரொம்ப உருட்டாமல் வரிசைகளாகக் காயவைத்தார்கள்.

இரண்டு உருண்டைகளைக் கிள்ளி வைத்த பின், 'முதுகு வலிக்குது... நீ வைக்கறியா, சரியா?' என்று தங்கையைப் பணித்துவிட்டு, வேணி உள்ளே வந்து பானையிலிருந்து தண்ணீர் குடித்தாள்.

கூடத்தில் பேப்பரும் கையுமாய் உட்கார்ந்திருந்த லோகநாதன், அவளைப் பார்த்து சிரித்தார்.

'என்ன, ரொம்ப களைப்பா?'

வாயைத் துடைப்பால் துடைத்தபடி வேணி அவரருகில் வந்தாள்.

'ஸ. அப்படி!' என்று மின்விசிறிக்குக் கீழ் அமர்ந்தாள்.

'ஒரு நாலாயிரம் ஸ்கொயர் ஃபீட்டுக்கு அடியில உட்கார்ந்திட்டிருக்கறவருக்கு, அந்த வெயில் கொடுமை தெரியுமா? ஏன் சார், கேலி பண்ண மாட்டீங்க!'

லோகநாதன் சிரிக்க, அவருடன் சேர்ந்து சிரித்த வேணி, சட்டென்று சிரிப்பை நிறுத்தினாள்.

'ஒரு விதத்துல நீங்க ரொம்ப அதிர்ஷ்டசாலி, இன்னொரு விதத்துல ரொம்ப துரதிர்ஷ்டசாலின்னு நா நினைக்கறேன் சார்...'

லோகநாதன் புருவங்களைத் தூக்கினார்.

'இது என்ன புது ஆராய்ச்சி?'

'ஆமாம் சார், இந்த மாதிரி அன்பான அம்மா கிடைக்க நீங்க குடுத்து வெச்சிருக்கீங்க... ஆனா, ஆனா...'

'ஆனா?'

'இருவது வருஷத்துக்கும் மேலா தனிமரமாவே வாழறீங்களே, அதனால பாவம், சார்...'

ஒரு நிமிஷம் சும்மா இருந்துவிட்டு வேணி மெள்ள, 'ஒண்ணு கேட்டா தப்பா எடுத்துப்பீங்களா, சார்?'

'என்ன, பீடிகை பலமா இருக்கு?'

'இல்லே... உங்க சம்சாரம் எப்படி இறந்துபோனாங்கன்னு...'

லோகநாதன் கண்ணாடியைக் கழற்றி மேட்டியில் துடைத்துவிட்டு திரும்ப மாட்டிக்கொண்டார்.

'வியாதி வெக்கைன்னு ஒண்ணுமே இல்லே, வேணி... என் போறாத காலந்தான்... வேற என்ன சொல்ல? பிரசவத்துல அவ போயிட்டாம்மா.'

'ச்ச்... ஸாரி சார், உங்க சொந்த விஷயத்தைப் பேசறேன்னு நினைக்காதீங்க... நீங்க ஏன் அப்பறம் ரெண்டாங்கல்யாணமே செஞ்சிக்கலே?'

'செஞ்சிக்கணும்னு தோணலே... அதான்.'

'அப்படிக்கூட ஒருத்தரால இருக்க முடியுமா, சார்?'

'நா இருக்கேனே!' லோகநாதன் வேடிக்கையாய் சிரித்தார்.

வேணி முழங்கால்களைக் கைகளால் கட்டிக்கொண்டாள்.

பெரிதாய் பெருமூச்சு விட்டாள்.

'என்னாச்சு உனக்கு இன்னிக்கு, வேணி? ரொம்ப சீரியஸா என்னென்னவோ பேசறே?'

'சார்...'

'ம்?'

'ஒண்ணு கேட்டா தப்பா எடுத்துக்க மாட்டீங்களே, சார்?'

'பொச்சுடா! திரும்பவும் இதே பீடிகைதானா?'

'இல்லே, வந்து ... காதலைப்பத்தி நீங்க என்ன நினைக்கறிங்க?'

'ஏ... என்னது?'

லோகநாதன் அதிர்ந்துபோய் விழிக்க, அதை லட்சியம் பண்ணாமல், பார்வை எங்கோ நிலைகுத்த வேணி அமர்ந்திருந்தாள்.

'சொல்லுங்க சார்...'

'என்னம்மா இது, திடீர்னு இப்படியெல்லாம் கேக்கறே?'

'காரணமாயத்தான்... சொல்லுங்க...'

'இல்லை யதார்த்தப் பேச்சு எனக்கு அத்தனை தகுதி இருக்கறதா நா நினைக்கலே, வேணி... ஏன், சரியாச சொல்லணும்னா, இது விஷயமா அதிகமா ஒண்ணும் எனக்குத் தெரியாதுன்றதுதான் உண்மை!'

வேணி அவரை தீர்க்கமாகப் பார்த்தாள். தலையை இப்படியும் அப்படியும் திருப்பி, யாராவது அருகில் இருக்கிறார்களா என்று சுவனித்தாள். பார்வையைத் தரையில் வீசினாள். குரலைத் தழைத்துக் கொண்டாள். மெதுவாகப் பேசினாள்.

'உங்களை என் நல்ல சினேகிதரா நினைக்கறேன்னு சொன்னது நினைவிருக்கில்லே, சார்? உங்ககிட்ட ஒரு விஷயம் சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டீங்கன்னு நம்பறேன். மனசுவிட்டுப் பேச எனக்கு யாருமில்லே, சார். அதான் உங்ககிட்ட வந்து, சார்... வந்து.. எங்க ஆபீஸ்ல செந்தில், செந்தில்னு ஒரு கிளார்க் இருக்கார்... ரொம்ப நல்லவர், நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர். இதுநாள்வரைக்கும் யாரையும் தலைநிமிர்ந்து கூடப் பார்த்ததில்லே, சார்... ஆனா, வந்து... இப்ப கொஞ்ச நாளா என்னைப் பார்த்து சிரிக்கறார், காபி சாப்பிடலாம் வான்னு கூப்பிடறார்... உன்கிட்ட பேசணும்னு சொல்றார்... எனக்கு ஒரே உதைப்பா இருக்கு, சார்! என்ன செயறதுன்னே புரியலை! யார்கிட்டயாவது இதுவிஷயமா பேசாட்டி மண்டை வெடிச்சிடும் போல இருக்கு! அக்காகிட்ட பேசலாம்னா, அவளே கலியாணத்துக்கு இருக்கறவ... ஏதாச்சும் தப்பா எடுத்துக்கிட்டா என்ன

செய்யறதுன்னு பயமா இருக்கு! ஈஸ்வரி, ரெண்டாங்கெட்டான்... அப்பாகிட்ட உளறிட்டா, அவ்வளவுதான், கொன்னு போட்டுடுவார்! யோசிச்சுப் பார்த்தவரைக்கும், உங்களைத் தவிர எனக்கு வேற யாரும் தோணலை... அதான், வந்து... சார்... எனக்கு ஒண்ணுமே புரியலை... பயமாக்கூட இருக்கு, சார்...'

நீளமாய் பேசிவிட்டு வேணி முழங்கால்களில் முகத்தைப் பதித்துக்கொண்டாள்.

லேசாக நடுங்கும் விரல்கள்.

சின்னதாகச் சிவந்துபோகும் காது மடல்கள்.

நிமிர்ந்து பார்க்க வெட்கப்படும் பார்வை.

ஓ! என்ன இதெல்லாம்!

தனக்குள்ளே எதையெதையோ அடைத்துவைத்துக்கொண்டு அவஸ்தைப்படுபவளைக் காண்கையில், லோகநாதனுக்குப் பாவமாக இருந்தது.

இளவயசு... வயசுக் கோளாறு.

இவள் எண்ணுவதிலும், பேசுவதிலும், யூசைப்படுவதிலும் என்ன தவறு? யோசனையுடன் வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசினார்.

'வேணி...'

'ம்?'

'நா உனக்கு நண்பன்தான், தாராளமா உன் பிரச்சினைகளை நீ என்கிட்ட பேசலாம். இப்ப நா சில கேள்விகளக் கேக்கப்போறேன்... அத்தனைக்கும் உண்மையான பதிலைச் சொல்லணும்... என்னம்மா?'

'கேளுங்க சார்...' குனிந்த தலை நிமிராமலேயே வேணி பதில் கூறினாள்.

'அந்தப் பையன்... என்ன பேர் சொன்னே? அ, செந்தில்... அவனை எத்தனை நாளா உனக்குத் தெரியும்?'

'சுமார் ரெண்டு வருஷமா, சார்... நா வேலைக்கு சேர்ந்தப்பவே அவர் அங்க இருந்தார்...'

'ம்ம்... பையன் நல்லவன்னு சொல்றே?'

'ரொம்ப நல்லவர், சார்... ஆபீஸ்ல அத்தனை பேர்கிட்டயும் நல்ல பேர்!

பொறுப்பா வேலை செய்வார்... மானேஜர், ஹெட் கிளார்க் எல்லாருக்குமே பிடிக்கும்! சீக்கிரமே பிரமோஷன்கூட வந்துடும்னு பேசிக்கறாங்க.'

'அப்படியா? என்ன வயசு?'

'இருபத்தியெழுன்னு சொன்னார், சார்...'

'அப்ப, வயசு என்னன்னு கேக்கற வரைக்கும் பேசிப் பழகியிருக்கீங்க!'

'.....'

'பதில் சொல்லாம தலையக் குனிஞ்சுக்கிட்டா எப்படி, வேணி? இதுல பயம் தயக்கம் எதுக்கு? தப்பா ஒண்ணும் நா கேட்டுடலியே? உங்களுக்குள்ள எத்தனை நாளா நல்ல பழக்கம்?'

'நல்ல பழக்கம் கெட்ட பழக்கம்னு ஒண்ணுமில்லே, சார்... நீங்க என்னை நம்பலாம்! உங்ககிட்ட நா ஏன் பொய் சொல்லப்போறேன்? நாலைஞ்சி மாசமா ரெண்டு பேரும் மனசுவிட்டுப் பேசிக்க ஆரம்பிச்சோம்... எங்கப்பா, அக்கா எதுத்தி அவர்கிட்ட நா சொல்லி வருத்தப்பட்டுக்குவேன். 'எல்லார் வீட்லயும் இப்படிப்பட்டவங்க இருக்காங்க. வீட்டுக்கு வீடு வாசப்படி'ன்னு அவர் வேதாந்தம் சொல்வார். பெத்தவங்களுக்கு அவர் ஒரே பிள்ளை, அடுத்து ஒரு தங்கச்சி அப்பா, ஆடிட்டர் ஒருத்தர்கிட்ட ஸ்மிடேஷியா இருக்கார். வசதின்னு சொல்ல முடியாட்டியும், பிக்கல் பிடுங்கல் எதுலில்லேன்னு சந்தோஷப்பட்டுக்குவார்.'

'அப்புறம்?'

'அவ்வளவுதான் சார்... வேற என்ன கேக்கறிங்க?'

'சாதாரண நட்புதான் உங்களுதுன்னா, நீ கலவரப்படத் தேவையே இல்லியே, வேணி?'

'அப்படியில்லே சார்... வந்து...'

'வந்து...?'

'போன வாரத்துல ஒருநாள் காண்டீனுக்குக் காபி சாப்பிடப் போனோம்... அப்ப செந்தில் சிரிச்சுனு, 'உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்குது, வேணி... நீ எனக்கு மனைவியா வரணும்னு விரும்பறேன்'னு சொன்னார்...'

'ம்...'

'எனக்குத் தூக்கிவாரிப்போட்டுடுச்சு! பதில் பேசத் தெரியலை... தலையக்

குளிஞ்சுகிட்டு வந்திட்டேன். ரெண்டு நாள் எதுவும் பேசாம இருந்தேன்... அப்பறம் அவராவே, 'நா ஏதாவது தப்பாப் பேசிட்டேனா?'ன்னு கேட்டார்...'

'ம்...'

'நீங்க தவறா பேசிடலே... ஆனா, எனக்குத்தான் எதுக்கும் குடுப்பினை இல்லே. எங்கப்பாவை உங்களுக்குத் தெரியாது'ன்னு சொன்னேன்... 'எனக்கு யாரைப் பத்தியும் கவலையில்லே, நீதான் முக்கியம். எத்தனை வருஷம் வேணுன்னாலும் நா காத்திருக்க ரெடி'ன்னு சொன்னார். எனக்குப் படபடன்னு வந்திருச்சு... அழணும்போல இருந்துச்சு! நா என்ன சார், செய்வேன்? நீங்கதான் எனக்கு புத்தி சொல்லணும்...'

வேணியின் கண்கள் கலங்கிப்போய், உதடுகள் துடிக்க முற்பட்டன.

ஒரு நிமிஷ மௌனத்துக்கு பின் லோகநாதன் மெதுவாகக் கேட்டார்...

'உனக்கு அவனைப் பிடிச்சுதா, வேணி?'

'... ... ...'

'தயங்காம சொல்லும்மா...'

'ம்...'

'கல்யாணம் கட்டிகிட்டு ஆயுசு பூரா வாழற அளவுக்கு?'

'அவர் நல்லவர், சார்... அவரை விட நல்ல மாப்பிள்ளை நிச்சயம் எனக்குக் கிடைக்க மாட்டார்...'

லோகநாதன் எழுந்து இப்படியும் அப்படியும் நடந்தார். நெற்றியைத் தேய்த்துக்கொண்டு யோசித்தார். நாற்காலியில் திரும்ப அமர்ந்து வேணியைப் பார்த்தார்.

'எது எப்படியானாலும், சிவகாமிக்கு ஒரு வழி பண்ணாம இந்தப் பேச்சை நாம எடுக்கறது நியாயமில்லே, வேணி... அது உனக்குத் தெரியும்னே நினைக்கறேன். கொஞ்சம் பொறுத்துக்க... செந்தில்கிட்ட நிலைமையை விளக்கு. உங்கப்பாகிட்ட நானே சிவகாமி விஷயமா பேசறேன். அவளை நல்லபடியா ஒருத்தர்கிட்ட ஒப்படைச்சிட்டா, ஏன், அந்த முகூர்த்தத்திலேயேகூட உங்க கல்யாணத்தையும் முடிச்சிடலாம்! யோசிக்கவேண்டிய விஷயம் இது. நீ நம்பிக்கையோட இரு... எதையும் நினைச்சு அவஸ்தைப்படாம இரு! அதே சமயம் வேணி, சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதே... நீயும் செந்திலும் கொஞ்சம் நிதானமாவே இருங்க...

என்னம்மா?'

வேணி வெட்கத்துடன் புன்னகை செய்தாள்.

'நீங்க பயப்படறபடி நாங்க நிச்சயம் நடந்துக்க மாட்டோம், சார்... அம்மாட்ட பல்க இருநூள்வரை கணமா கணத்துச்சு... உங்ககிட்ட அத்தனையும் கொட்டினப்பறம் லேசா ஆயிடுச்சு...'

அவள் முடிக்கு முன மொட்டைமாடியிலிருந்து, 'அங்க என்ன பண்றே, வேணி? நான் சமைக்கப் போகணும், நீ இங்க வந்து மாவைக் கிள்ளி வை...' என்று ஆண்டாளம்மா குரல் கொடுக்க, 'வந்திட்டேம்மா...' என்றபடியே வேணி எழுந்து போனாள்.

வேணி தோற்றத்தில் சிவகாமியைப் போன்றவள் இல்லை.

கலரும் அதில் இல்லாவிட்டாலும், மாசுமரு இல்லாத நிறம். லட்சணமாய் வெட்டிவிட்ட கூந்தல், கண், உதடுகள், சின்ன இடை... திட்டமாய் மார்பகங்கள்.

மொத்தத்தில் நன்றாக அலங்கரித்துவிட்டால், கவர்ச்சியானவள் என்று சொல்லலாம்தான் பிரிவுதான்.

இருபத்திரண்டு வயசு...

பெருகிய ஆசாபாசங்கள், விதவிதமான ஆசைகள் பிறந்து வளரும் பருவம்.

பக்கத்து சீட் செந்தில் தனிப்பட்ட ஆணாகத் தெரிவதில் ஆச்சர்யம் என்ன!

இரவு வெட்டி தலைதுவிந்து, 'காதலைப்பத்தி என்ன நினைக்கறீங்க, சார்?' என்று கேட்பதில் வியப்பு என்ன!

நோகநாதனுக்கு சந்தோஷமாக இருந்தது. அதே சமயத்தில் பயமாகவும் இருந்தது.

வேணியைப் புரிந்துகொண்டு அவளை ஆதரிக்க வலிய ஒருவன் முளைத்திருப்பதில் சந்தோஷம்.

கொஞ்சகாலம் அப்பாவை நினைத்தால், பயம்.

அதனும் இருபத்திரண்டு வயசில் துறவி மாதிரி எந்த ஆசாபாசங்களையும் மனசில் காட்டிக்கொள்ளாமல் கணமதாங்கியாகக் குடும்பப் பொறுப்பைச் சுமந்து சிவகாமிக்கு ஒரு வழி பண்ணினால்தானே இவள் ஆசை நிறைவேற

முடியும் என்பதை நினைக்கையில், அவருடைய பயம் கூடிப்போயிற்று.

சிவகாமியை ஒருத்தன் கையில் பிடித்துக்கொடுக்கும்வரை அந்த செந்தில் காத்திருப்பானா?

முதலில் சிவகாமியை ஒருத்தனுக்கு மனைவியாக்க நடேசன் முனைய வேண்டுமே!

இந்த வீட்டுக்குக் குடிவந்துவிட்ட ஏழெட்டு மாசங்களாக, அவர் எந்த ஒரு முயற்சியும் எடுத்துக்கொள்வதாகத் தெரியவில்லையே... அப்புறம்?

நடக்குமா?

வேணியின் ஆசை நிறைவேறுமா?

ரொம்பக் கவலையாக இருக்க, 'முருகா...' என்று வாய்விட்டு முனகிய லோகநாதன், ஈஸிசேரில் சாய்ந்து படுத்துக் கண்களை மூடிக்கொண்டார்.

(5)

லோகநாதன் வாசற் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தபோது, வேணி மகிழமரத்தடியில் பூ பொறுக்கிக் கொண்டிருந்தாள்.

இவரைக் கண்டதும் தலையைத் திருப்பி வாசல் வராந்தாவை ஒரு பார்வை பார்த்தவள், சட்டென்று கிட்டத்தில் வந்தாள்.

'உங்களுக்காகத்தான் காத்திட்டிருக்கேன், சார்... உங்களோட அவசரமா பேசணும். அம்மா கோயில் கதாகாலட்சேபத்துக்குப் போறப்ப நானும் கூடப் போயிடறேன்... நீங்க தயவுசெஞ்சு கொஞ்ச நாழி கழிச்சு கோயிலுக்கு வாங்க... ப்ளீஸ் சார்!'

சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டு வேணி திரும்ப மரத்தடிக்குப் போய்விட்டாள்.

என்னது ஏது என்று புரியாமல் லோகநாதன் அப்படியே நின்று விழித்துவிட்டு, மெதுவாக நகர்ந்தார்.

வேணி அவரிடம் மனம்விட்டுப் பேசி இருபது நாட்களுக்கு மேலாகிவிட்டன.

நடுநடுவில் தனிமை கிடைத்தால், 'அவர்கிட்ட உங்களைப்பத்தி

சொல்லிட்டேன், சார்...' என்பாள், 'அவர் உங்களை ரொம்ப விசாரிச்சார்...' என்பாள். அவ்வளவுதான். இன்றைக்குத்தான் புதுசாய், அலாதி படபடப்புடன், 'உங்களோடு பேசவேண்டும்' என்கிறாள்.

என்ன விஷயம்?

செந்திலுக்கும் அவளுக்கும் தகராறா?

காதலர்களின் ஊடலா?

இல்லை என்றால், 'காத்திருக்க முடியாது, நான் வேறு பெண்ணை மணந்து கொள்கிறேன்' என்று எதையாவது அந்த செந்தில் சொல்லிவிட்டானா?

அடக் கடவுளே!

அப்படி ஏதாவது என்றால், இந்தப் பெண்ணை யார் தேற்ற முடியும்?

இல்லை, இல்லை... வேணியின் முகத்தில் சந்தோஷம் கலந்த குழப்பம்தான் குடிகொண்டிருந்ததே தவிர, வருத்தம், வேதனை ஏதுமில்லை...

அதனால, சண்டை, பிண்டை நிச்சயம் இருக்க முடியாது!

அப்புறம், கேரேஜ்ல?

இதுபற்றிக்கொள்ளாமல் தவித்தவர், ஏழு மணிக்கு அம்மாவும் வேணியும் புறப்பட்டுச் சென்ற பின், அன்றைக்குக் கொணர்ந்திருந்த பத்திரிகையுடன் சிறிது நேரம் போனார்.

பூ கட்டிக்கொண்டிருந்த சிவகாமி, இவரைக் கண்டதும் எழுந்து நின்றாள்.

அந்த காலைநேர தலை, கசங்கிய புடவை, ஒட்டி உலர்ந்த தேகம்.

இவள் ஏன்னைக்காவது தலை வாரி, முகம் கழுவி, பளிச்சென்று உடை உடுத்துவாளோ?

ஏன இப்படி எதிலும் அக்கறையில்லாமல் இருக்கிறாள்?

அம்மா கூட தான், 'வயசுப் பொண்ண, இப்படி அழுது வழிஞ்சுகிட்டு இருந்தா எப்படி, சிவகாமி? வாயில் புடவை ஒண்ணை நல்லதா உடுத்திகிட்டா என்னவாம்?' என்று கேட்க, சிவகாமி பதில் பேசாமல் புன்னகை பூக்க, கூட இருந்த வனஜா மட்டும், 'அக்காகிட்ட வாயில் புடவையே கிடையாது... அம்மா கொச்சிலுப் போன பழைய சின்னாளம்பட்டுப் புடவைங்களைத்தான் அக்கா கட்டுறாங்க. அப்பா சொல்லிட்டார், வேலைக்கும் காலேஜுக்கும்

போறதால, வேணிக்கும் எனக்கும் மட்டும் வருஷம் நாலு வாயில் புடவை வாங்கிக் குடுப்பார். அதுகூட ஏகத் திட்டுங்களோடத்தான் கிடைக்கும்!' என்று பதில் சொன்னது, இப்போது நினைவுக்கு வர, இதயத்தில் சுருக்கென்றது.

'உக்காரு சிவகாமி, ஏன் நிக்கறே?' என்றவர், பத்திரிகையை அவளிடம் நீட்டினார்.

'அப்பா இல்லியா?'

'பின் பக்கம் இருக்கார், கூப்பிடவா?'

'வேணாம், வேணாம்... சும்மாதான் கேட்டேன், நா காலாற கொஞ்சம் நடந்துட்டு வரேன்.. அப்பா கேட்டா சொல்லு..'

அவள் தலையசைக்க, லோகநாதன் வராந்தாவுக்கு வந்து செருப்பை மாட்டிக்கொண்டு படியிறங்கினார்.

இவர் கோவிலை அடைந்தபோது, வேணி ஆஞ்சநேயரை வலம் வந்து கொண்டிருந்தாள்.

'என்ன ஆஞ்சநேயரைக் காக்காப் பிடிக்கிறயா? அம்மாகிட்ட என்ன சொன்னே?'

'ஆஞ்சநேயரை நூத்தியெட்டுதரம் சுத்திட்டு வரேன்னு சொல்லிட்டு வந்தேன்..'

'பொய்யா? இல்ல, சுத்தப்போறியா?'

'கொஞ்சம் நிஜம், நிறைய பொய்! என்ன சார், செய்றது? வீட்டுலயே பேச முடிஞ்சா நா இந்த பொய்யை ஏன் சொல்றேன்? தெய்வம் புரிஞ்சுக்கும்.'

இரண்டு பேரும் பிள்ளையார் சந்நிதி எதிரில் ஒருபக்கமாய் உட்கார்ந்தார்கள்.

சுற்றிவளைக்காமல் உடனே விஷயத்துக்கு வேணி வந்தாள்.

'ரெண்டு நாளா செந்தில் என்னைப் பிடுங்கியெடுக்கிறார் சார்.. அவங்க அப்பா, அம்மாகிட்ட என்னைப்பத்தி சொல்லிட்டாராம்.. 'உனக்குப் பிடிச்சா எங்களுக்கு சம்மதம்'னு சொல்லிட்டாங்களாம்! 'உன்னைப் பார்க்க எங்கம்மா ஆசைப்படறாங்க.. நீ ஒரு நடை வீட்டுக்கு வந்துட்டுப் போ'ன்னு தொணதொணக்கறார்... எனக்கு ஒரே குழப்பமா இருக்கு... நீங்க என்ன

சொல்றீங்கன்னு கேக்கலாம்னுதான்...'

இது என்னடா, புதுத் திருப்பம்?

சாதாரணமாக, 'உங்க வீட்டுல எப்ப சொல்லப்போறீங்க?' என்று பெண் தரப்பில் வழக்கம். இங்கே தலைகீழாக அல்லவா இருக்கிறது! சம்மதம் சொல்லி, தன் எதிர்கால மனைவியை அம்மாவிடம் காட்ட செந்தில் துடிப்பது அதிசயமாக அல்லவா இருக்கிறது!

'என்ன சார், சும்மா இருக்கீங்க?'

'இருங்கம்மா... யோசனை செய்யாம தடக்குனு பேசற சமாச்சாரமா இது?'

ரிடையர்டு நிபிஷங்கள் போல சும்மா இருந்துவிட்டு லோகநாதன் சொன்னார்.

'உனக்கு சம்மதமுன்னா.. எனக்கு காலேஜ் கிடையாது, நா பன்னிரெண்டு மணி வாக்குல உங்க ஆபீஸுக்கு வரேன், செந்திலைச் சந்திக்கப்போறேன்... என்ன சொல்றே நீ?'

'ஓ! தாராளமா சார்! உங்களால வர முடியுமா? செந்தில்கூட உங்களைப் பார்த்துப் பேசணுமுன்னு சொல்லிட்டிருந்தார்.. நீங்களே வரேன்னு சொன்னா, உண்மையிலேயே சந்தோஷப்படுவார்! அவசியம் வாங்க, சார்!'

வேணி தனது கேட்ச் எழுந்து போனதும், சில நிமிஷங்களுக்குக் காற்றை அலுப்பாக்கிய திருப்தியில் அமர்ந்திருந்துவிட்டு, மணி எட்டைத் தொடுகையில் லோகநாதன் வீட்டுக்குப் போக எழுந்தார்.

மறுநாள் அவர் அந்த அலுவலகத்தில் நுழையும்போது சரியாய் பன்னிரெண்டு மணி.

வேணியை பெறுமாற ரிசப்ஷனில் சொல்லிவிட்டு அங்கிருந்த மர சேரில் உட்கார்ந்தார்.

பத்து நிமிஷத்துக்குள் வேணி வெளியில் வந்தாள்.

கூடவே ஓர் ஆண்மகன்.

திரும்பி அவனைப் பார்த்த லோகநாதன், திடுக்கிட்டுப் போனார்.

உயரமும் பருமனுமாய், வடக்கத்திக்காரன் போல சிவப்பாய், ராஜா மாதிரி இல்லை... ராதிரி, சினிமா நடிகன் மாதிரி.

இவனா வேணியைக் காதலிக்கிறான்?

இவனோடு ஒப்பிடுகையில் வேணி ரொம்ப சாதாரணமாயிற்றே?

எப்படி ஒப்புக்கொண்டான்?

உண்மைக் காதலுக்குத் தடை எதுவுமில்லை என்பார்களே, அதுதானா?

சட்டென்று லோகநாதனுக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

கையைக் கொட்டிக்கொண்டு சின்னப் பிள்ளையாய் குதிக்கவேண்டும் போல இருந்தது.

'சார், இவர்தான்...' வேணி இழுத்தாற்போல பேசி நிறுத்த, 'வணக்கம் சார்...' என்றான் செந்தில் பணிவுடன்.

லோகநாதன் கண்களில் கனிவு கசியப் புன்னகை செய்தார்.

'பர்மிஷன் வாங்கிட்டு வந்திட்டோம், சார்.. சாப்பாட்டு நேரமாச்சே, எங்கயாவது போய் சாப்பிடலாமா? உங்களுக்கு ஆட்சேபணை ஒண்ணும் இல்லியே?'

'எங்க வேணா போகலாம்... ஆட்சேபணை இல்லை.. ஆனா, செலவு என்னுது! சரின்னா, நானும் ரெடி!

மூவரும் கிளம்பினார்கள்,

டாக்ஸி ஒன்றை அமர்த்திக்கொண்டு ஓட்டலுக்குச் சென்றார்கள்.

'வேணி எல்லா விவரமும் சொன்னா, செந்தில்... இப்ப உடனே உங்கம்மாவைச் சந்திக்கணுமா? கொஞ்ச நாள் போகக்கூடாதா?'

'இவளை நான் கட்டிக்கப்போறது உறுதியாயிட்ட விஷயம், சார்.... இவதான் என் மனைவின்னு தீர்மானமாயிட்டதால அம்மா இவளைப் பார்க்க ஆசைப்படறாங்க... இதுல தப்பு ஒண்ணுமில்லையே, சார்?'

'சரி, ஆனாலும் இவ வீட்டுல இப்போதைக்கு இந்த பேச்சை எடுக்க முடியாதே! சிவகாமியையும் நினைச்சுப் பார்க்கணும், இல்லியா?'

'அதெல்லாம் நா நினைக்காம இல்லே, சார்... எங்கம்மாவுக்கு நா ஒரே பிள்ளை... எனக்குக் கீழ ஒத்தை தங்கச்சிதான். பிள்ளைக்கு வரப்போறவ எப்படியிருக்கான்னு பார்க்க அவங்க துடிக்கறது நியாயந்தானே?'

'நியாயந்தான்...'

[illegible] நாங்க ரெண்டு பேரும் தனியா எங்கயும் போனதில்லை, [illegible] நா கூப்பிட முடியலே, கூப்பிட்டா வேணியும் வரமாட்டா! எனக்குத் [illegible] தனியாப் பேசணும்னா, ஆபீஸ் காண்ட்டீன்ல பேசுவோம்... [illegible] அம்மாவப் பார்க்க அழைச்சிட்டுப் போறேன்னு வேற [illegible] கூட்டிட்டுப்போயிடுவேனோன்னு நீங்க பயப்படறீங்களா சார்?'

[illegible] அலட்சியமாய்ப் பேசினார்.

'[illegible] அந்த பயமெல்லாம் எனக்கு இல்லே, செந்தில்...'

'[illegible] உங்க தயக்கம் என்னன்னு நா தெரிஞ்சுக்கலாமா?'

'[illegible] சந்திக்க இவ வரான்னே வெச்சிக்கங்க... அப்பறம்? [illegible] நான் கூப்பிச்சு, 'நிச்சயதாம்பூலத்தை வெச்சிக்கலாம்'னு சொல்ல [illegible]? அதுக்காவுக்கு ஆகலேங்கறதுக்காக என் மகன் எத்தனை [illegible] காத்திருக்கிறது?'னு கலிச்சுக்க மாட்டாங்களா?'

'[illegible] சார்... அவங்களுக்கு இவ குடும்ப நிலை நல்லாவே தெரியும்' [illegible] பதில் சொல்லாமல் சாப்பிடுவதில் லோகநாதன் முனைந்தார்.

[illegible] சாப்பிடுகையில் எதோ நினைவுக்கு வந்தவராய், 'ஆமா, [illegible] கூட்டம் கண்டிப்பா உங்களுக்குத் தெரியுமில்லே? இன்ன பஸ்ஸுல [illegible] இன்ன பஸ்ஸுல நிறும்னும்னு கண்டிச்சு வெச்சிருக்கற டிஸிப்ளின் [illegible]! அப்படியும் எப்படிப் போறது, வர்றது? என்னம்மா வேணி?' [illegible] கேட்க, வேணி தண்ணீர் லோட்டாவை'ணங்'கென்று கண்டினாள்.

'[illegible] நா அலசிப்பார்த்தாச்சு, சார்... பொய் சொல்லிட்டுதான் [illegible]! அதுகூடக் கஷ்டம்... சினேகிதி வீட்டுக்குனு [illegible] கிளம்பினா, யார், எங்கேன்னு துருவுவார்! மாட்டிக்கறது [illegible]'

'[illegible]'

'[illegible] அரை நாள் கூட பண்ணிட்டுப் போயிட்டுவர்றதைத் [illegible] வேற வழி இல்லே...'

[illegible] ஆச்சர்யமாக இருந்தது.

[illegible] தர்றதுக்கு வேணி யோசனை பண்ணி வைத்திருக்கிறாளா?

இவ்வளவு ஆழமாகச் சிந்திக்கவேண்டுமென்றால், இதில் எத்தனை ஈடுபாடு இருக்கவேண்டும்?

மாறிமாறி இருவரையும் பார்த்தபோது ஆத்மார்த்தமாகக் காதல்வயப்பட்டிருப்பவர்களை இனியும் சங்கடத்தில் ஆழ்த்தக்கூடாது என்றே தோன்றியது.

குரலைக் கனைத்துக்கொண்டார்.

'செந்தில் ஆசைப்படறதுலயும் நியாயம் இருக்கத்தான் செய்யுது.. வர்ற வாரத்துல ஒரு நடை நீ போய அவங்கம்மாவைப் பார்த்துட்டுவர்றதுல தப்பு ஒண்ணுமில்லேன்னுதான் எனக்குப்படுது! எதுக்கும், எல்லா விஷயத்துலயும் ஜாக்கிரதையாவே இருங்க!'

பெரியவராய் லட்சணமாய் தமக்குத் தெரிந்த புத்திமதிகளைச் சொல்லி, அவர்களை வாழ்த்தவும் செய்துவிட்டு லோகநாதன் கிளம்பினதும், வேணியும் கூடவே கிளம்பினாள்.

ஓர் ஆட்டோ பிடித்து இருவரும் வீட்டு வாசலில் இறங்க, தோட்டத்தில் நின்றிருந்த நடேசன், 'என்னது? ரெண்டு பேரும் ஒண்ணா வர்றீங்க?' என்றார், கண்களை இடுக்கிக்கொண்டு.

'சினேகிதனைப் பார்த்திட்டு வந்திட்டிருந்தேன்... பஸ்லேருந்து இவ இறங்கினா... நடப்பானேன்னு, கூடவே அழைச்சிட்டு வந்திட்டேன்...'

வாயில் வந்த காரணத்தைச் சொல்லி சமாளித்தவர், மேற்கொண்டு அங்கு நிறறால் நடேசன் தொடர்ந்து வாயைக் கிளறலாம் என்ற பயத்தில் அவசரமாய் மாடிப்படிகளில் ஏறி மேலே போனார்.

(6)

வேணிக்கு மூச்சிரைத்தது.

காதோரங்கள் சிவந்திருந்தன.

கண்ணில் அலாதி மினுமினுப்பு.

மறுநாள் வகுப்பில் பாடம் எடுப்பதற்காகக் குறிப்புகள் எழுதிக்கொண்டிருந்த லோகநாதன், வியப்புடன் அவளை நோக்கினார்.

'என்ன சமாச்சாரம்? இப்படித் தலைதெறிக்க ஓடிவரே?'

'காலேஜ்லேருந்து நானும் துடியாத் துடிச்சுகிட்டிருந்தேன், சார்... ரெண்டு திரியும் கிடைக்காதா, உங்ககூட பேசமாட்டேனான்னு! இப்பத்தான் சமயம் வாய்ச்சிது. அப்பா வயிறு சரியில்லேன்னு சோடா வாங்கி, பெரம்பூர் வரைக்கும் போயிருக்கார்... அதான் ஓடிவந்தேன்.'

மேனி இருப்பதிகொள்ளாமல் தவித்த மாதிரி, மாலையில் கூடுதிரும்பி வீட்டுக்கு வந்ததுமே லோகநாதனுக்குத் தோன்றியது கண்ணடிதான்.

மாணவர்களிடம் சினிமாவோடு இவர் பேசிக்கொண்டிருக்கையில் இரண்டு தரம் அவளுடைய செல்லுக்குப் பாடம் சொல்லித்தந்த நாழிகையில் ஒரு தரமும் கண்டு விடாப்பார்த்துவிட்டுப் போனாள்.

'என்ன வேணி?' என்று இவர் கேட்டதும், 'ஒண்ணுமில்லே சார், பக்கத்தில் வந்ததால் சும்மா வந்தேன்...' என்று சொல்ல, அதோடு சரி.

இப்போது தனிமை கிடைத்ததும் அவள் தானே ஓடிவந்திருக்கிறாள்.

'அப்பா எங்க சார்?'

குரலைத் தாழ்த்திக்கொண்டு கேட்க, சிரிப்புடன் அவர் சமையல்கட்டைக் காட்டினார்.

'சார், இன்னிக்கு நா அவங்க வீட்டுக்குப் போயிருந்தேன்...'

ஓ! அதுதான் இத்தனை பரபரப்பா!

'மதியம் மீல்ஸ் போட்டுட்டு ரெண்டு பேரும் ஒண்ணாவே போனோம். அம்மாகிட்ட சொல்லிட்டு வந்திருப்பார் போலருக்கு... அவங்க சாப்பிட்டிருந்தாங்க. ரொம்ப நல்லவங்க, சார்... நிறம், மூக்கு எல்லாம் அசல் செத்திலதான்! பக்கத்துல உக்கார வெச்சுகிட்டுத் தலையத் தடவிக்கொடுத்து, கையப் பிடிச்சுகிட்டு பேசினாங்க... அவங்களை மாமியாரா அடைய தான் குடுத்துவெச்சிருக்கணும்!'

இத இத... பட்டாக்கத்தி... நிதானமா, என்னென்ன கேட்டாங்க, நீ பதில் என்ன சொன்னே... எல்லாம் விவரமா சொல்லு!'

'அப்பா அம்மா பத்தி கேட்டாங்க... சிவகாமி அக்காவைப்பத்தி

அக்கறையா விசாரிச்சாங்க... எல்லாத்துக்கும் பதில் சொன்னேன். இன்னும் ஒரு வருஷத்துக்குள்ளயாவது அவளுக்குக் கல்யாணம் நடந்திடாதான்னாங்க. நடந்திட்டா தேவலைன்னு சொன்னேன். வேற என்ன பதில் சார், நா சொல்ல முடியும்? இனிப்பு, காரம் தானே செஞ்சு சாப்பிடச் சொன்னாங்க... தன் கையால பூவை தலைல வெச்சுவிட்டாங்க. அப்பறம் சார், குங்குமத்தை நெத்தில இட்டு, வெத்தலை பாக்கோட ரவிக்கைத் துண்டு ஒண்ணு வெச்சுக் குடுத்தாங்க...'

'அடிசக்கை, விஷயம் அத்தனை தூரத்துக்கு போயாச்சா! ரவிக்கைத் துண்டை அப்பா கண்ணுல காட்டாம மறைச்சுத்தானே வெச்சிருக்கே?'

வேணி விரலால் தரையில் கோலம் போட்டாள்.

'எப்படி சார், இங்க எடுத்துட்டு வர்றது? தெரிஞ்சா அப்பா கொன்னுடுவாரே! வர்ற வழியில ஒரு டெய்லர் கிட்ட தைக்கக் குடுத்திட்டேன்... ரவிக்கையா இருந்தா அவருக்குத் தெரியாது!'

லோகநாதன் அக்கறையுடன் அவளைப் பார்த்தார்.

'கூலிக்குக் காசு இருக்கா? அண்ணாடம் பஸ் கார்ஜ் ம'டுந்தானே உங்கப்பா குடுக்கறார்?'

'செந்தில் வாங்கிட்டுவரேன்னு சொன்...'

அவள் முடிப்பதற்குள் கேட் ஓசைப்பட, 'அப்பாதான்... நா வரேன், சார்...' என்று ஓட்டமாகக் கீழே இறங்கி ஓடினாள்.

லோகநாதன் துண்டை உதறிப்போட்டுக்கொண்டு மொட்டைமாடிக்குச் சென்றார்.

அமாவாசைக்கு இன்னும் இரண்டு நாட்கள்தான் பாக்கி.

வானம் முழுவதும் நூற்றுக்கணக்கில் நட்சத்திரங்கள்.

காற்று உடம்புக்குச் சுகமாக இருந்தது.

ஈஸிசேரைப் பிரித்துப் போட்டு சாய்ந்தார்.

உள்வேலை முடிந்து, அவர் தாயார், பக்கத்தில் வந்து உட்கார்ந்தார்.

'லோகு...'

'என்னம்மா?'

'கொஞ்ச நாளாவே உன்னண்ட ஒண்ணு கேக்கணும்னு நினைக்கறேன்...'

வேலுக்கன்னு...'

'அந்தப் பொண்ணு வேணிக்கு ஏதாவது பிரச்சினையா?'

லோகநாதன் திடுக்கிட்டு முன்னால் வந்தார்.

'என்னம்மா அப்படிக் கேக்கறீங்க?'

'இல்லே... அடிக்கடி உன்னண்ட வந்து என்னவோ குசுகுசுன்னு பேசிட்டுப் போறாளேன்னுதான்...'

லோகநாதன் பொறுமையுடன் சாய்ந்தார்.

அம்மாவுக்கு மனசில் என்னவோ தோன்றிவிட்டது.

இனியும் மறைத்தால், வீணாக வேண்டாததைக் கற்பனை பண்ணிக்கொள்ளலாம்.

'என்னம்மா?'

'உண்மையிலேயேமா... நா சொல்லப்போறதை உங்க மனசுலயே வெச்சுக்கறதா சத்தியம் பண்ணிக்கொடுக்கணும்... ஒருத்தரை ஒருத்தர் விரும்பறாங்க, கட்டிக்க ஆசைப்படறாங்க! ரெண்டு மாசம் முன்னால வேணி இதைப்பத்தி சொல்லி, 'நீங்க என்ன சொல்றீங்க?'ன்னு கேட்டா. 'நல்ல பையன், நல்ல குடும்பம், எனக்கும் அவரைப் பிடிச்சிருக்குன்னு ஒத்துக்கிட்டா. போன வாரம் நானே அவ ஆபீஸுக்குப் போய் அவனை சந்திச்சேன். வசதி அதிகம் இல்லாட்டாலும், ஆள் ராஜா மாதிரி இருக்கான்! குணவானாவும் தெரியறான். இந்த சம்பந்தத்துல தான் இருக்கலாம் தெரியலே. ஆனாலும், 'கொஞ்சம் பொறுத்துக்கங்க... சிலகாலத்துக் கல்யாணம் ஆயிட்டும். அப்பறம் உங்க பேச்சை மீறமாட்டோம்'னு சொல்லிவந்தான். அதான் அப்பப்ப வந்து என்கிட்ட விவரம் சொல்லிட்டுப் போறா.'

அம்மா பதில் கூறாமல் யோசனையில் ஆழ்ந்தார்.

'தான் பிடித்து அவங்க செய்றது சரின்னு சொல்றது நியாயமா, லோகு? வேணி பக்கமும் பெத்தவங்க இருக்காங்க, இல்லே?'

'சொல்லிவரட்டா, தான் தகப்பன் பிள்ளைவிளக்கு காட்டிட்டாங்கம்மா...'

'அந்த ரெண்டு வார்த்தையும் இந்த நரசிம்மமூர்த்திய யார் சரிக்கட்டறது?'

'அந்தப் பொண்ணுக்காக நாமதான் கொஞ்சம் முனையனும்மா... அதுக்கும் வேற நாதி இல்லே, பாவம்.'

'வேணிக்கு நல்ல இடம் குதிர்ந்தா எனக்கு மட்டும் திருப்தி இல்லியா? ஆனாலும், சிவகாமியையும் நாம நினைக்கணுமே?'

'அது விஷயமா நானே உங்ககிட்ட பேசணும்னு இருந்தேன். ஏம்மா, நம்ப ராமு அத்தான் ஒரு தரகர்தானே? அவர்கிட்ட சொன்னா, சிவகாமிக்கு ஏத்த விஷயத்துல ஒரு வரனைக் கொண்டுவராமலா போயிடுவார்?'

'தங்கமா கொண்டுவருவான்! ஆனா, அவன் விலாசம் உன்கிட்ட இருக்கா?'

'தேடிப் பார்த்தா பழைய கடிதாசிங்களோட கிடக்கும்... அது மட்டுமில்லே! முதல்ல இந்த நடேசன் அவளைக் கட்டிக்குடுக்கத் தயாரான்னு தெரிஞ்சுக்கணும்...'

'பின்னே? அவரு உத்தரவு இல்லாம நாம யாரு எதுவும் செய்றதுக்கு!'

'நாளைக் காலைல பேப்பர் படிக்க அவர் மாடிக்கு வர்றப்ப, நீங்களே பெரியவங்களா இந்தப் பேச்சை எடுங்களேன்...'

பேசிக்கொண்டது போலவே மறுநாள் காலையில் மாடிக்கு வந்தவரை அம்மாவும் பிள்ளையுமாய்ப் பிடித்துக்கொண்டார்கள்.

'சிவகாமிக்கு வயசாயிட்டுப்போவுது... இன்னும் சும்மா இருந்தா எப்படிங்க?'

ஆண்டாளம்மா பேச்சை எடுத்ததும், கண்ணாடியை இறக்கி, 'நானும் முனையத்தான் செய்யறேன்... ஒண்ணும் குதிரலையே! அவ அதிர்ஷ்டம் அப்படி!' என்று சொல்லிவிட்டு நடேசன் திரும்ப பேப்பரில் அழ்ந்தார்.

'எங்க உறவுக்காரரு ஒருத்தர் தரகரா இருக்கார்... வேணுன்னா, வரன் பார்க்கச் சொல்லி அவருக்கு எழுதட்டுமா?'

'ம்ம்...'

'பொண்ணைப்பத்தி விவரம் சொன்னாதானே, தோதா பிள்ளை பார்க்க முடியும்? இருவத்தியெட்டு வயது, வடபால கோத்திரம், உத்தராட நட்சத்திரம்னு தெரியும்... பொண்ணுக்கு என்ன செய்வீங்கன்னு தெரிஞ்சா...'

நடேசன் எரிச்சலுடன் பேப்பரைத் தழைத்தார்.

'முதல்ல பொண்ணை வந்து பார்த்து அவங்க சரின்னு சொல்லட்டும்... அப்பறமா மத்த விவரங்களப் பேசிக்கலாம்!'

அன்றைக்கே ராமு அத்தானின் விலாசத்தை லோகநாதன் தேடியெடுத்து அம்மா சொற்படி ஒரு கடிதத்தை, 'இங்கே எங்கள் வீட்டுக்காரருக்கு மூன்று பெண்கள் இருக்கிறார்கள். மூத்தவள் பெயர் சிவகாமி, வடபால கோத்திரம், உத்தராட நட்சத்திரம், இருபத்தியெட்டு வயசு. பத்தாவது வரை படித்திருக்கிறாள். பார்க்க சுமாராக இருந்தாலும், குணம் தங்கம், காரியத்தில் படு சமர்த்து. சீர் செனத்தி சாதாரணமாகச் செய்வார்கள். நருந்த வரன்கள் இருந்தால் உடனே விவரம் தெரிவிக்கவும்' என்று எழுதி அன்றே தபாலிலும் சேர்த்தார்.

மறுவாரம் ராமு அத்தான் பதில் கடிதம் போட்டார். இரண்டு பையன்கள் கையில் தயார் என்று விவரங்களோடு குறிப்பிட்டு, பெண் பார்க்க எப்போது வரலாம் என்றும் கேட்டிருந்தார்.

லோகநாதனுக்கு ஏக குஷி.

உற்சாகத்தோடு மீமே போய் நடேசனிடம் கடிதத்தைக் காட்ட, அதைப் படித்துவிட்டு அவர் உதட்டைப் பிதுக்கினார்.

'இந்தத் திட்டக்குடி வரன் வேணாம், சார்... படிக்காத மாப்பிள்ளை, சரிப்படாது! விவசாயத்தை நம்பிகிட்டிருக்கறவனுக்கு மகளைக் குடுக்க எனக்கு இஷ்டமில்லை!' என்றார்.

'ஐயே! அப்பா ஓட்டல் வெச்சு நடத்தரதா இல்லே குறிப்பிட்டிருக்கார்? பிள்ளை அங்கேயே சர்வரா இருக்கானா? வேணாம் சார்... ஒரு சமயம் போல வியாபாரம் இருக்காது... தின்னே தீர்த்துடுவாங்க! மண்குதிரைத் தொழில்... வேணாம்! கிட்டயே கொண்டுவராதீங்க!' என்றார்.

லோகநாதன் தன் பங்குக்கு எத்தனையோ சொல்லிப்பார்த்தார்.

'விவசாயத்தை ஏன் மட்டமாக நினைக்கவேண்டும்? தன் கையே தனக்கு உதவி என்று வாழலாமே! ஓட்டல் தொழில் மண்குதிரைத் தொழில் இல்லை'– என்று தொண்டைத்தண்ணீர்வற்ற வாதாடிப்பார்த்தார்.

ம்ஹூம்– நடேசன் அசையவில்லை.

'அரசாங்க உத்தியோகம், இல்லே, பாங்க் உத்தியோகம்னா பார்க்கலாம்...' என்று என்னவோ தாம் ஒரு பெரிய தொழலதிபர் மாதிரி பேச, எரிச்சலுடன் லோகநாதன் மாடிக்கு வந்துவிட்டார்.

இது நடந்து பத்து நாட்கள் போயிருக்கும்... ஒரு வெள்ளிக்கிழமை...

கல்லூரியிலிருந்து சுருக்க வந்து டிபன் சாப்பிட்டுவிட்டு, கூடத்தில் புத்தகமும் கையுமாய் லோகநாதன் உட்கார்ந்திருந்தார்.

மணி ஏழரை.

திடுமென்று கீழேயிருந்து ஹாவென்ற கத்தல்.

'நில்லுடி! அங்கேயே நில்லு! விவஸ்தை கெட்ட நாய்! உள்ளே நுழையாதே!'

யாரைத் திட்டுகிறார்?

புத்தகத்தை நாற்காலியில் வைத்துவிட்டு, மாடிப்படி வினிம்பில் லோகநாதன் போய் நின்றுகொண்டார்.

சமையல்கட்டுப் படியில் தலைவைத்துப் படுத்திருந்த ஆண்டாளம்மாகூட என்னவோ ஏதோவென்று பதறி, அருகில் வந்து நின்றார்.

மெல்லையான குரலில் யாரோ பேசுவது காதில் விழுந்தது.

'என்னடி மொணகறே? நாய், நாய்! சம்பாதிக்கறோம்னு கொழுப்பாடி? என்ன தைரியம் இருந்தா இப்படிச் செய்வே?'

சம்பாதிக்கற திமிர் என்றால், நிச்சயம் அது வேணிதான்.

என்ன ஆயிற்று?

செந்தில் விவகாரம் நடேசனுக்குத் தெரிந்துவிட்டதா?

'என்ன லோகு?'

'தெரியலைம்மா...'

'போய் வேணா பார்க்கதியா?'

'இருங்க... கொஞ்சம் பொறுத்துப் போறேன்...'

'வாயில என்ன கொழுக்கட்டையா? கேக்கறது காதுல விழுலே? மணி என்ன தெரியுமா? ஏழரை! எங்கடி சுத்திட்டு வர்றே, இந்நேரம்? பஸ் பிரேக் டவுன், அது இதுன்னு ஏதாவது நொண்டிச்சாக்கு தயாரா இருக்கா? மூளைகெட்ட முண்டம்! உடம்புல துளி ரோஷம் இருந்தா, இப்படி நிப்பியா? மூணு பொட்டைங்களை வெச்சுகிட்டு நா தவிக்கறதும், நெருப்பைக் கட்டிக்கிட்ட மாதிரி அவஸ்தைப்படறதும் புரிஞ்சா, இப்படி இருட்டினதுக்கப்பறமும் வருவியாடி? தேவடியா நாயே!'

தாங்கமுடியாதது போல நாலு படிகள் இறங்கின லோகநாதன், கஷ்டப்பட்டுத் தம்மை அடக்கிக்கொண்டார்.

'கொஞ்ச நாளாவே நீ திமிராத்தான் இருக்கே! மோட்டுவளையப் பார்த்து தனக்குத்தானே சிரிக்கக்கறே... இதெல்லாம் நா கவனிக்கலேன்னு நினைச்சியாடி, சிறுக்கி? போன வாரம் ரெண்டு நாள் லேட்டா வந்தே... என்னன்னா, ஆபீஸ்ல ஓவர் டைம்னே! இன்னிக்கு என்னடி? இந்தப் பொய் பித்தலாட்டமெல்லாம் என்கிட்ட வேணாம்! உன்னை வெட்டிப்போட்டா தேவலை போல எனக்கு இருக்கு! இருட்டினப்பறம் எவன்கூடக் கெட்டலைஞ்சுட்டு வர்றேடி? நாய், தெருப்பொறுக்கி நாய்!'

'அப்பா!'

திடுமென்று ஒரு குரல் அதட்ட, ஒரு கணம் மௌனம்.

'அப்பா! கொஞ்சம் சும்மா இருங்க! வயசுக்கு வந்த பொண்ணை வாசல்ல நிக்க வெச்சு... என்னப்பா இதெல்லாம்?'

யார்?

அதட்டலாய்ப் பேசுவது யார்?

சிவகாமியா?

லோகநாதனுக்கு ஆச்சர்யமாக இருந்தது. அவரைப் போலவே நடேசனும், அவள் என்றுமில்லாத திருநாளாய் இப்படி நிமிர்ந்து உரக்கக் கேட்டுவிட்டதில் அசந்துபோயிருக்க வேண்டும்.

ஆங்காரமாய் கத்தினார்.

'அவளை நா திட்டினா, உனக்கு ஏண்டி பொத்துகிட்டு வருது? இருட்டி நாலு நாழி ஆய்ச்சு... எவனோடவோ சுத்தி, கெட்டலைஞ்சிட்டு அவ வர்றா... என்னன்னு கேட்டா, நீ மொறைக்கறே?'

'மணி இப்ப ராத்திரி பன்னெண்டா ஆயிடுச்சு? ஏழரைதானே? எதுக்காக இப்படிக் குடிமுழுகிட்ட மாதிரி வாயில வந்ததைச் சொல்லி கூச்சல் போடறீங்க? ஒண்ணு உங்களுக்கு சொல்லட்டுமா? ராத்திரிதான்– இருட்டினப்பறம்தான் கெட்டுப்போகணும்னு இல்லே! ஒருத்தி கெட்டுப்போகத் தீர்மானிச்சிட்டா, பட்டப்பகல்லகூட தப்பு செய்யலாம்!

நினைப்பு வெச்சிக்கங்க!'

'எ... என்னமா சொன்னே? அடி மானங்கெட்ட மூதேவி! எனக்கு நீ புத்தி சொல்ல வர்றியா? உன்னை... உன்னை...'

ஆக்ரோஷமாக நடேசன் கத்த, தொடர்ந்து பட், பட்டென்று சப்தம் கேட்க, 'வேணாம்பா... அக்காவ அடிக்காதீங்க...' என்று வேணியின் குரல் அழுகையினூடே ஒலித்தது.

'நாய்ங்க... தெருநாய்ங்க! உக்கார வெச்சு சோறு போடறேனில்லே? தின்னுத்தின்னு திமிர் ஏறிப்போய்ப் பேசுதுங்க!'

ஆண்டாளம்மா நடுங்கிப்போய் பிள்ளையின் தோளில் கை வைத்து உலுக்கினார்.

'நீ போய் சமாதானம் செய், லோகு...'

திகுதிகுப்பாய் தாயார் கெஞ்ச, லோகநாதன் மாட்டேனென்று தலையசைத்தார்.

கீழே அசாதாரண மௌனம் நிலவியது. வாரோ விசும்பும் ஒலி மட்டும் துல்லியமாய் கேட்டது.

இரண்டு நிமிஷங்கள் சென்றிருக்கும்.

வாசல் வராந்தாவில் செருப்பு சப்தம்.

'நா எங்கயாவது போய்த் தொலையறேன்... சனியங்க, நிம்மதியா இருங்க!' என்று கத்திக்கொண்டே நடேசன் வேகமாகத் தோட்டத்தைக் கடந்து, கேட்டைத் திறந்துகொண்டு வெளியேறினார்.

லோகநாதன், பானையிலிருந்து தண்ணீர் எடுத்துக் குடித்துவிட்டுத் தெப்பலாய் நனைந்திருந்த பனியனைக் கழற்றிப் போட்டார்.

குறுக்கும் நெடுக்கும் கைகளைக் கட்டிக்கொண்டு வேகவேகமாய் நடந்தார்.

மனசு கேட்காமல் கீழே போய் சிவகாமிக்கு ஆறுதல் சொல்லிவிட்டு, பத்து நிமிஷங்களில் ஆண்டாளம்மா மேலே வந்தார்.

'பாவம், தாயில்லாப் பொண்ணுங்க! ரொம்பத்தான் இந்த முரடர்கிட்ட மாட்டிகிட்டுத் தவிக்குதுங்க! மூத்தவ ஒரு பக்கமாப் படுத்துகிட்டு அழுவறா, ரெண்டாமவ, 'என்னாலதானே எல்லாம்'னு புலம்பறா... கடைசிது பேஸ்து

புடிச்ச உக்காந்திட்டிருக்கு!ம்... பாவம்!'

துண்டை உடம்பில் போர்த்திக்கொண்டு லோகநாதன் கீழே சென்றார்.

சமையல்கட்டில் சிவகாமி படுத்திருந்தாள்.

பக்கத்தில் அழுது சிவந்த கண்களுடன் வேணி.

இவரைப் பார்த்தவுடன் வேணியின் புலம்பல் அதிகமாயிற்று.

எதுவும் பேசாமல் லோகநாதன் நிலைப்படியிடம் நின்றார்.

நிமிர்ந்து பார்க்காமல் வேணி சின்னக்குரலில் பேசினாள்.

'எல்லாம் என்னாலதான், சார்... செந்திலுக்கு இன்னிக்குப் பிறந்த நாள்... மேட்னிப் படம் போகலாம்னு ரொம்ப ஆசையாக் கூப்பிட்டார். வரலைன்னு சொல்ல மனசு வரலே... போனேன். படம் முடிஞ்சு வெளியில வந்தா, சோதனையா பஸ்லே கிடைக்கலே! ஆட்டோ, டாக்ஸி பிடிச்சுகிட்டு வர பயம்... தெரிஞ்சவங்க யாராச்சும் பார்த்திடுவாங்கன்னு! ஒரு வழியா பஸ் கிடைச்சு வர நாழியாயிட்டது. என்னால அக்கா அடிவாங்கிட்டா... நா... நா...'

மேலே பேச முடியாதுபோல வேணி அமர, லோகநாதன் அதிர்ந்துபோனார்.

அதிர்ச்சியில் புத்தி மழுங்கிவிட்டதா?

சிவகாமியை வைத்துக்கொண்டு இவள் என்னவெல்லாமோ பேசுகிறாளே?

லோகநாதன் கனைத்துப் பார்த்தார்... 'போதும் நிறுத்து' என்று சைகை செய்து பார்த்தார். ம்ஹூம், வேணி எதையும் கவனிக்கவில்லை.

முழுசாய் ஒரு நிமிஷம் அழுதுவிட்டு நிமிர்ந்தவள், அவர் தவிக்கிற தவிப்பைப் பார்த்து விழித்தாள்.

பிறகு புரிந்துகொண்டு, 'அக்காவுக்கு எல்லாம் தெரியும், சார்... அவங்க வீட்டுக்குப் போயிட்டுவந்ததும் நானே சொல்லிட்டேன். இன்னிக்கு சினிமாவுக்குப் போறதுகூட அக்காவுக்குத் தெரியும் சார்...' என்று நிதானமாய் சொன்னாள்.

இவர் வந்ததும் எழுந்து ஜன்னல் ஓரமாக நின்றுவிட்ட சிவகாமியை லோகநாதன் ஏறிட்டார்.

கன்னம் ஒரு பக்கமாய் வீங்கியிருந்தது. விரல்விரலாய் தடிப்புகள்.

தங்கையின் காதலை மறைக்க உதவியதில் அவளுக்குக் கிடைத்த வெகுமானம்.

சட்டென்று லோகநாதனுக்கு வேணி மேல் கோபம் வந்தது.

ஆறுக்குள் வீட்டில் இல்லையென்றால் அப்பா கொன்றுவிடுவார் என்பது தெரிந்ததுதானே? அப்புறம் ஏழரைக்குக் வர என்னமாய் துணிந்தாள்?

கடைசி ரீல் பார்க்காமலாவது எழுந்து வந்துத் தொலைத்திருக்கக்கூடாது?

'தனியாய் எங்கும் போக மாட்டோம், தப்புத்தண்டா எதுவும் செய்ய மாட்டோம்' என்று சொல்லிவிட்டு, இன்று செந்திலும் வேணியும் வாக்கை மீறிக்கொண்டு போனது, மனசில் நமநமவென்று பிறாண்டியது.

கூடவே, 'ஒரு வார்த்தை என்னிடம் சொன்னாளா, பார்த்தாயா?' என்ற வருத்தமும் தோன்றியது.

எதற்காகச் சொல்ல வேண்டும்?

நான் என்ன சொந்தமா பந்தமா?

அக்காக்காரியின் அனுமதி கிடைத்தபின், என் உத்தரவு எதற்கு?

ஆனாலும்?

மூன்று மாசங்களாக சினேகிதனாக இருந்த நான், நொடிப்பொழுதில் அந்நியனாகிவிட்டேனா?

காதல், இளநெஞ்சங்கள் தவிப்பு- இதைப்பற்றியெல்லாம் இவருக்கு என்ன தெரியும் என்று நினைத்துவிட்டாளா?

தனியாய்க் காதலனுடன் சினிமாவுக்குப் போவதில் உள்ள கிளுகிளுப்பு, இந்த வயசானவருக்கு என்ன புரியுமென்று நினைத்துவிட்டாளா?

லோகநாதன் அடிபட்டுப்போனது புரிந்த நிலையில் வேணி எழுந்து அருகில் வந்தாள்.

'ஒரு வாரமா உங்ககிட்ட பேச நேரமே கிடைக்கலே, சார்... தினம் நீங்க காலேஜ்லேருந்து திரும்ப ஒன்பதாயிடுது... இன்னிக்குத்தான் பொழுதோட வந்திருக்கீங்க. அதுக்கும் முன்னால ரெண்டு நாள் திருச்சிக்குப்

போயிட்டுவந்தீங்க... எல்லா விவரத்தையும் உங்ககிட்ட சொல்லணும்னு துடிச்சேன்... உங்களைத் தனியாப் பார்க்கவே முடியலே! தப்பா எடுத்துக்காதீங்க, ப்ளீஸ் சார்...'

அவள் சொல்வதும் சரிதான்.

ஒரு வாரமாய்க் கல்லூரியில் வேலை எக்கச்சக்கம். நிர்வாகத்துக்கும் ஆசிரியர்களுக்கும் சண்டை- பல்கலைக்கழகத்திற்குச் சென்று, ஆசிரியர்கள் சங்கக் கூட்டத்தில் கலந்துகொண்ட பின் வீடு திரும்ப நேரமானது வாஸ்தவன்தான்.

அதற்கு முன் உறவுக்காரர் ஒருவர் வீட்டுத் திருமணத்தில் கலந்துகொள்ள திருச்சிக்கு இரண்டு நாள் சென்றதும் மெய்தான்.

ஒரு நிமிஷத்தில் வேண்டாத கசப்பை மனசில் வளர்த்துக்கொண்டு விட்டதை நினைக்கையில், வெட்கமாக இருந்தது.

'இதுல தப்பா எடுக்க என்ன இருக்கு, வேணி? ஆயிரம் இருந்தாலும், சிவகாமி உன் அக்கா... நல்லது கெட்டதை அவ தெரிஞ்சிக்க உரிமையில்லையா? சரி, சரி... ரெண்டு பேரும் முகம் கழுவிகிட்டு கூடத்துக்கு வாங்க... அப்பா வர்ற நேரம்! எதுவும் நடக்காத மாதிரி இருங்க... அவர் கோவம் புதுசு இல்லியே! விடுங்க... விட்டுத் தள்ளுங்க!'

லோகநாதன் வாசலுக்கு வந்தார்.

எதிலும் பட்டுக்கொள்ள விருப்பமில்லாதவள் போல புத்தகமும் கையுமாய் அமர்ந்திருந்த ஈஸ்வரியைப் பார்த்துக்கொண்டே மாடிக்குச் சென்றார்.

ராத்திரி அவரால் நிம்மதியாக உறங்க முடியவில்லை.

ஏதேதோ கனவுகள்!

செந்திலுடன் கை கோர்த்துக்கொண்டு வேணி கடற்கரையில் ஓடுகிறாள்...

மகா கோபத்துடன் சிவகாமியை இழுத்து வரும் நடேசன், அவளைத் தண்ணீரில் தள்ளுகிறார்.

வியர்வை கசகசக்கும் ஓட்டின முகம்; பிரிபிரியாய்த் தொங்கும் முடி...

சிவகாமி பரிதாபமாய் விழிக்கிறாள். அலறக்கூடத் தெம்பில்லாமல்

கை கால்களை ஆட்டிக்கொண்டு தவிக்கிறாள்.

சட்டென்று விழிப்பு வந்துவிட்டது.

செந்திலும் வேணியும் தனியாக சினிமா போக ஆரம்பித்திருப்பது எத்தனை தவறோ, அதேபோல இன்னும் சிவகாமிக்கு ஒரு வழி பண்ணாமல் இருப்பதும் சரியில்லை என்று தோன்றியது.

'முதல் காரியமாய் நாளையிலிருந்து முனைந்து ஒரு வரனைப் பார்த்து சிவகாமியின் திருமணத்தை முடித்துவிட்டு, தூட்டோடு தூடாய் வேணி – செந்திலின் கல்யாணப் பேச்சையும் எடுத்துவிட வேண்டும். முரட்டு நடேசன் என்ன கத்தினாலும் பரவாயில்லை, தாயில்லாக் குழந்தைகளுக்கு நான் செய்யும் உதவி இது' என்று முடிவுக்கு வந்த பிறகே, மீண்டும் லோகநாதனால் படுக்க முடிந்தது... உறங்க முடிந்தது.

(7)

பால் கணக்கைப் பார்த்துக் கொண்டு கொல்லைக்கட்டில் உடகார்ந்திருந்தவரைத் தேடிச்சென்ற லோகநாதன், தானாகவே பக்கத்தில் உட்கார்ந்தார்.

சிவகாமி மாடுகளைக் குளிப்பாட்டிக்கொண்டிருந்தாள்.

தகர பக்கெட்டில் கிணற்று நீரை நிரப்பி, பளிச்பளிச்சென்று இரண்டு தரம் மாடுகளின் முதுகில் வேகமாய் வீசினாள். வைக்கோலைப் பந்தாகச் சுருட்டிக்கொண்டு, பக்கெட் நீரில் முக்கியெடுத்துப் பரக்கப்பரக்கத் தேய்த்துவிட்டாள். அந்தத் தண்ணீரும் தேய்ப்பும், உடம்பு நமைச்சலுக்கு இதமாக இருப்பதுபோல வெள்ளை மாடு தலையை உயர்த்திக் கழுத்தைக் காட்டியது.

சிவகாமியின் சேலை, கையெல்லாம் சாணி. மாட்டைத் தேய்க்கும்போது சையில் பட்ட சாணி நீர், வழிந்து முழங்கையிலிருந்து தரைக்குச் சொட்டியது.

எங்கிருந்தோ தூக்கிக்கொண்டு வந்த தவளைக் குஞ்சை வேலி முதுகில் உட்கார்ந்து வலிக்க வலிக்கக் கொத்தியது காகம் ஒன்று.

'ங்கரே...'

அமானுஷ்யமாய், மரண வேதனையுடன் ஒலித்த தவளையின் கதறல் நெஞ்சைப் பிராண்ட, 'ஷ்ஷு' என்று துண்டை வீசி, இருந்த இடத்திலிருந்தே லோகநாதன் காகத்தை விரட்ட அது தன் இரையோடு வேறு இடத்துக்குப் பறந்து போயிற்று.

இப்போதுதான் அவர் தன் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் ஸ்மரணையே வந்த மாதிரி நடேசன் தலை நிமிர்த்தி, இறங்கின கண்ணாடி வழியாகப் பார்த்தார்.

'அதை ஏன் விரட்டறீங்க? காக்காயோட நல்லவேளை, இரை அகப்பட்டுடுச்சு! இதோட போதாதவேளை, மாட்டிக்கிச்சு! சாப்பிட்டுத்தான் போகட்டுமே!'

'... ... ...'

'ஆண்டவன் கணக்குப் பண்ணித்தான் அததைப் படைச்சிருக்கான்னு பெரியவங்க சொல்றாங்களே... அசைவம் திங்கறவன் அப்படித் திங்காட்டி, பத்து வருஷத்துல மனுஷன் நிக்க முடியாதபடி ஆடு மாடு நாட்டுல பெருகிடுங்கறாங்க! எலியைப் பாம்பு தின்னாட்டி, பாம்பை கருடன் கொத்தாட்டி, எலியும் பாம்பும் ஏராளமா பெருகி, நம்மை இருக்கிற இடம் தெரியாம செஞ்சிரும்னு சொல்றாங்களே... அட, உங்களுக்கு நா சொல்லணுமா? நீங்க மெத்தப் படிச்சவர்... லெக்சரர் வேலை பார்க்கறவர்! என்னங்க நா சொல்றது?'

லோகநாதன் விழிகளைத் திருப்பி 'இந்த மனிதர் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுகிறாரா... இல்லை உண்மையிலேயே பாராட்டுகிறாரா?' என்று தெரிந்துகொள்ளும் பார்வை ஒன்றைப் பார்த்தார்.

'என்ன பார்க்கறீங்க, சார்? என்னடா இவன்கூட புத்திசாலித்தனமா பேசறானேன்னா?' ஜோக் அடித்துவிட்ட மாதிரி தானே சிரித்துக்கொண்ட நடேசன் 'காலைலவேளைல இங்க வந்து உக்காந்துகிட்டீங்களே... ஏதாவது பேசணுமா, சார்? காலேஜ் இல்லியா?' என்றார்.

'இன்னிக்கு லீவு போட்டிருக்கேன்.'

'உடம்பு சரியில்லையா?'

'அதெல்லாம் ஒண்ணுமில்லலே. ஒரு நல்ல காரியத்தைச் செய்யலாமேன்னுதான்...'

அது என்ன நல்ல காரியம் என்பது போல நடேசன் புருவங்களை உயர்த்த, லோகநாதன் தொழுவத்தைக் கழுவிக்கொண்டிருந்த சிவகாமியை ஒரு பார்வை பார்த்துவிட்டு, குரலைத் தழைத்துக் கொண்டார்.

'ரெண்டு நாள் முன்னால என்கூட வேலை பார்க்கிற ஆசிரியர், தனக்குத் தெரிஞ்ச பிள்ளை ஒருத்தன் இருக்கான்னு சொன்னார். போய் சந்திச்சேன். ஜாதகம் அது இதுவெல்லாம் நம்பிக்கை இல்லாதவங்க... நட்சத்திரப்பொருத்தம் மட்டும் பார்த்தாங்க... பொருந்திடுச்சு! நேத்து ராத்திரி பிள்ளையையும் பார்த்துப் பேசினேன்... எல்லாம் ஒத்து வரும்போலத்தான் படுது! நீங்க சரின்னு சொன்னா மேற்கொண்டு காரியங்களைக் கவனிக்கலாம்...'

'இதுக்காகவா லீவு போட்டிருக்கீங்க?'

'காலேஜ் நேரத்துல எதையும் உருப்படியா கவனிக்க முடியறதில்லே. இன்னிக்கு புதன். நாள் நல்லா இருக்குன்னு அம்மா சொன்னாங்க. காலைல போய் பிள்ளை வீட்டுல சொல்லிட்டு வந்தா மூணு மணிக்கு மேல அவங்க வர சௌகரியமா இருக்கும்.'

'இன்னிக்குப் பொண்பார்க்க வரலாம்னு அவங்ககிட்ட சொல்லிட்டீங்களா?'

'தீர்மானமாச் சொல்லலே... நேத்து சந்திச்சப்ப, 'நாலைஞ்சு எடத்துலேருந்து பொண்ணுங்க வருது. சீக்கிரமா பொண்ணைத் தேர்ந்தெடுத்து முதல் முகூர்த்தத்துல முடிச்சிடணும்'னு அவங்க அபிப்ராயப்பட்டதால, 'முடிஞ்சா நாளைக்கு புதன்கிழமையா இருக்கு. பொண்பார்க்கறதை வெச்சிக்கலாம். நா எதுக்கும் திரும்ப வந்து சொல்றேன்'னு சொல்லிட்டு வந்தேன்'

நடேசன் எழுந்து வேட்டியை உதறிக் கட்டிக்கொண்டார். குச்சி ஒன்றை எடுத்து காதைத் துழாவியபடி அமர்ந்தார்.

வாயைத்திறந்து தலையைச் சாய்த்து குச்சியால் சுவாரஸ்யமாகக் காதை நோண்டிக்கொண்டு, இந்தப் பேச்சுக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லாத மாதிரி உட்கார்ந்திருப்பவரைப் பார்க்கையில் கருகருவென்று லோகநாதனுள் கோபம் மூண்டது.

அடக்கிக்கொண்டார்.

'என்ன சார், சொல்றீங்க?'

'ஆங்?' குச்சியை வெளியே எடுத்து, திரண்ட அழுக்கை வேட்டியில் துடைத்துத் திரும்ப காதுக்குள் விட்டுக்கொண்டவர், 'நா என்ன சார், சொல்றது? நீங்கதான் எல்லா ஏற்பாட்டையும் பண்ணிட்டு வந்திட்டீங்களே! மேலேயும் கவனிக்கறது!' என்றார்.

இப்போது நிஜமாகவே லோகநாதனின் எரிச்சல் தாளமுடியாததாகப் பெருகிப்போயிற்று.

இவர் இப்படி ஏனோதானோவென்று விஸ்ராந்தியாய் அமர, நான் ஏன் இத்தனையையும் இழுத்துப்போட்டுக் கொள்ளவேண்டும்? தலையெழுத்தா?

கொதித்த மனசு மறுகணமே மாறிப்போயிற்று.

வியர்வை எகமாய்ப் பெருகிய முகத்தைக் கையைத் தூக்கி ரவிக்கையில் துடைத்து, கிணற்றில் ஜலம் எடுத்து கைகால்களை அலம்பி, தூக்கிச் செருகின புடவையைக் கொகவத்தை உதறித் தழைத்து, வெளி வேலை முடிந்து சலமயல்கட்டுக் காரியத்தை கவனிக்க சிவகாமி இவர்களைக் கடந்து உள்ளே போக-'ச்சே, பாவம்!' என்ற பரிதாப உணர்வு நெஞ்சை அடைத்துக்கொண்டது.

பாவம்...

ரொம்பப் பாவம்!

தாயில்லாக் குழந்தைகள்...

இவர்களுக்கு ஒரு வழி செய்யத்தான் தெய்வம் எங்களை இங்கே குடிவரச்செய்ததோ என்னவோ!

ஏச்சோ, திட்டோ, புகுந்து புறப்பட்டு சிவகாமியை ஒருத்தனிடம் ஒப்படைக்காலிட்டால், இந்த மஞ்சுஷாக விரலை அசைக்கப்போவதில்லை. ஆயுசுக்கும் மாடாய் உழைத்து இவள் மடிந்துபோக வேண்டியதுதான்.

வேணி கெட்டிக்காரி... ஓரளவு சுயநலமும்கூட... ஒரு வருஷம் காத்துப் பார்ப்பாள்... அதற்குள் எதுவும் நடக்காவிட்டால்.. கண்டிப்பாய் வீட்டை விட்டு வெளியேறியாவது செந்தில்நாதுக்குப் பெண்டாட்டியாகிவிடுவாள். தனியாக சினிமா, அங்கே, இங்கே போகுமளவுக்கு வளர்ந்துவிட்ட காதல், இனி எதைச் செய்யத்தான் தயங்காது?

ஈஸ்வரியும் அசடு இல்லை... வாயைத் திறக்காமல் அத்தனையையும்

பார்த்துக்கொண்டிருக்கிறாள். டிகிரி முடித்த கையோடு சாமர்த்தியமாக வேலை ஒன்றைத் தேடிக்கொண்டு, 'நீங்களும் வேண்டாம், உங்கள் சகவாசமும் வேண்டாம்' என்று மண்ணைத் தட்டிக் கொண்டு ஓடுவது நிச்சயம்.

பாவம்.கடைசியில் இந்த சிவகாமிதான் மாட்டிக்கொள்வாள்.

போக்கிடம் இல்லாமல், வக்கில்லாத அப்பாவிடம் ஆயுசுக்கும் கைதியாக இருப்பாள்.

இவளுக்கு ஒரு நல்ல வழி செய்ய என்னால் முடியுமென்றால், அதைச் செய்யத் தயங்குவது அழகா? எரிச்சல் படுவது அழகா? அப்புறம், நான் என்ன மனுஷன்?

லோகநாதன் சிரிக்க முயற்சி செய்தார்.

'அப்ப, மூணு மணிக்கு வரலாம்னு சொல்லிட்டு வந்திடவா, சார்?'

நடேசன் அவரைக் கண்களை இடுக்கிக்கொண்டு ஏறிட்டார்.

'தேக்கறேன்னு தப்பா நினைக்காதீங்க... இந்த இடம் முடியறதுல நீங்க ஏன் இத்தனை முனை'யா இருக்கீங்க?

'இந்த இடம்னு இல்லே... நல்ல இடம் எதையாவது முடிக்கணும்னு நா முனையறது மெய்தான். சொந்தமா குழந்தைகுட்டிங்க இல்லே... தெரிஞ்சவங்களுக்காவது உதவுவோமேன்னுதான்.'

நாலுநாள் தாடியைப் பரக்பரக்கென்று நடேசன் சொறிந்தார்.

'பிள்ளை என்ன செய்யறார்?'

'நீங்க ஆசைப்பட்ட மாதிரி பாங்க் உத்தியோகந்தான்...'

'ம்.. வயசு?'

'முப்பத்து மூணுன்றாங்க'

'குடும்ப நிலைமை எப்படி? அப்பா என்ன செய்யறார்?'

'தகப்பனார் இல்லே. தவறிப்போய் நாலு வருஷம் ஆச்சாம். இவன்தான் மூத்தவன்... அடுத்து ரெண்டு தம்பி, ரெண்டு தங்கைங்க.'

'பொண்பார்க்க வாறப்ப, கூட யார் வருவாங்க? அந்த அறுத்துபோன தாயாரா?'

துக்கிரித்தனமாய் நடேசன் கேட்க, பதில் சொல்லப் பிடிக்காமல் லோகநாதன் மௌனம் சாதித்தார்.

'சரி... சரி... யார் வந்தா எனக்கென்ன? வரட்டும். என்னென்ன ஏற்பாடு செஞ்சு வெக்கணும்?'

'அதெல்லாம் எனக்குத் தெரியாது, சார்.. அம்மாவைக் கேட்டுக்குங்க.. நா வரேன்.'

மாடிக்கு வந்தவர், குளிர்ந்த நீரை விட்டுக் குளித்து, அம்மா நீட்டிய காபியைக் குடித்தார், கிளம்பினார்.

மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று அவர்களை மூன்று மணிக்கு வரச்சொல்லிவிட்டு, வீட்டுக்குத் திரும்ப வந்தபோது, மணி பன்னிரண்டு ஆயிற்று.

சாப்பிட உட்கார்ந்தவர், 'உங்ககிட்ட அந்த மனுஷர் ஏதாவது கேட்டாராம்மா?' என்று வினவ ஆண்டாளம்மா 'இல்லை'யென்று தலையசைத்து, 'அவர் ஒண்ணும் கேக்கலே. நானாதான் கீழ போய், 'ரெண்டு மணிக்குள்ள வீட்டைப் பெருக்கித் துடைச்ச, கூடத்துல பாய் விரிச்சு வெய்யுங்க. பூ, வெத்தலை, பாக்கு, பழம் வாங்கிட்டு வாங்க.. ஒரு இனிப்பு, காரம் செஞ்சு, காபி போடச் சொல்லுங்க'ன்னு சொன்னேன். உனக்கு சாப்பாடு போட்டுட்டு கீழ போயி அந்தப் பொண்ணுக்குக் கூடமாட ஏதாச்சும் ஒத்தாசை பண்ணிட்டு வரேன். அதுவும்தான் ஒண்டியா என்ன செய்யும்? வேணிய லீவு போடச் சொல்லியிருக்கலாம்... அவங்களா செய்யக்கூடாதா? எல்லாத்தையும் நாம சொல்லித்தான் செய்யணுமா?' என்றார்.

சாப்பாடு ஆனதும் அம்மாவுடன் லோகநாதனும் கீழே போனார்.

நடேசன் கடைக்குப் போயிருப்பதாக சிவகாமி கூறினாள்.

ரவா கேசரி கிளறி, உருளைக்கிழங்கு பஜ்ஜி போடத் தோதாய் சாமான்கள் இருக்கின்றனவா என்று ஆண்டாளம்மா பார்த்தார். இல்லாதவற்றைத் தங்கள் வீட்டிலிருந்து கொண்டு வந்து கொடுத்து, ஒரு வழியாய் இரண்டு மணிக்குள் பதார்த்தங்களை கிட்ட இருந்து தயார்பண்ண வைத்தார். நாலு பேருக்குக் காபி டிகாக்ஷன் போடச் சொன்னார்.

'பொழுதோட ஒரு மாட்டைக் கறந்துடுங்க... வீட்டுப்பால்ல காபி

போட்டாத்தான் நல்லா இருக்கும்...'

ஆண்டாளம்மாவுக்கு பதில் கூற விருப்பமில்லாவிட்டாலும், 'அப்பறம் வாடிக்கைக்காரங்களுக்கு யார் பதில் சொல்றது' என்று முணுமுணுத்துக்கொண்டே கடையிலிருந்து திரும்பிய நடேசன் குலாளாயுடன் பின்பக்கம் சென்றார்.

இரண்டரை மணிக்குள் எல்லாம் தயாராகி, சிவகாமியும் தயாராகிவிட்டாள்.

சுத்தமாய் முகம் கழுவி, தலை சீவி, பவுடர் பூசி பொட்டிட்டு, கதம்பம் வைத்து, ஆண்டாளம்மாவின் சிவப்புப் பட்டுப்புடவையில் நின்றவளைப் பார்த்து ஒரு நிமிஷம் லோகநாதன் ஆச்சர்யப்பட்டுப்போனார்.

இந்த சிவகாமி அத்தனை மோசம் இல்லையா?

அலங்கரித்தால் இவள்கூடப் பார்க்கும்படி இருக்கிறாளே!

ஆள் பாதி, அலங்காரம் பாதி என்பது இதுதானா?

எப்படியோ, வருகிறவனுக்கு இவளைப் பிடித்து, பேச்சுவார்த்தைகள் சரியாய் அமைந்து, திருமணம் குதிர்ந்துவிட்டால் தேவையில்லை.

சொன்னபடி மூன்று மணிக்கு மாப்பிள்ளை வீட்டார் வந்துவிட்டனர். மாப்பிள்ளை, அவன் பெரியப்பா, பெரியம்மா, ஒரு தங்கை – நால்வர்தாம்.

லோகநாதன் முன்நின்று வரவேற்றார்.

வந்தவர்கள் உட்கார்ந்தார்கள். டிபன், காபி சாப்பிட்டார்கள். பெண்ணைப் பார்த்தார்கள். ஒரு பக்கமாய்ப் போய் குசுகுசுத்தார்கள்.

'லௌகீகம் பேசலாமா?' என்றார் பெரியவர்.

'பொண்ணுக்கு என்ன செய்யறதா இருக்கீங்க?'

நடேசன் விரைப்பாக பதில் சொன்னார்.

'என்னால முடிஞ்சது–'

'இப்படி மொட்டையா சொன்னா எப்படிங்க? கொஞ்சம் விவரமா சொல்றது–'

'நீங்க முதல்ல என்ன எதிர்பார்க்கறீங்கன்னு சொல்லுங்க–'

பெரியவர் மனைவியைப் பார்த்தார்.

அந்த அம்மாள், தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

'பிள்ளையோட தாயார் வரமுடியாததால் நாங்க வந்திருக்கோம்... பெத்தவ சொன்னதை இப்ப சொல்றோம். தாலிச்சரடு ஆறு பவுனுக்குக் குறையக் கூடாது. கையில ரெண்டு ஜதை வளை, இரட்டை வடம் சங்கிலி, தோடு, ரெண்டாயிரம் ரூபாய்க்குப் பாத்திர வகையறா... பிள்ளைக்குக் கடிகாரம், சூட்டு தனித்தனியா குடுக்க வேணாம். மொத்தமா பத்தாயிரம் கையில குடுத்தாப்போதும்... இன்னிக்கு இருக்கற நிலைமையல பாங்க் வேலைபார்க்கற பையன்களுக்குக் கையில் இருவது, முப்பதுகூடக் குடுக்கத் தயாரா இருக்காங்க. எங்களுக்குப் பேராசை இல்லே... உங்க பொண்ணும் எங்க பிள்ளையும் நல்லா இருக்கணும்... அதான் முக்கியம்...'

அந்த அம்மாள் நீளமாகப் பேசி நிறுத்திய பிறகும், வாயைத் திறந்து எதுவும் நடேசன் பேசாமல் இருக்க, 'என்னங்க?' என்றார் லோகநாதன் மெள்ள.

'இத்தனை பெரிய இடம் நமக்குச் சரிப்படாது, சார்...'

பட்டென்று போட்டு உடைக்கிறமாதிரி நடேசன் பேச, அனைவரும் திடுக்கிட்டுப் போனார்கள்.

'சார்... வந்து...'

'வந்துமில்லே, போயுமில்லே! இந்த இடம் எனக்குச் சரிப்படாது. அவ்வளவுதான்...'

பெரியவர் இப்போது அவசரமாய்ப் பேசினார்.

'எடுத்தேன் உடைச்சேன்னு பேசற பேச்சா சார், இது? கல்யாணம் இல்லியா? ரெண்டு பக்கமும்தான் யோசனை பண்ணிப் பேசணும். நாங்க கேட்டதுல எது உங்களுக்கு அதிகமாப் படுது?'

'எல்லாந்தான்...'

லோகநாதன் எட்டி பெரியவரின் கைகளைப் பிடித்துக்கொண்டார்.

'ஒரு நிமிஷம் தனியா அப்படி வாங்க சார்...'

வந்தார்.

'இவர் பேசறதை வெச்சுக்கிட்டு நீங்க எந்த முடிவுக்கும் வந்துடாதீங்க...

பொண்ணைப் பிடிச்சிருக்கு. இல்லே? நீங்க புறப்பட்டுப் போங்க.. இவர்கிட்டப் பேசி நா சமாளிக்கறேன்.'

'வாஸ்தவமா சொல்றேன், நாங்க கேட்டது இந்தக் காலத்துக்கு ரொம்பக் கம்மி! பையன் சில லட்சியங்களை வெச்சுகிட்டிருக்கான்.. தங்கைகளைக் காட்டி அம்மா கெஞ்சிக் கேட்டதால சும்மா இருக்கான். இதுகூட இல்லாம இந்தக் காலத்துல எப்படி சார்?'

'எனக்குப் புரியுதுங்க... அதான் நா பேசி சரிக்கட்டறேன்னு சொல்லிட்டேனே. நீங்க சுவலைப்படாம புறப்படுங்க..'

வந்தவர்கள் கிளம்பிப் போனார்கள்.

கூடத்து நாற்காலியில் நடேசன் உட்கார்ந்திருக்க, லோகநாதன் குறுக்கும் நெடுக்கும் நடந்தார்.

ஆண்டாளம்மா ஒருபக்கமாய் அமர்ந்தார்.

பட்டுப்புடவையைக் களைந்து மடித்து வைத்துவிட்டு, பின்தாழ்வாரத்துக்கு சிவகாமி போய்விட்டாள்.

'பாங்க் வேலை, எட்டு நூறு சம்பளம், வயசும் அதிகமில்லே.. நல்ல பையன். இதையெல்லாம் நினைச்சுப் பார்க்கணும், சார்..'

'...'

'இவங்க கேட்டது அப்படி ஒண்ணும் அதிகமில்லே.. அவனவன் வாயில வந்ததையெல்லாம் லிஸ்ட் போடறப்ப, இவங்க அத்தியாவசியமான சாமான்களைக் கேட்டதாதான் எனக்குத் தோணுது.. நீங்க என்னம்மா சொல்றீங்க?'

'நீ சொல்றது சரிதான்.. அவங்க நிச்சயம் பேராசையோட கேக்கலே. ஒரு கல்யாணம்னா, இத்தனைகூடக் கேக்காட்டி எப்படி?'

'என்ன சார், நாங்களே பேசிக்கிட்டிருக்கோமே, உங்க அபிப்ராயம் என்ன?'

நடேசன் கொட்டாவி ஒன்றை சப்தத்துடன் வெளியிட்டார்.

'அதான் ஏற்கனவே சொல்லிட்டேனே!'

'என்ன?'

'சரிப்படாது.'

'விளக்கமா சொல்லுங்க, சார்... ஏன் சரிப்படாது?'

'பவுன் இன்னிக்கு என்ன விலை விக்குது தெரியுமா? ஆயிரத்து முன்னூறு. இவங்க கணக்குப்படி பதினெட்டுப் பவுன் என்ன ஆவுது? கணக்குப் போட்டுக்கங்க! கையில பத்தாயிரம், இதைத் தவிர கல்யாணச் செலவு- முழுசா ஐம்பதாயிரத்தைத் தீர வெக்கணும். எனக்கு இது தாங்காது, சார்..'

'சரி, ரெட்டை வடம் சங்கிலியைக் குறைச்சுக்கங்கன்னு கேக்கலாமா?'

'அந்தப் பத்தாயிரம்?'

'கையில கொடுக்காம எப்படி, சார்? அவனுக்கும் தீர்க்கடை தங்கைங்க இருக்காங்க.'

'அதுக்கு நாந்தானா அகப்பட்டேன்? எவன் பெத்துப் போட்டதுக்கோ நா அழணுமா?'

ஆண்டாளம்மா மெள்ளப் பேசினார்..

'சிவகாமியோட அம்மா நகைங்க, பாத்திரம் இருக்கு. கையில குடுக்கறதைக் கொஞ்சம் குறைச்சிட்டா அதுவும் கல்யாணச் செலவுந்தான்.. வாசல்ல ஒரு பந்தல் போட்டு, வீட்டோட நிறைச்ச நடத்திட முடியாதா?'

'முடியாது... கண்டிப்பா முடியாது. அம்மா நகைங்களை இவளுக்குக் குடுத்தா, மத்தவங்களுக்கு?

'அத்தனையுமா குடுக்கணும்? மூணுல ஒரு பங்கு... வீடு வேற கோட்டையாட்டமா இருக்கு.'

'வீட்டை வித்து இவங்களுக்குத் தொலைச்சிட்டா, அப்பறம் நா என்ன பண்றது? சாப்பிட தங்க, யார்கிட்டப் போய் நாக்கை வழிக்கறது?'

எரிச்சலுடன், பம்பில்லாமல் நடேசன் பேச, மற்ற இருவரும் வாயைப் பொத்திக் கொண்டார்கள்.

நடேசன் எழுந்து, அவிழ்ந்த வேட்டியைக் கட்டிக் கொண்டார்.

'இந்தப் பையனை எனக்குப் பிடிக்கலே... மூத்தவன்.. தகப்பன் இல்லாத குடும்பம்.. அந்தளவுபோர்பொறுப்பும் இவன் தலைலதான். வேணாம், லோகநாதன் சார்.. இந்தச் சம்பந்தத்துல எனக்கு இஷ்டமில்லேன்னு சொல்லிடுங்க.'

'சிவகாமிய அவங்களுக்குப் பிடிச்சுப்போச்சு... நல்லது கெட்டதை ரொம்பத் தருவாம முடிச்சிடறது தேவலைன்னுதான் எனக்குத் தோணுது...'

ஆண்டாளம்மா விடாமல் திரும்ப பேச்சை எடுக்க, இரண்டு கைகளையும் நடேசன் கூப்பிக்கொண்டார்.

'பெரியவங்க, உங்களை மதிக்கலேன்னு நினைக்காதீங்க.... இந்தப் பையனை எனக்குப் பிடிக்கலே! மாப்பிள்ளைன்னு சொல்லிக்க எந்த பவிஷும் இருக்கறதாத் தெரியலே. தொட்டா ஒட்டிக்கற கரி, தண்ணி தொட்டுக் குழைச்சா, சாந்தா இட்டுக்கலாம்! வேணாம், இந்தப் பையன் வேணாம்.'

அன்றைக்குப் பேச்சு இதோடு முடிந்தது.

லோகநாதன் மறுநாள் கல்லூரிக்குப் போகும் முன் அவர்கள் வீட்டுக்குச் சென்று, 'அத்தனை சீர்வரிசை செய்ய முடியாது, மன்னித்துக் கொள்ளுங்கள்', என்று சொல்லிவிட்டு வந்தார்.

இதற்குப் பிறகுகூட நல்ல மாட்டுக்கு ஒரு தூடு என்ற ரோஷத்துடன் இருக்க முடியாமல், இன்னும் இரண்டு வரன்களை அந்த மாசத்தில் அழைத்துவந்து பெண்பார்க்கச் செய்தார்.

முதல் வரன், பெண் பிடிக்கவில்லையென்று ஒதுங்கிவிட்டான். வம்பே இல்லை. இரண்டாமவனை, 'ஐயோ அவனுக்கு ஆஸ்துமா.. பேசறப்பவே ஒய்ஒய்னு இழுக்குது.. வியாதிக்காரப் பிள்ளை எனக்கு மாப்பிள்ளை ஆகவேணாம்' என்று நடேசன் ஒதுக்க, 'இவருக்குப் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க இஷ்டமில்லை. கைக்காசு செலவழிவதோடு, அருமையான வேலைக்காரி ஒருத்தியையும் இழந்துவிடுவோம் என்ற பயமும் இருப்பது சத்தியம்' என்று புரிய, இனி என்ன செய்வது என்ற வேதனை லோகநாதனின் நெஞ்சில் பூதாகாரமாகப் படர்ந்தது.

(8)

'என்னப்பா லோகு, சாப்பிட வரியா? மணி ஒம்பதாச்சே?'

படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடிவைத்துவிட்டு லோகநாதன் எழுந்தார். கைகால்களைக் கழுவினபின் மனையில் அமர்ந்தார்.

'ரெண்டு இட்லி போதும்...அதிகமா வெக்காதீங்கம்மா...'

'அதெப்படி ரெண்டு போதும்? கையை எடு, நாள் பூரா அலைஞ்ச திரிஞ்சுட்டு வர்றவன், வயிறு ரொம்ப சாப்பிடாட்டி, வெலவெலன்னு வரும்பா!'

'பசி இல்லேம்மா...'

'எதையாவது போட்டு மனசை ஏழப்பிகிட்டிருந்தா, பசி, தூக்கம் எப்படி இருக்கும்?'

அம்மா பக்கத்தில்வைத்த கடைந்த மோரை லோகநாதன் பருகினார்.

'இந்த மனுஷனை நினைச்சு அழறதா, சிரிக்கறதானு புரியலைம்மா. இவர் மக நல்லா இருக்கணும்னு நினைச்சு நா பாடுபடறதைக் கொஞ்சம்கூடப் புரிஞ்சுக்க மாட்டேங்கறாரேன்னு வருத்தமாக் கூட இருக்கு.'

'அந்தப் பொண்ணை நினைச்சுதான் நானும் அத்தனையும் பொறுத்துகிட்டிருக்கேன்! நாம முடிஞ்சதைப் பார்த்தோம். அந்த மனுஷன் எதுக்கும் வளைஞ்சு குடுக்க மறுக்கறாரு! இனிமே, உன்பாடு, உன் மக பாடுன்னு விட்டேன்டியதுதான்!'

'அப்படி விட்டேத்தியாப் பேச மனசு வருதாம்மா? உண்மையா சொல்லுங்க...'

'வரலேதான்... ஆனாலும் நமக்கு வேற வழிதான் என்ன?'

'வேணி – செந்தில் பிரச்சினை வேற நாளுக்கு நாள் அதிகரிச்சு கிட்டேபோவுது! நேத்துக்கூட அண்ணாசாலை பக்கம் ஒரு ஆட்டோவில அவங்களைப் பார்த்தேன். ஏடாகூடமா ஏதாச்சும் நடந்துடப்போவுதேன்னு பயமா இருக்கு. இளவயசு பாருங்க.'

'ஓரளவுதாம்ப்பா நாம புத்தி சொல்ல முடியும். தோளுக்கு மிஞ்சினவங்களிட்ட நெருப்பு சுடும். கிட்டப் போகாதே'ன்னா, எப்படி?'

'செந்தில் கட்டுப்பாடானவன். வேணி ரெண்டுங் கெட்டான்தனமா பேசி நடந்துகிட்டாலும் அவன் பொறுப்பா நடந்துப்பான்னு நினைச்சேன். சின்ன வயசுக்காரங்களைப்பத்தி எனக்கு சரியாக் கணிக்கத் தெரியலேன்னு புரியுது!'

'இதுக்காக நீயேன் அளவுக்கு மீறிக் குழப்பிக்கறே லோகு? விடு!

அவங்கவங்க தலையெழுத்துப்படி நடக்குதுன்னு விடு!'

எதுவும் பேசாமல் பிள்ளை சாப்பிட, மனசு கேட்காதது போல வாய்விட்டு ஆண்டாளம்மா பொருமத் தொடங்கினார்.

'ரத்தினமா மருமக வாய்ச்சா. அவளை வெச்சிக்க நமக்குக் குடுப்பினை இல்லே... சரி, போனவ போயிட்டான்னு தேத்திக்கிட்டு, இன்னொரு கல்யாணம் கட்டிகிட்டிருந்தா. இன்னிக்கு உனக்குனு குடும்பம் குட்டி அத்தனையும் இருக்கும்! எனக்கு இருக்கறது நீ ஒருத்தன்தான். நீயும் துறவியாட்டம் தனியாத்தான நிப்பேன்னு அடம்புடிச்சு, நினைச்சதை சாதிச்சுகிட்டே! உனக்கு ஒரு நல்லது பண்ணிக்கவே, நீர் உலகத்துக்கெல்லாம் நல்லது செய்யறேன்னு பாடுபடறே. பம்பாய்ல இருந்தவரைக்கும் சங்க வேலைகளையெல்லாம் தலைல போட்டுகிட்டுச் செய்தே. ஊரான் வீட்டு நல்லது கெட்டதுக்கு முன்னால நின்னே. அது உன் சுபாவம். இங்கே வந்தும் சும்மா இருக்காம கீழ்வீட்டுப் பொண்களோட நல்ல வாழ்க்கைக்காகப் பாடுபடறே! செய்... நா தடுக்கலே. ஆனா, செய்றதுக்குப் பாராட்டோ, பலனோ கிடைக்கலியே. அந்தப் பசங்க என்னேடு கெட்டா நமக்கென்னனனு வாயால சொல்லிட்டாலும், உள்ளூற மனசு கேக்கமாட்டேங்குது! வரிசையா நிக்கறப்ப அடிவயத்துல கப்புங்குது. நானும் ஒரு பொம்பளை இல்லியா, தாய் இல்லியான்னு பதறுது. உன் சம்சாரம் உசிரோட இருந்து, உனக்கு இது மாதிரி பொட்டா பசங்க நின்னா கவலைப்படாம அக்கடான்னு இருக்க முடியுமான்னு தோணுது! ஒண்ணும் புரியலே, லோகு. நானும் குழம்பித்தான் இருக்கேன்...'

கண்களில் துளிர்த்த நீரைச் சுண்டி வழித்து ஆண்டாளம்மா மூக்கை சிந்த, லோகநாதன் எழுந்து கையைக் கழுவிக்கொண்டார்.

துண்டில் ஈரக்கையைத் துடைத்தபடி சமையல்கட்டுக்குத் திரும்ப வந்தார்.

'பிறத்தியாருக்கு நல்லது பண்ணணுங்கற ஒரே நோக்குலதான் நானும் இந்த மனுஷர் சொல்ற எதையும் காதுல வாங்காம மேலமேல முனையேறன்... ரவை எடங்குடக்க மாட்டேன்னு பிடிவாதம் பண்றார்! அந்த சாம்பசிவனுக்கு என்ன குறைச்சல்? ஆஸ்துமா இருக்கு, ஒய்ஞ்சுனு இழுக்குதுன்னு ஒதுக்கிட்டார். தேடிப்பிடிச்ச ஒவ்வொரு வரனாக் கொண்டுவந்தா, கிட்ட வர்றப்பவே இவன் தேசல், இவன் தாய் தகப்பன் இல்லாத அநாதைன்னு எதைபாவது சொல்லித் தட்டிக்கழிச்சிடறார். பணம்

செலவழிக்க மனசில்லையா, இல்லை, மக போயிட்டா வேலைங்களை யார் பண்ணுவாங்கன்ற பயமான்னு புரியலே.'

'நேத்திக்கு அவர் சொல்றாரு, லோகு... 'எங்க ஜாதியில பொண் வீட்டுல காசு பணம் செலவழிக்கற பழக்கம் கிடையாது... அத்தனை செலவும் மாப்பிள்ளை வீட்டுக்காரங்களுடையதுதான்... இப்பத்தான், இல்லாத வழக்கமா அடுத்த ஜாதிக்காரங்கிட்டேயிருந்து வரதட்சிணை வாங்கறதையும், கல்யாணச் செலவு செய்யச் சொல்றதையும் கத்துகிட்டிருக்காங்க. நா என் ஜாதி வழக்கத்தை விடப்போறதில்லே... அப்பத்தானே எனக்குப் பெருமை'ன்னு சொல்றார். அதை நினைச்சுப்பார்த்தா, இவர் பணம் காசு போயிடும்னு பயந்துகிட்டுத்தான் முனைய மாட்டேங்கறார்னு தோணுது. என்ன பணமோ, என்ன வெறியோ அன்னிக்கு நேவதி கேட்ட மாதிரி, தலைல கட்டிகிட்டா போகப்போறார்?'

லோகநாதன் மொட்டைமாடிக்குப் போய் நாற்காலியைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார்.

அரைமணியில் வேலைகள் ஆகி ஆண்டாளம்மாவும் வந்தார்.

'கேக்க நினைச்சேன, மறந்திட்டேன்... ஏன் லோகு, சண்முகத்தோட பிள்ளை கல்யாணக் கடுதாசி வந்திருக்கே, பார்த்தியா?'

'ம்ம்...'

'போகவேண்டியது கல்யாணம், லோகு... இருவது வருஷத்துக்கு மேல நம்ப பக்கத்து வீட்டுக்காரங்களா இருந்தவங்க. இப்ப விட்டுக்குடுத்தா, நல்லா இருக்காது!'

'போகணுந்தான்... ஒரு வாரம் லீவு போடணும்... நீங்களும் வர்றீங்களாம்மா? ரெண்டு பேருக்கும் டிக்கெட் எடுத்துடறேன்.'

'நா வரலைப்பா... வீட்டை விட்டுக் கிளம்பணும்னாலே கஷ்டமா இருக்கு! நீ போயிட்டு வா, போதும்.'

'தனியா இருப்பீங்களாம்மா?'

'தனி என்ன தனி? கீழ்வீட்டுக்காரங்க இருக்காங்க. தேவைய கூடப் படுத்துக்கமன்னா படுக்கறா.'

'கல்யாணம் என்னிக்கு?'

'வர்ற பதினாறாம் தேதி...'

'சரி, நா நாளைக்கே லீவுக்கு எழுதிட்டு, டிக்கெட்டும் எடுத்திடறேன்.'

தொடர்ந்து, பரிசாக என்ன கொடுப்பது என்பதையும் அம்மாவிடம் பேசிவிட்டு லோகநாதன் படுக்கச் சென்றார்.

அடுத்த நான்காம் நாள் லோகநாதன், மற்றவர்களிடம் பந்து தாம் தாயைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு, சண்முகம் வீட்டுக் கல்யாணத்துக்குப் போகவேண்டி, பம்பாய் மெயிலில் ஏறினார்.

(9)

ஆறாம் நாள் காலையில் பம்பாய் பயணத்தை முடித்துக்கொண்டு லோகநாதன் டாக்ஸியில் வந்து இறங்கினபோது, வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்த நடேசன், வாயெல்லாம் பல்லாக, 'வாங்க, வாங்க' என்று வரவேற்றார்.

வாளியில் தண்ணீர் எடுத்து செடிகளுக்கு ஊற்றிக் கொண்டிருந்த சிவகாமி நிமிர்ந்து சின்னதாகப் புன்னகை செய்துவிட்டு, காரியத்தைத் தொடர்ந்தாள்.

'என்ன, கல்யாணமெல்லாம் நல்லா நடந்துச்சா? உங்க பழைய சினேகிதங்களைப் பார்த்தீங்களா? எல்லாரையும் பிரிஞ்சுவர மனசு வந்துச்சா? உக்காருங்க.'

'இல்லீங்க, மேல போய்க் குளிச்சிட்டு வந்திடறேன்– உடம்பு பூரா ரயில் கரி..!'

அவரிடம் சொல்லிவிட்டுப் பெட்டியுடன் லோகநாதன் மேலே வந்தார்.

'வா லோகு! காலைலேருந்து எதிர்பார்த்துகிட்டுத்தான் இருக்கேன்!

'என்னம்மா, தனியா இருந்ததுல அசௌகரியம் ஒண்ணும் இல்லியே?'

'ஒண்ணுமில்லே! கல்யாணம் நல்லா நடந்துச்சா? சண்முகம் வீட்டுல என்ன சொன்னாங்க?'

'சண்முகம் தடபுடல்படுத்திட்டார். நீங்க வரலியேன்னு ரொம்பக் குறை–

பத்து தரம் சொல்லிட்டார். 'பெரியவங்களா அக்கா வரலியா?' ன்னு. இந்தாங்க இதப் புடிங்க.'

பெட்டியைத் திறந்து ஒரு புடவை, வெற்றிலை பாக்குப் பை, இரண்டு அட்டை டப்பாக்களை நீட்டினார்.

'புடவை யாருக்கு, லோகு?'

'உங்களுக்குருத்தான்.. சண்முகம் சம்சாரம் குடுத்தாங்க! 'வேணாங்க, எதுக்கு இதெல்லாம்?'னு சொல்லிப் பார்த்தேன்–' 'அவங்க எங்களுக்கு மூத்த சகோதரி மாதிரி.. சரிகை போடாம சாதா பட்டுலதான் எடுத்திருக்கோம்.. அவசியம் உடுத்தச் சொல்லுங்க!'ன்னு கட்டாயப்படுத்திக் குடுத்துட்டாங்க! அந்த அட்டை டப்பாலெ பம்பாய் அல்வா இருக்கு.. ஒண்ணு நமக்கு, இன்னொண்ணு சீழ்லிட்டுக்கு..'

'நீ வர்றப்ப நடேசனைப் பார்த்தியா? அவர் ஏதாச்சும் சொன்னாரா?'

'உக்காருங்கன்னாரு.. குளிச்சிட்டு வரேன்னு சொல்லிட்டு வந்துட்டேன். மனுஷன் ரொம்ப சந்தோஷமா இருக்கறாப்பல தெரியுது.. என்னம்மா விசேஷம்?'

'லாட்டரிச் சீட்டு ஒண்ணு வாங்கியிருந்தாராம்.. அதுக்கு ஐயாயிரம் பரிசு விழுந்திருக்கு, லோகு! ஏன் சந்தோஷப்பட மாட்டாரு?'

'அடி சக்கை! மனுஷனுக்கு நல்ல நேரம் வந்திருக்கு! நாங்கூட ஒரு நலல சேதியோடத்தான் வந்திருக்கேம்மா...'

'என்னது அது?'

'சகலனத்தை உங்களுக்கு நினைப்பிருக்கா?'

'எந்த சகலனம்? எதிர் ஃபிளாட்டுல இருந்தவர்தானே? அவரை எப்படிப்பா மறந்துபோகும்?'

'அவரை இந்தக் கல்யாணத்துல சந்திச்சேம்மா.. அவரோட கடைசி மச்சினி ரெண்டு வருஷம் முன்னால பிரசவத்துல இறந்துட்டாங்க. ஞாபகம் இருக்கா? அந்த சகலைக்கு வயசு முப்பத்திரெண்டுதான். ஆவுதாம்.. அருமையான வேலை, பணம், ரெண்டு பொம்பளைக் குழந்தைங்க – அஞ்சு வயசுலேயும் ரெண்டு வயசுலேயும் இருக்காம்... 'நல்ல அடக்கமான பொண்ணா, குழந்தைங்களை அக்கறையோட பார்த்துக்கறவளா தெரிஞ்சா சொல்லுங்க.. அழகு, பணம், படிப்பு எதுவும் முக்கியமில்லே, குணம்

இருந்தாப் போதும்'னு சொன்னார். எனக்குப் பளிச்சுனு சிவாகமியோட நினைப்புதான் வந்துச்சு! சொன்னேன், 'போய்ப் பேசி கடிதாசி போடுங்க. குமாரை அழைச்சிட்டுப் பொண் பார்க்க வரோம்'னார்.. எனக்கென்னவோ இந்த இடம் அமைஞ்சிடும்னே தோணுதும்மா! பணக்கார மாப்பிள்ளை... கைக்காசு செலவழிக்காத கல்யாணம்னாக்கூடவா, நடேசன் சம்மதிக்க மாட்டார்?

ஆண்டாளம்மா ஏதோ யோசனையுடன் நிற்க, சந்தேகத்தோடு லோகநாதன் கேட்டார்.

'ஏம்மா, ரெண்டு பிள்ளைங்க இருக்கேன்னு தயங்கறீங்களா?'

'நா அதைப்பத்தி நினைக்கலே, லோகு... நீ இல்லாதப்ப இங்க சின்னதா ஒரு தகராறு நடந்துபோச்சு... அதைத்தான்...'

'என்ன, நடேசன் மறுபடி கை நீட்டிட்டாரா?'

'நல்லவேளையா அவர் சம்பந்தப்பட்டது இல்லே. இந்த வேணி நாலு நாளா முகத்தைத் தூக்கிவெச்சுகிட்டிருந்தா.. சரியாச் சாப்பிடறதில்லே, யாரோடயும் பேசறதுகூட இல்லே! நாங்கூட உடம்புக்கு சுகமில்லியான்னு கேட்டேன். முந்தா நாள் வெறும் மோர் சாதத்தோட அவ எழ, 'ஏய்யா எப்படியோ இருக்கே?'ன்னு சிவகாமி கேட்டிருக்கா... அக்காளும் தங்கச்சியும் தனியா இருக்க, மொளுமொளுன்னு வேணி பிடிச்சுகிட்டாளாம். 'நா எக்கேடு கெட்டுப்போனா உனக்கென்ன? உன்னாலதான் என் வாழ்க்கையும் நாசமாப்போகுது! உன் துரதிர்ஷ்டம் என்னையும் கஷ்டப்படுத்துது! செந்தில் வீட்டுல, இன்னும் எத்தனை நாள் காத்திருக்கறதுன்னு கேக்கறாங்க.. நா என்ன பதில்னு சொல்ல? உன் விடியாமூஞ்சியை ஒருத்தன் ஏத்துக்கிட்டாத்தானே எனக்கு விடிவு பிறக்கும்?'னு கன்னாபின்னான்னு கத்தியிருக்கா! எனக்கு இது எதுவும் தெரியாது... அதிசயமா அன்னிக்கு நா கோவிலுக்குப் போறப்ப, சிவகாமியும் என்னோட வந்தா.. ஆஞ்சநேயர் சந்நதியில நின்னு பிரார்த்தனை பண்ணினவ, தன்னை மீறி அழுதுட்டா! என்னம்மான்னு கேட்டேன்.. கையப் பிடிச்சுட்டு, ஒருபக்கமா உக்கார்ந்து கதறிட்டா. போ! 'நா ஏன் பொறந்தேம்மா? என்னால ஒருத்தருக்கும் சுகமில்லே! கூன், குருடு, நொண்டி, முடம்னு ஒரு ஆம்பிளைகூடவா எனக்குனு பொறக்காமப் போயிட்டார்? கல்யாணம் ஆகாட்டி, சாவாவது வாக்கூடாதா?'ன்னு மடியில படுத்துகிட்டு, வேணி ஏசினதைச் சொல்லி

அழுதப்ப, நானும் அழுதிட்டேன், லோகு! தங்கமான பொண்ணு.. இதுக்கு ஒரு நல்ல வழிய பகவான் காட்டமாட்டேங்கறானே! இந்த பம்பாய் வரன் அமைஞ்சு, அவ சௌக்கியமா இருந்தா, என்னை விட சந்தோஷப்படறவ யாரும் இருக்க முடியாது!'

குளிததுவிட்டு லோகநாதன் அல்வாப் பெட்டியுடன் கீழே போனார்.

'என்ன சார், பரிக விழுந்திருக்காமே! விருந்து ஒண்ணும் கிடையாதா? சரி, இப்ப நா ஸ்வீட் தரேன... சுருக்க கல்யாண விருந்தை எனக்கு நீங்க போட்டுடுங்க, என்ன?'

அல்வா டப்பாலை அர்வந்துடன் நடேசன் வாங்கிக் கொள்ள, மெதுவாக குமாரைப்பற்றி லோகநாதன் விவரித்தார்.

பேசி முடித்தவரைக் கண்களை இடுக்கிக்கொண்டு நடேசன் ஏறிட்டார்.

'என்ன சம்பளம்னு சொல்றீங்க?

'ரெண்டாயிரத்துக்கும் மேல!'

'கார் வெச்சிருக்கார்னா சொல்றீங்க?'

'கம்பெனில குடுத்திருக்காங்களாம்... சேல்ஸ் மானேஜர் உத்தியோகம்னா நாலு இடத்துக்குப் போய்வாணுமே!'

'வேலை எங்க, பம்பாய்லயா?'

'இல்லே, பூனா பக்கத்துல...'

'கல்யாணத்தை அவங்க செலவுலயே செய்யறாங்களா?'

'அப்படித்தான் சொன்னாங்க... 'பணம் காசு நாங்க எதிர்பார்க்கலே, எல்லாம் எங்க செலவுதான்'னா என்ன அர்த்தம்?'

'ம்..ம்'

நடேசன் யோசனையில் அமிழ, லோகநாதனுக்குள் எரிச்சல் மூண்டது.

'குமார் வயதென்ன, குணம் எப்படி? இரண்டு குழந்தைகள் இருக்கிறார்களே, சரிப்படுமா?' என்றெல்லாம் கேள்விகள் கேட்காமல், 'சம்பளம் என்ன? கார் இருக்கிறதா? செலவு அவர்களுடையதா?' என்று சிந்திக்கும் இவரும் ஓர் அப்பன்.. கடவுளே!'

நடேசன் நிமிர்ந்தார்.

'இப்ப எனக்கு நேரம் நல்லாயிருக்குன்னு ஜோஸ்யர் சொன்னார்... ஒவ்வொண்ணா பலிச்சுகிட்டு வருது! நீங்க உங்க சினேகிதருக்குக் காகிதம் போட்டு வரச்சொல்லிடுங்க... எல்லாம் நல்லபடியா முடியட்டும்!'

தான் விரலை அசைக்காவிட்டாலும், அதிர்ஷ்டம் தானாகக் கூரையைப் பிய்த்துக் கொட்ட வேண்டும் என்கிற அவரது மனப்பான்மையை எண்ணி வேதனைப்பட்டுக் கொண்டே, உடனே சுகவனத்துக்கு விவரமாக லோகநாதன் கடிதம் போட்டார்.

சரியாய் எட்டாம் நாள், அந்த ஞாயிறு பெண்பார்க்க வருவதாக சுகவனத்திடமிருந்து பதில் கடிதம் வர, வழக்கத்துக்கு மாறாக, வரப்போகிறவர்களை வரவேற்க உற்சாகத்துடன் நடேசன் தயாராகத் தொடங்கினார்.

(10)

'வாசல் நடை குப்பையாக் கெடக்குதே? அதை யாராச்சும் பெருக்கக் கூடாதா? சிவகாமி, உடனே துடைப்பத்தைத் தூக்கிக்கிட்டு நீ கிளம்பறதே! ஏற்கனவே கருத்த நிறம்... ஒருமணிநேரம் போல தோட்டத்துல நின்னு பெருக்கினா, அவ்வளவுதான்! ஏய், ஈஸ்வரி... நீ படிச்சிக் கிழிச்சது போதும், போய் வாசலைக் கூட்டிட்டு வா!'

'மசமசன்னு நிக்காத, வேணி... வீட்டை மெழுகிட்டியா? நாக்காலியைத் தட்டி எடுத்துக் கூடத்துல போடு! பொம்பளைங்க வந்தா, உள்ள உக்கார அங்க ஒரு ஜமக்காளத்தை விரிச்சு வை! அறை கந்தர்கோலமா இருந்ததே, ஒழிச்சிட்டியா? புடவையும் துணியும் வாறியிறைஞ்சிட்டிருந்துதே, எடுத்து சீர்பண்ணிட்டியா? ஆவட்டும்... அவங்க வந்துடுவாங்க!'

'என்ன சிவகாமி, டிபன் ரெடியா? ஆண்டாளம்மா, நீங்க கூட இருக்கீங்க, இல்லே? ஏதோ, பெரியவங்க உங்க ஆசிர்வாதம்... எல்லாம் நல்லபடியா நடக்கணும்! சிவகாமி, அடுப்படியில வெந்து சாகாதே! வேணிய கவனிக்கச் சொல்லிட்டு, முகம் கழுவித் தயாராகு! உங்கம்மாவோட ரெட்டைப் பேட்டு மஞ்சள் பட்டுப்புடவையை உடுத்திக்கு! நீலம், பச்சைன்னு அடிக்கவார்ற மாதிரி கட்டாதே! நேத்துப் பறிச்ச மல்லிப்பூவை விக்கவேணாம்னு சொல்லியிருந்தேனே, கூட்டி வெச்சிருக்கியா? எடுத்து தலை நிறைய

வெச்சிக்க! பவுடர் கொஞ்சம் தாராளமா பூசிக்க... அழுது வடியாத!'

'ஆண்டாளம்மா, காபி கலக்கறப்ப, தண்ணியா சொம்புல தண்ணி விடாத பாலா எடுத்து வெச்சிருக்கறதை எடுத்துக்குங்க! பெரிய மனுஷங்க... நல்ல காபி சாப்பிட்டுத்தான் அவங்களுக்குப் பழக்கமா இருக்கும்!'

'என்ன லோகு சார், சொன்னா சொன்னபடி வந்துடுவாங்க, இல்லே? ரயில் எப்ப வருது? நேரா ஓட்டலுக்குப் போய் குளிச்சித் தயார்பண்ணிகிட்டு வருவாங்களா? நாம வேணா ஓட்டலுக்கே போய்க் கூட்டிட்டு வருவோமா? இங்கயே தங்கிக்கலாம்னு சொல்ல ஆசைதான்... ஆனா, பணக்காரங்க, அவங்களுக்கு இங்க வசதிப்படுமோ இல்லியோன்னு தயக்கமா இருந்துச்சு! மணி பத்தரவுது... பதினொண்ணுக்கு வந்துடுவாங்க, இல்லே? வேணுன்னா ஓட்டலுக்கு போன் பண்ணிக் கேக்கறீங்களா?'

இருப்புக் கொள்ளாமல், குட்டி போட்ட பூனையாய் இப்படித் தவிக்கும் நடேசன்–

யார் மேலும் கல்லென்று விழாமல், தானே முன்நின்று பொறுப்புடன் காரியங்களைக் கவனிக்கும் நடேசன்–

தகப்பனாய் லட்சணமாய்க் கரிசனத்துடன் பிள்ளை விடாரைப் பற்றி விசாரிக்கும் நடேசன்– எல்லோருக்கும் ரொம்பப் புதுசு.

என்னாயிற்று?

நிஜமாகவே, பெண்ணுக்கு நல்ல வழி காட்டுவது தன் கடமை என்று மாறிவிட்டாரா?

இல்லை, பணக்கார இடம், காசு செலவில்லாமல் அமையக் கொடுத்துவைத்திருக்க வேண்டும் என்ற சுயநல நோக்குடன் மட்டுமே செயல்படுகிறாரா?

எதுவானாலும், இந்த இடம் குதிர்ந்து, சிவகாமி புருஷனுடன் வாழப் போனால் தேவலை என்றே லோகநாதனுக்கு இருந்தது.

சுகவனமும் குமாரும் வந்து இறங்கியபோது மணி பதினொன்று அடித்து ஐந்து நிமிஷங்கள் ஆகிவிட்டன.

டாக்ஸியிலிருந்து சுகவனத்தைத் தொடர்ந்து இறங்கின குமார், நிறைய ஏமாற்றத்தைக் கொடுப்பவனாக இருந்தான்.

கட்டை, குட்டை, ரொம்பக் கறுப்பு என்றில்லாவிட்டாலும் மொச்சை மொச்சையாய் முகம் முழுவதும் அம்மைத் தழும்புகள்.

லோகநாதன் தம்மை உலுக்கிக் கொண்டார்.

பார்க்க எப்படியிருந்தால் என்ன?

அந்தஸ்தானவன்...

குணவான்.

அப்புறமென்ன?

வந்தவர்களை லோகநாதனும் ஆண்டாளம்மாவும் வாசலுக்கு வந்து வரவேற்றனர்.

'வாங்க சுகவனம், வாங்க தம்பி..'

'என்னம்மா, நல்லா இருக்கீங்களா? சண்முகம் வீட்டுக் கல்யாணத்துக்கு வருவீங்கன்னு ரொம்ப எதிர்பார்த்தோம்..'

'வரவர பயணம் பண்ணக்கூடத் தெம்பில்லைங்க... அதான் நீங்களே இப்ப வந்திட்டீங்களே! வீட்டுல கல்யாணி, குழந்தைங்க நல்லா இருக்காங்களா?'

உள்ளே வந்தவர்களை நடேசனுக்கு லோகநாதன் அறிமுகம் செய்வித்தார்.

'இதான் எங்க நண்பர் சுகவனம்.. அவர் மிஸ்டர் குமார்..'

'வாங்க... உக்காருங்க...'

தயாராக இருந்த நாற்காலிகளில் வந்தவர்கள் அமர்ந்தனர்.

கையோடு கொணர்ந்திருந்த பையை ஆண்டாளம்மாவிடம் சுகவனம் நீட்டினார்.

'அவளும் வரதாதான் இருந்தா... கடைசி நிமிஷத்துல வீட்டுல இல்லாமபோயிட்டா. பெரியவங்களா நீங்களே எங்களுக்குப் பதிலா, இதையெல்லாம் ஒரு தாம்பாளத்துல வெச்சுக் குடுத்துடுங்க..'

ஆண்டாளம்மா உள்ளே சென்று தாம்பாளம் ஒன்றை எடுத்துவந்து பையில் இருப்பவற்றை அடுக்கினார்.

நாலு தேங்காய், ஆறு ஆப்பிள், ஒரு சீப்பு வாழைப்பழம், வெற்றிலை பாக்கு, மஞ்சள், பன்னீர் பூ, ஒரு சிவப்பு 'டீ ஷர்ட்' ரகிக்கைத் துண்டு.

தாம்பாளத்தைக் கூட்டத்து மேஜையில் வைத்துவிட்டு, ஒருபக்கமாய் நின்றார்.

பூரி மசாலா, ரவை கேசரி.

'சாப்பிடுங்க. எல்லாம் சிவகாமியே தயார்பண்ணினது!'

ஸ்வரி தண்ணீர் லோட்டாக்களைக் கொணர்ந்து வைத்தாள்.

'இன்னும் ரெண்டு பூரி வெச்சிக்கங்க... வேணி, பூரி எடுத்துட்டு வா...'

அவர்கள் கை கழுவி முடித்ததும் காபி வந்தது.

குடித்தார்கள்.

'பொண்ணை வரச் சொல்லலாமா?'

வேணி உடன் வர, சிவகாமி கூடத்துக்கு வந்தாள். வந்தவர்களை வணங்கினாள். ஆண்டாளம்மா அருகில் போய் நின்று கொண்டாள்.

'சிவகாமிய இந்த ஒரு வருஷமா எங்களுக்குப் பழக்கம், சுகவனம்... தங்கமான பொண்! வெறும் முகஸ்துதிக்காகச் சொல்லலே... மாடு, வீடு, தோட்டம்னு அத்தனையும் அவதான் கவனிச்சுக்கறா.. அவ குணத்துக்கும் அடக்கத்துக்கும் நா பொறுப்பு.!

இதுநாழிகை எதுவும் பேசாமல் அமர்ந்திருந்த நடேசன், வாயைத் திறந்தார்.

'என் சம்சாரம் காலமாகி எட்டு வருஷத்துக்கும் மேலே ஓடிடுச்சு... மூணும் பொம்பளைப் பசங்க... மூத்தவ, அம்மா ஸ்தானத்தை எடுத்துக்கிட்டா! ரெண்டாமவ வேணி– டிப்ளமோ கொண்டு வந்தாளே, பி.ஏ. படிச்சிட்டு ஆபிஸ்ல கிளார்க்கா இருக்கா. இது மூணாவது பொண் ஸ்வரி... பி.ஏ. கடைசி வருஷம் படிக்கறா! எப்படிடா ஒண்டியா இந்த மூணு பொண்ணுங்களையும் கரையேத்தப்போறோம்னு தவிச்சுக்கிட்டிருந்தேன்... அம்மாவும் லோகு சாரும் தெய்வமா உங்களை அழைச்சிட்டுவந்திருக்காங்க. நா தனியார் கம்பெனில வேலைபார்த்தவன்... பென்ஷன், அது, இதுன்னு எதுவும் கிடையாது. மாடி வாடகையும் வேணி சம்பாத்தியமும்தான் என் வருமானம். இருக்கறதை வெச்சுகிட்டு என்னமா ஓட்டப்போறோம்னு மலைச்சிருந்தேன்.. முருகன் கருணையோட உங்களை அனுப்பியிருக்கான்!'

யாசகம் கேட்கிற பாவனையில் 'நான் இல்லாதவன், என்மேல் தயை காட்டுங்கள்... செலவில்லாமல் என் பெண்ணை ஏற்றுக் கொள்ளுங்கள்'

என்று நெஞ்சுகிற பாவனையில் நடேசன் பேசுவதைக் கேட்ட லோகநாதனுக்குக் குமட்டிக்கொண்டு வந்தது.

என்ன பணிவு!

என்ன அக்கறை!

என்னமாய் வேஷம் போடுகிறார், மனிதர்!

லோகநாதன் சுகுவனத்தைப் பார்க்க, அவர் குமாரை ஏறிட்டார்.

'கொஞ்சம் இப்படி வர்றீங்களா?'

குமார் சுகுவனத்தை அழைத்துக்கொண்டு வாசலுக்குச் சென்றார்.

தோட்டத்தில் நடந்தபடி, கைகளை ஆட்டிக்கொண்டே குமார் ஏதோ சொல்வதை, இங்கிருந்து பார்க்க முடிந்தது.

பெண்ணைப் பிடித்திருக்கிறது, பிடிக்கவில்லை என்று சொல்ல, எதற்காக இத்தனை பேச்சு?

எதுவும் புரியாமல் அனைவரும் தவிப்புடன் நிற்கையில், வெளியே போனவர்கள் உள்ளே வந்தார்கள்.

சுகுவனம் கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக்கொண்டார். லோட்டாவை எடுத்து ஒரு வாய் தண்ணீர் குடித்தார்.

லோகநாதனையும் நடேசனையும் பார்த்து, 'வாசலுக்கு வர்றீங்களா? குமார் ஏதோ சொல்ல விரும்பறான்...' என்று அழைத்தார்.

இரண்டு பேரும் வராந்தாவுக்குச் சென்றனர்.

சுகுவனம் தாழ்ந்த குரலில் பேசினார்.

'உங்க வீட்டுல சம்பந்தம் பெச்சிக்க குமார் தயார்... ஆனா... வந்து...நீங்க தப்பா எடுத்துக்கக் கூடாது... குமார் உங்க ரெண்டாவது பொண் வேணிய விரும்பறான்! முதல்ல டிபன் தட்டோட அவ வரவும், சட்டுனு பிடிச்சுப்போச்சாம்! நீங்க சரின்னா, மேற்கொண்டு ஆகறதைக் கவனிக்கலாம்!'

லோகநாதன் அரண்டு போனார்.

'எ... என்னது?'

யாரும் பதில் சொல்லாமல் இருக்க, அவரே அவசரமாய், 'அதெப்படி? மூத்தவ இருக்கறப்ப, ரெண்டாவது மகளை எப்படி?' என்று முனகினார்.

'தப்பு என்ன சார்? குமாருக்கு அப்படியொண்ணும் வயசாகிடலே... மூப்பத்திரெண்டுதான்! ரெண்டாயிரத்து நானூறு சம்பளம், வீடு, கார்னு அந்தஸ்தா வாழறான்... அவன் இருக்கிற தூள்நிலைக்கு படிக்காத பொண்ணைக் காட்டிலும் படிச்சவதானே ஏத்தவளா இருப்பா? ஒரு பார்ட்டிக்குப் போக வர, நாலு பேரோட இங்கிலீஷ்ல பேச... எல்லாத்துக்கும் படிச்ச பொண்ணா அமைஞ்சா நல்லதுதானே?'

'சிவகாமி பத்தின விவரங்களை நா பம்பாய்லயே உங்களுக்கு சொல்லிட்டேனே, சுகுவனம்? அப்ப சரிசரின்னு சொல்லிட்டு, இப்ப இங்க வந்து இப்படிச் சொன்னா?'

'வாஸ்தவமாவே சிவகாமிய நினைச்சுட்டுத்தான் வந்தோம், லோகு சார்... வந்த இடத்துல ரெண்டாவது மகளும் கல்யாண வயசிலியே இன்னும் அதிகமான நகுதிகளோட இருக்கறதைப் பார்த்தப்பறம், அவளைவிட இவ தேவலையோன்னு தோணிடுச்சு. கல்யாணன்றது ஆயிரங்காலத்துப் பயிர் இல்லியா? நாலையும் யோசிக்க வேணாமா? குமார், அவனைப் பெத்தவங்களுக்கு ஒரே பிள்ளை... கொத்துப்பூரா இவனுக்குத்தான்! அதையும் நினைச்சுப் பாருங்க... அப்பறம் உங்க இஷ்டம்...'

'இல்லே... வந்து... நியாயம்னு ஒண்ணு...'

வேணியின் காதலைப்பற்றி எடுத்துச்சொல்ல முடியாமல் தவித்த லோகநாதனை நடேசன் அடக்கினார்.

'இருங்க சார்... நா ஒருத்தன் இருக்கறதை மறந்து நீங்களே பேசிட்டிருந்தா எப்படி? பெத்தவன், என் சம்மதம் முக்கியமில்லையா? சுகுவனம் சார், சிவகாமியோட அதிர்ஷ்டம் இப்படியிருந்தா நாம என்ன பண்றது? வேணிய கட்டிக்கச் சம்மதம்னா, எனக்கு ஆட்சேபனை ஒண்ணுமில்லே... அவளாவது வசதியோட சௌக்கியமா இருந்தாச் சரி'

'நடேசன் சார்... வந்து... நா என்ன சொல்றேன்னா...'

'நீங்க சும்மா இருங்க, லோகு சார்... எனக்கு இதுல தப்பு ஒண்ணும் இருக்குறதாத் தெரியலே.'

'ஆனாலும்... வேணிய ஒரு வார்த்தை... கொஞ்சம் நிதானமா இருங்க, நடேசன் சார்.'

சுகவனம் நிலைமை புரிந்த திலுசில் பேசினார்.

'லோகு சார் சொல்றதும் நியாயந்தான்.. பொண்ணோட விருப்பத்தைத் தெரிஞ்சுக வையுங்க... நாங்க ஒரு வேலையா வெளியில போயிட்டு, ஆறு மணிக்கு மேல அசோகா ஓட்டலுக்குத் திரும்பிடுவோம். ரூம் நம்பர் இருநூத்தி நாலு. நீங்க எல்லாரும் கூடிப் பேசிட்டு, ஒரு நல்ல முடிவோட அங்க வந்து சொல்லுங்க.. அப்ப நாங்க கிளம்பறோம்'

அவர்கள் புறப்பட்டுப்போனதும், 'வேணி, இங்க வாம்மா, வேணி...' என்று அவாதிப் பாசத்துடன் அழைத்தபடி நடேசன் வீட்டுக்குள் நுழைய, அவர் அவளோடு பேசுகையில் உண்டாகப்போகும் பூகம்பத்தை எதிர்நோக்க வலு இல்லாதவராய், அவசரமாய் மாடிப்படிகளில் லோகநாதன் தாவி ஏறினார்.

(11)

கால் மணி கழித்து மாடிக்கு வந்த ஆண்டாளம்மாவின் முகம் வெளிறியிருந்தது. மனசின் படபடப்பு உடம்பில் தெரிந்தது.

படுக்கையில் நீளமாய்ப் படுத்து, முன்கையால் முகத்தை மறைத்திருந்த மகனிடம் வந்து நின்றார்.

'என்னப்பா லோகு, அநியாயம் இது?' என்றார்.

அவர் பதில் கூறாமல் இருக்க, தோளை உலுக்கி, 'லோகு, நா கேக்கறது காதுல விழலியா?' என்றார் மறுபடி.

லோகநாதன் கையை எடுத்தார்.

அம்மாவை வெறித்துப் பார்த்தார்.

'எனக்கும் அதிர்ச்சியாத்தாம்மா இருக்கு..' என்று முனகினார்.

'எந்த தைரியத்துல அந்த குமாரும் சுகவனமும் அப்படிக் கேட்டுட்டுப் போறாங்க? புருஷன்களை அழைச்சி தனியாப் பேசணும்னு சொன்னப்ப, 'சரி, பொம்பளை யாரும் கூட வரலை... அதான் எங்க முன்னால பேச வெக்கப்படறாங்க. சீர் செனத்தி பத்தி ஏதோ கேக்கப் போறாங்கன்னு நினைச்சேன்... இப்ப நடேசன் பெரிசா ஒரு குண்டை இல்லே தூக்கிப் போட்டுட்டாரு! நிஜமாத்தான் அவங்க அப்படிச் சொன்னாங்களா, லோகு?'

லோகநாதன் எழுந்து உட்கார்ந்து மெதுவாய்த் தலையை அசைத்தார்.

'அட வெக்கங்கெட்டவங்களா! அக்காளைப் பார்க்க வந்துட்டு தங்கச்சியைப் பண்ணிக்கறேன்னு தைரியமா சொல்றானே, இவனெல்லாம் அக்கா தங்கைகளோட பொறந்தவன்தானா? அந்தப் பொண் மனச என்னமா வேதனைப்படும், தூள் தூளா உடைஞ்சுபோகும்னு யோசிச்சிருந்தா, இப்படியொரு பேச்சுப் பேசுவானா? பொண் பார்க்க அண்ணன்கூட வந்த தம்பியைப் பார்த்துட்டு, 'அண்ணனைப் பிடிக்கலே, தம்பியை செஞ்சுக்கறேன்'னு பொண் சொன்னா, இதே ஆம்பளைங்க ஏத்துப்பாங்களா? நீமிர் பிடிச்ச தேவடியான்னு கால்ல போட்டு மிதிக்க மாட்டாங்க? நூறாந்தேறி.. எனக்கு வாற ஆத்திரத்துக்கு...'

ஆண்டாளம்மா பொரிந்துதள்ள, எதற்கும் பதில் பேசாமல் லோகநாதன் அமர்ந்திருந்தார்.

'என்னப்பா சம்முனு இருக்கே? அவங்க அப்படிப் பால் மாறிப் பேசினதுல உனக்கு வருத்தம் இல்லியா?'

'வருத்தம்தாம்மா.. ஆடிப்போய் உக்காந்துகிட்டிருக்கறதுலேருந்தே தெரியலையா?'

'அவங்க அப்படிக் கேட்டதும், பளிச்சுனு முகத்துல அடிச்சாப்பல, 'நீங்களும் ஆப்பிளைதானா'ன்னு கேட்டிருக்க வேணாம்?'

'அதெப்படிம்மா? அவங்க விருப்பத்தைச் சொல்லி, நா நியாய அநியாயத்தை எடுத்துச் சொல்றதுக்கு முன்னால, நடேசனே 'எனக்குச் சம்தம்'னு குதிக்கறார். அப்பறம் எந்த முகத்தோட நா அவங்களைப் பளிச்சுன்னு கேக்க?'

'என்ன மனுஷன் இவரு! மூத்தவ அடிபட்டுப்போவாள்னு தெரிய வேணாம்? சரி, நல்ல வரனை விட்டுடக்கூடாதுன்ற வெறி இருந்தாலும், ஐயா, அதை இப்படியா அப்பட்டமா காட்டிக்கறது? யோசனை பண்ணிட்டு அப்பறமா சொல்றேன்னு சொல்லிட்டு, சிவகாமியை அழைச்சு பக்குவமாவாவது கேக்கக்கூடாது?'

'உள்ளாற அவர் சிவகாமிகிட்ட என்ன சொன்னார்ம்மா?'

'ஆ? சொன்னார். மட்டைக்கு ரெண்டு கீத்துன்னு! அடப்போ, லோகு... அவர் எங்க மூத்தவளை மதிச்சுக் கூப்பிட்டார்? அவ மனச

நொந்துபோயிருக்குமேன்னு ஒரு கணம்கூட நினைச்சுப்பார்க்கலியே பாவி மனுஷன்! என்ன தகப்பனார்டா இவரு? உள்ளாற வந்து 'வேணி, வேணின்னார். சமையல்கட்டுல இருந்தவங்க கும்பலா கூடத்துக்கு வந்தோம். 'உனக்கு நல்லகாலம் பொறந்துடுச்சு, வேணி... நீ என்னிக்குமே அதிர்ஷ்டக்காரிதான். காரும் பணமும் உனக்குன்னு இருக்கு ரெண்டாயிரத்து நானூறு சம்பளம். கார், ஆள், அம்பு அத்தனையும் உனக்குத்தான்! நான் லாட்ரில பரிசு அடிச்ச மாதிரி நீயும் ஜாக்பாட் அடிச்சிட்டே'ன்னு சம்பந்தாசம்பந்தம் இல்லாம பேத்தினார். எங்களுக்கு ஒண்ணும் புரியலே. எங்க முழிப்பைப் பார்த்துப்பறம்தான் நிதானத்துக்கு வந்து, விளக்கினார். பூரா விவரமும் கேட்டு முடிக்கறதுக்குள்ள தீ வைச்ச மாதிரி தேகம் எரிஞ்சுபோச்சு. லோகு! சிவகாமி சட்டுன்னு திரும்பி சமையல்கட்டுக்குப் போயிட்டா.... வேணியைப்பத்தி கேக்கவே வேண்டாம்... பேய் அறைஞ்ச மாதிரி நின்னுட்டா! நா மாடிக்கு உள்ளண்ட ஓடிவந்தேன்..."

ஆண்டாளம்மாவுக்கு மூச்சு வாங்கியது. கண்களில் நீர் பூத்தது. தொண்டை அடைத்துப் போய், குரல் நடுங்கியது.

லோகநாதன் நீளமாய் மூச்சிழுத்து தன்னை ஆஸ்வாசப்படுத்திக்கொண்டார்.

'இனி நீங்களும் நானும் என்னம்மா செய்ய முடியும்? இன்னும் கொஞ்ச நாழில கீழே ஒரு பிரளயம் பொங்கப்போவுது... வேணி தனக்கு இஷ்டமில்லேன்னு சொல்லுவா... ஏன்னு நடேசன் கேட்பாரு. செந்திலை அவ நேசிக்கிறது வெளிப்பட்டுபோவுது... அவ்வளவுதான்! அதுக்குமேல சொல்ல என்ன இருக்கு?'

சில நிமிஷங்களுக்கு எதுவும் பேசாமல் இருந்துவிட்டு ஆண்டாளம்மா, 'அப்பனே முருகா' என்றபடி பின்கட்டை நோக்கி நடந்தார்.

லோகநாதன் படுக்கை கொள்ளாமல் எழுந்து ஜன்னலருகில் வந்து நின்றார்.

மாமரம் பூ எடுக்கத் துவங்கியிருந்தது. கிட்டத்திலிருந்து சுவாசிக்கும்போது சன்னமாய் பூவின் மணம் நாசியில் ஏறியது.

கொத்துக்கொத்தாய் அப்பியிருந்த பூக்களை ஏராளமாய் எறும்புகள் மொய்த்துக்கொண்டிருந்தன. நடுநடுவில் ஒரு தேனீ வந்து அமர்ந்துவிட்டுப்

பறந்தது.

லோகநாதன், எந்த நிமிஷமும் அழுத கோலத்தில் வேணியை மேலே எதிர்பார்த்தார்.

யாரை நினைத்து வருந்துவது, எதற்கு என்று கோபப்படுவது என்று புரியாத அவஸ்தையில் அவர் இருந்தார்.

பாவம் சிவகாமி! எப்படியோ ஒரு வழி கிடைத்துவிடும் என்று நம்பியதும் பொய்த்துவிட்டது. இனி அவளைத் தேற்றுவது எப்படி?

ஒரு வருஷத்துக்கும் மேலாய் அதீதமான அன்பில் திளைத்து, காதலில் சிலிர்த்து, ஆணழகன் செந்திலுடன் வாழப்போகும் நாட்களுக்காகக் காத்திருக்கும் வேணிக்கு, இப்போது ஒரு பெரிய இடி.

முரட்டு அப்பா...

புரிந்துகொள்ளாத- தன்னலமிக்க அப்பா..

இவரைச் சந்திக்கவேண்டிய கட்டம் இப்போது சற்றும் எதிர்பாராமல் வேணிக்கு வந்துவிட்டதே!

என்ன செய்வாள்? எப்படிச் சமாளிப்பாள்?

'மாப்பிள்ளைகிட்ட வேணிக்கு சம்மதம்னு சொல்லிட்டு வந்திடவா?'

'வேணாம்ப்பா..'

'ஏண்டி வேணாம்?'

'வந்து..'

'வந்து?'

'செந்தில்னு என் ஆபீஸ்ல ஒருத்தர் இருக்கார். அவரை நாவிரும்பறேன்ப்பா.'

'தெருப்பொறுக்கி நாயே! அடக்கமில்லாம இப்படியொரு காரியத்தை செஞ்சிருக்கியே, உன்னை வெட்டிப் புதைச்சிட்டுத்தாண்டி மறுவேலை.'

ஆக்ரோஷமாக நடேசன் பாய, வேணி கதற...

ச்சே!

நின்று நிதானமாகச் சிந்திக்க விடாமல், பயங்கரமான கற்பனை லோகநாதனை ஓட ஓட விரட்டியது.

அப்பன்காரன் கூடவே இருப்பதால் அவளால் மேலே வர

முடியவில்லையோ?

கீழே போனார்.

கூடத்திலேயே நடேசன் இருந்தார்.

'என்ன சார், சொல்லாம கொள்ளாம திடும்னு மேலே போயிட்டீங்க?'

'தலைவலி..'

வேணி எங்க?

பார்வையில் தூழாவினவரைக்கும் ஆளைக் காணவில்லை.

'எங்க, ஒருத்தரையும் காணோம்?'

'இங்கதானே இருந்தாங்க? வேணி... ஈஸ்வரி..'

ஈஸ்வரி எட்டிப்பார்த்தாள்.

'என்னப்பா?'

'மத்த ரெண்டு பேரும் எங்கே?'

'சிவகாமிக்கா சமையல்கட்டுல இருக்கா.. வேணிக்கா இங்கதான் படுத்திருக்கா.. கூப்பிடணுமா சார்?'

'வேணாம், வேணாம்.. சும்மாத்தான் கேட்டேன்..'

அவள் போனபின் லோகநாதனும் மாடிக்கு வந்தார்.

மதியச் சாப்பாடு தொண்டையில் இறங்கமாட்டேனென்று சண்டியண்ணியது.

வேணி..

வேணி எங்கே?

அப்பாவின் முரட்டுத்தனத்துக்கு பயந்துகொண்டு ஏடாகூடமாக ஏதாவது செய்துகொண்டுவிடப்போகிறதே, அசட்டுப்பெண்!

அவளைப் பார்த்து, 'கவலைப்படாதே.. ஆனது ஆகட்டும், நான் இருக்கிறேன்' என்று சொல்லிவிட்டால் தேவலை போல மனசு பரபரத்தது.

அசோகா ஓட்டலுக்குப் போய் கதவனத்தைச் சந்தித்து, 'மூத்தவள் வேண்டாமென்றால், அதோடு விஷயத்தை விடுங்கள். ஓர் அருமையான ஜோடி பிரிய நீங்கள் காரணமாய் இருக்காதீர்கள்.. செந்தில் – வேணி காதல் வளர்ந்து கனிந்ததற்கு நானே சாட்சி– என்று உண்மையைச்

சொல்லிவிடலாமென்றால் சொந்த வேலையாய் வெளியே போய்விட்டு ஆறுமணிக்கு மேல்தான் ஓட்டலுக்குத் திரும்புவோம் என்று சொல்லித் தொலைத்துவிட்டார்களே..!

முருகா..!

நான் என்ன செய்வேன்?

இரண்டு தரம் தோட்டத்துக்கும் வாசலுக்கும் போகிற சாக்கில் கீழே சென்று வந்தார்.

நடேசன்தான் குத்துக்கல் போல உட்கார்ந்திருந்தார்.. மற்ற எவரையும் காணோம்.

தைரியத்தை வரவழைத்துக்கொண்டு மெதுவாகக் கேட்டார்..

'வேணிகிட்ட பேசிட்டீங்களா?'

நடேசன் அட்டகாசமாய் சிரித்தார்.

'பேசாம? யோசிச்சுச் சொல்றேன்னு சொல்லிட்டா.'

யோசிக்கிறேன் என்று சொல்லிவிட்டு விரக்தியில் தத்தக்காபுத்தக்காவென்று எதையாவது செய்துவிடப் போகிறாளே!

ஒரு புடவை கிடைத்தால் போதுமே. உத்தரத்திலிருந்து தொங்க!

எதுவும் புரியாமல் குழப்பத்தோடு கூடத்தின் நீள அகலத்தைக் கால் வலிக்க அளந்துகொண்டிருந்தபோது, நடேசன் பெரிதாய் கீழேயிருந்து, 'சார்... லோகு சார்!' என்று கத்த, என்னவோ ஏதோவென்று மிரண்டு அம்மா தொடர, லோகநாதன் கீழே ஓடிவந்தார்.

சர்க்கரைக் கிண்ணத்தை முன்னால் நீட்டி, 'சர்க்கரை எடுத்துக்குங்க, சார்.. வேணி சரின்னு சொல்லிட்டா' என்று கூவ– சத்தியமாய் லோகநாதன் அதிர்ந்துபோனார்.

'எ.. என்னது?'

'வேணி இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிச்சிட்டா, சார்..'

'வே... வேணியா? சரின்னுட்டாளா? எங்க, அவ எங்க?'

ஒருபக்கமாய் நின்றிருந்த வேணியைப் பார்த்தவர், அவளிடம் தாவினார்.

'என்னம்மா இது? இவர் என்ன வேணி, சொல்றார்? நீ எதுக்கும் பயப்படாதே... நா இருக்கேன்! கடைசிவரை ஒரு கை பார்த்துடுவோம்!

அப்பா மிரட்டலுக்குப் பணியாதே, வேணாம்...'

பிதற்றலாய் பேசியவரை வேணி தீர்க்கமாய் பார்த்தாள்.

'அப்பா ஏன் சார், என்னை மிரட்டணும்? அவர் சொன்னதையெல்லாம் யோசனை பண்ணிப்பார்த்தேன்.. நிஜமா அத்தனையும் எனக்கு நல்லதைத்தான் தரும்னு புரிஞ்சுது! வாழ்க்கையில இந்த மாதிரி சந்தர்ப்பங்கள் அடிக்கடி வராது... அவர் சொன்னதை ஏத்துகிட்டு மனப்பூர்வமாதான் சரின்னு சொல்லியிருக்கேன்! நீங்க எதையாவது பேசி, வீண்குழப்பத்தை உண்டாக்காதீங்க, சார்... ப்ளீஸ்.. சார்...'

இரண்டு கைகளையும் சற்றே கூப்பிக்கொண்டு, 'எதையாவது' என்ற வார்த்தைக்கு அழுத்தம் கொடுத்துப் பேச...

அடிப்பாவி!

அடி, நாசக்காரப்பாவி!

இவளும் ஒரு பெண்ணா?

இவளுக்குக் காதல் ஒரு கேடா?

இவள் காதலை சத்தியமானது என்று நம்பி இவளுக்காக வாதாடி, நமக்கை அன்று அடிப்பட்டதற்கு அர்த்தமில்லாமல் செய்துவிட்டாளே.. பாவி!

கடைசியில், சட்டையைக் கழற்றி மாட்டிக்கொள்கிற மாதிரி, மனசையும் நொடியில் மாற்றிக்கொண்டு, 'காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்வது மட்டும்தான் என் லட்சியம், வேறெதுவும் இல்லை' என்று திட்டவட்டமாய்ச் சொல்லிக்காட்டிவிட்டாளே!

பாவி, மகாபாவி!

ராஜா மாதிரி தோற்றம் கொண்ட செந்தில்... குணக்குன்றான செந்தில்...

காக்கா மூஞ்சியில் அம்மை வடுக்கள் நிறைந்த குமார்...

அக்காளைப் பார்க்க வந்து, அழகான தங்கை கண்ணில் பட, அவளை விரும்பிய குமார்...

அவனைவிட இவன் இவளுக்கு எந்த அளவுகோலால் உயர்ந்தவனானான்?

பணம்!

இரண்டாயிரத்து நானூறு!

கார்!

வீடு!

ஆள்!

இலையா?

அடிப்பாவி! மகாபாவி!

விக்கித்து நின்று கண்கள் கலங்க, எதிரில் நின்றவளை வெறித்த லோகநாதனை நடேசன் அருகில் வந்து தோளைத் தட்டினார்.

'ரெண்டாந்தாரம், ரெண்டு பசங்க இருந்தா என்ன, லோகு சார்? வாழ்க்கையில கஷ்டமில்லாம வாழப் பணம் வேணும். அது நிறைய இருக்கப்போவுதே... அப்புறமென்ன? தெளிவா இருக்கறவளை வீணா குழப்பாதீங்க!'

தெளிவு..

இவளா தெளிவானவள்?

தூத்தேரி!

இவள் அகராதியில் காதல், உண்மை, தெளிவு, இவற்றுக்கெல்லாம் என்ன அர்த்தம்?

ஒருவித இயலாமை உச்சந்தலையில் தொடங்கி பூரணமாய் ஆட்கொள்ள, லோகநாதன் மெதுவாகத் திரும்பினார். மாடிப்படிகளை நோக்கி நடந்தார்.

'நாலரை– ஆறு ராகு காலம்.. அப்பறமா பொறப்பட்டுப் போய் மாப்பிள்ளைகிட்ட விவரம் சொல்லி, முகூர்த்தத்துக்கு நாள் குறிச்சிட்டு வரலாமா, லோகு சார்? நீங்களும் வர்றீங்களா?'

'எனக்குத் தலைவலி அதிகமா இருக்கு... நீங்கதான் சம்பந்தி; முக்கியப்பட்டவர்... போய்ப் பேசிட்டு வந்துடுங்க! நா நாளைக்கு அவங்களைச் சந்திக்கறேன்..'

மாடிக்கு வந்தவர், குளியலறைக்குச் சென்று, ரொம்ப வருஷங்களுக்குப் பிறகு விசித்துவிசித்து அழுதார்.

ஆறாத ரணமாக விண்விண்ணென்று என்னவோ உள்ளுக்குள் தெறித்தது.

பச்சைத் தண்ணீரை விட்டு முகம் கழுவிய பின், படுக்கையறைக்கு வந்தார். அசதியாக இருந்தது.

விவரிக்கத் தெரியாத சோகம் நெஞ்சைப் பீடிக்க, கண்களை மூடிக்கொண்டார். சீக்கிரமே ஆழ்ந்து உறங்கிப்போனார்.

கண் விழித்தபோது, இருட்டிவிட்டிருந்தது.

எழுந்து மொட்டைமாடிக்குச் சென்றார்.

நிலா மெதுவாகக் கீழ்வானத்தில் முகத்தைக் காட்ட முயற்சி பண்ணிக் கொண்டிருந்தது.

செந்திலை நினைக்கையில் இதயம் ரொம்ப வலித்தது.

இரண்டு நாட்கள் கழித்து அவன் வீட்டுக்குச் சென்று முதுகைத் தட்டிக் கொடுத்து, 'விட்டுத்தள்ளுங்க, செந்தில்... வாழ்நாள் பூரா இந்த மாதிரி பொம்பளையோட அவஸ்தைப்பட இருந்த உங்களை ஆண்டவன் காப்பாத்திட்டான்னு நினைச்சுக்குங்க' என்று சமாதானம் செய்யவேண்டுமென்று நினைத்துக் கொண்டார்.

சுவரில் சாய்ந்து கொண்டு எதேச்சையாய் கீழே பார்த்தார்.

நோய்க்கும் கல்லின் மேல் சின்னதாய் ஓர் உருவம் இருளோடு இருளாக அமர்ந்திருப்பது புரிந்தது.

சிவகாமி!

சூழ்நிலையின் அமைதியைக் கிழித்துக்கொண்டு சின்னச்சின்ன கேவல்கள்... குட்டிக்குட்டி விசும்பல்கள்...

பாவம்! சிவகாமி அழுகிறாளா?

அத்தனை ஏமாற்றமா அவளுக்கு?

சில நாட்கள் முன் அவள் தன்னிடம் கதறி அழுததை அம்மா சொன்னது மண்டைக்குள் முட்டியது.

'கூன், குருடு, நொண்டி, முடம்னு ஒரு ஆம்பிளை கூடவா எனக்குனு பொறக்காமப்போயிட்டார்?'

கடவுளே!

இந்த நல்லவளுக்கு ஒரு வழி செய்ய ஏன் யாருக்கும் மனமில்லை?

அசையாமல் நின்று, கீழே துடித்து அழுகிறவளைக் காணக்காண, லோகநாதனின் இதயம் நெகிழ்ந்துநெகிழ்ந்து மெள்ள அவள்பால் சென்றது. மோவாயைத் தொட்டு நிமிர்த்தியது.

'அழாதே சிவகாமி,' என்றது.

'நான் இருக்கிறேன் உனக்கு. ஆயுசுபர்யந்தம்' என்று கூறியது.

திடுமென்று லோகநாதனுக்கு சிலிர்த்துப் போயிற்று.

ஓ!

கடவுளின் சித்தம் கடைசியில் இதுதானா?

முருகா...! என்னப்பனே முருகா...!

நிமிர்ந்து நின்றார்.

அம்மாவிடம் சென்று, 'இருபது வருஷங்களுக்கு முன்னால் கெஞ்சிக் கெஞ்சி, கதறிப் புலம்பி நீங்கள் கேட்டு நான் மறுத்துவிட்டதற்கு, இன்று சம்மதம் தெரிவித்தால் என்ன சொல்வீர்கள் அம்மா' என்று கேட்க வேண்டும்.

நடேசன் குமாரைச் சந்தித்துவிட்டுத் திரும்பிய பிறகு, 'நாற்பத்தி ஐந்து வயசுக்காரனான என்னை மூத்த மாப்பிள்ளையாக ஏற்றுக் கொள்ள உங்களுக்கு ஆட்சேபம் இல்லையே?' என்று கேட்க வேண்டும்.

அப்புறம்...

சிவகாமியைக் கனிவாய், அன்பாய் ஏறிட்டு, 'அழாதே, எதற்கும் கலங்காதே, அம்மா... இனி நான் இருக்கிறேன் உனக்கு, என்றென்றைக்கும்' என்று இதமாய் கூற வேண்டும்.

சிவகாமியின் முகம் மலராய் மலரும்!

செய்யவேண்டியவை என்னென்ன என்று புரிந்துபோக, லேசான மனசுடன், புன்சிரிப்பு ஒன்று உதட்டின் உட்பக்கத்தைக் கீற, மெதுவாய் நடந்து சமையல்கட்டில் நுழைந்து 'அம்மா...' என்று அழைத்தார் லோகநாதன்.

முற்றும்